# திட்டம்

## மாத இதழ்

மலர் 50 மார்ச் 2018

இதழ் 7 பால்குண - சைத்ர 1939



முதன்மை ஆசிரியர்

**தீபிகா கச்சல்**

முதுநிலை ஆசிரியர்

**சஞ்சய் கோஷ்**

இதழ் ஆக்கத்தில் உறுதுணை

**த. சித்தார்த்தன்**


கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துக்களும் அரசின் கருத்துக்களை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது.

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டங்களால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துக்களை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

**சந்தா விபரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 22.00 |
| சிறப்பிதழ் | ... | ரூ. 30.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ. 230.00 |
| இரண்டாண்டு | ... | ரூ. 430.00 |
| மூன்றாண்டு | ... | ரூ. 610.00 |

**சந்தா-வை DD மூலம் அனுப்ப வேண்டிய முகவரி :**


உதவி இயக்குநர்

**திட்டம்**

வெளியீட்டுப்பிரிவு

A Wing இராஜாஜி பவன்

பெசன்ட் நகர்

சென்னை -600 090

தொலைபேசி : 044-2491 7673


## உள்ளடக்கம்


- மத்திய பட்ஜெட் 2018-19 பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்லுதல் - ஹஷ்முக் ஆதியா
- மத்திய பட்ஜெட் 2018-19இல் விவசாயமும் விவசாயிகளும் - ஜே.பி.மிஸ்ரா
- பட்ஜெட்டும் உணவுப்பாதுகாப்பும் - எம்.எஸ்.சுவாமிநாதன்
- மத்திய பட்ஜெட் 2018-19 பகுப்பாய்வு - ஜே.டி.அகர்வால்
- வளரும் இந்தியாவில் முன்னேறத்துடிக்கும் மாவட்டங்கள் ஒரு வளர்ச்சிப்பயணம் - அமிதாப் கந்த்
- மத்திய பட்ஜெட் : குறு,சிறு,நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் - அனில் பரத்வாஜ்
- மத்திய பட்ஜெட் 2018-19 வாழ்வாதாரத்தை உருவாக்குதல் - ரஞ்ஜித் மேத்தா
- உடல்நலத்திற்கான ஊதுகுழலை பட்ஜெட் ஊதுகிறது - கே.ஸ்ரீநாத் ரெட்டி
- பட்ஜெட் மூலமாக உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் உள்ள சவால்கள் - ஜி. ரகுராம்
- பட்ஜெட்டில் கல்வித்துறைக்கான செயல்திட்டங்கள் - கிரன்பட்டிக்
- மூத்த குடிமக்களுக்கு : பட்ஜெட் எந்த அளவுக்குப் பயனுள்ளதாக இருக்கும்? - சுமதி குல்கர்னி
- பெண்களுக்கு அதிகாரம் அளித்தலும், நிதிநிலை அறிக்கையும் - ஷாஹின் ரசி
- மத்திய பட்ஜெட் : எளிதாகத் தொழில்செய்யும் முன்முயற்சிகளின் பொருளறிதல் - டானிஷ் ஏ.ஹாஷிம்
- இந்திய சுகாதாரத்துறைக்கு புதுமையான நிதிவழங்கல் - ரமேஷ் கே யாதவ்



Log on to **http://publicationsdivision.nic.in/**

*in collaboration with* **bharatkosh.gov.in**

## தலையங்கம்

# மக்கள் பட்ஜெட்

உங்கள் பணம் எங்கே செல்லவேண்டும் என்பதைக் கூறுவதுதான் பட்ஜெட்டே தவிர, அது போனது எங்கே என்று ஆச்சரியம் கொள்ள வைப்பது அல்ல.

வருகிற வருமானம் எவ்வளவு, ஆகும் செலவு எவ்வளவு என்று புரிந்துகொண்டு அதற்கேற்ப நாம் அனைவரும் வீட்டில் நமது செலவுகளை சரிசெய்துகொள்கிறோம். "வரவு எட்டணா, செலவு பத்தணா" என்ற பிரபலமான சொல்லாடலை நாம் அறிவோம். தனது வருமானத்திற்கு ஏற்றபடி செலவழிக்கும் திறனற்ற குடும்பங்கள் கட்டுப்பாடில்லாமல் வீணாகிவிடுகின்றன. பணச்செலவு கைமீறிப்போய்விடாமல் இருப்பதற்குத் திட்டமிடுவதுதான் பட்ஜெட் போடுவது என்பது.

ஒரு தேசத்தின் பட்ஜெட் தனது மக்களின் நலன்களை தீர்மானிக்கிற ஒன்று. பல்வேறு வழிகளில் இருந்தும் கிடைக்கும் வருவாயை அளவிட்டு, செலவினத்தை அதனோடு சரிகட்டிக்கொள்வதைத்தான் தேசத்தை நிர்வகிக்கும் விவேகமுள்ள நிர்வாகிகள் செய்கின்றனர். வீட்டு பட்ஜெட்டைப் போலவேதான் கல்வி, மருத்துவச் செலவுகள், அடிப்படைக் கட்டமைப்பைப் பராமரிப்பதற்கு ஆகும் செலவுகள் இவை போன்றவற்றிற்கு பணம் ஒதுக்கப்படுகிறது.

மத்திய பட்ஜெட் 2018-19 இந்த அரசாங்கத்தின், தேர்தலுக்கு முந்தைய கடைசி முழு பட்ஜெட் ஆகும். அரசாங்கம் தனது செயல்முறைகளைத் திட்டமிடுவதற்கு ஏற்றபடி ஒதுக்கீடுகளை சமன்செய்திட முயற்சித்திருக்கிறது. நெருக்கடி மிகுந்துள்ள பகுதிகளான விவசாயம், ஊரக வளர்ச்சி, உள்கட்டமைப்பு, வீட்டுவசதி, சுகாதாரம் ஆகியவற்றிற்கு நிதி ஒதுக்குவதில் அரசாங்கம் சமநிலையைப் பேணி இருக்கிறது.

விவசாயம் முக்கியமான தூணாக இன்னமும் இருக்கக்கூடிய ஒரு தேசத்தின் அரசாங்க நிகழ்ச்சிநிரலில் விவசாயிகளின் நலன் அதிகமான முக்கியத்துவத்தைப் பெறவேண்டும். விவசாயத்திற்கான ஒதுக்கீட்டில் விவசாய சீர்திருத்தத்திற்கு அரசாங்கம் முக்கியத்துவம் தந்திருக்கிறது. முன்னுதாரணமான மாற்றங்கள் பலவற்றை பட்ஜெட்டின் தெளிவான பல முன்முயற்சிகள் முன்னெடுத்திருக்கின்றன. தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலைகளில் காணப்படும் ஏற்ற இறக்கங்களை எதிர்கொள்ள பசுமை இயக்கம் (Operation Greens), கரீஃப் பருவப்பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை ஒன்றரை மடங்காக உயர்த்துவது, 22000 ஊரகச்சந்தைகளை கிராமிய வேளாண் சந்தைகளாக (GrAMs) தரம் உயர்த்துவது, விவசாயிகளுக்கு வேளாண்கடன் போன்றவற்றை உள்ளடக்கியதாக வேளாண் துறைக்கான ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

விவசாயிகளின் நலனைச் சார்ந்திருக்கும் ஊரகவளர்ச்சிக்கு பட்ஜெட்டில் பெருமைக்குரிய முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. ஊரக உள்கட்டமைப்புகளை உருவாக்குவது, ஊரகப்பகுதிகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவது ஆகியவற்றில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அனைவருக்கும் வீடு என்ற இலக்கை எட்டுவதற்கு, 2019க்குள் ஒரு கோடிக்கும் அதிகமான வீடுகளை ஊரகப்பகுதிகளில் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தவிர, தூய்மை பாரதத்திட்டத்தின் கீழ் கூடுதலாக இரண்டு கோடி கழிப்பறைகள் கட்டப்பட இருக்கின்றன. மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு உச்ச இலக்குகள், சௌபாக்கியா

ஆகியவை கீழ்த்தட்டு மத்திய வர்க்கத்தின் தேவைகளில் கவனம் செலுத்தக்கூடியவை. உணவு பதப்படுத்தும் தொழிலகங்களுக்கு சென்ற ஆண்டின் ஒதுக்கீட்டைக்காட்டிலும் இரண்டு மடங்காக ரூ.1400 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மீன்வளம், கால்நடைவளர்ப்பு, தேசிய மூங்கில் திட்டத்தின் மறுசீரமைப்பு ஆகியவை விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், ஊரகங்களில் தொழில்முனைவு வாய்ப்புகளுக்கும் அரசாங்கம் தந்துள்ள முக்கியத்துவங்கள் ஆகும்.

உடல்நலம் பேணல் பட்ஜெட்டில் கணிசமான கவனத்தைப் பெற்றுள்ளது. உடல் நலம் பேணும் உலகின் மிகப்பெரிய திட்டமாகக் கருதப்படும் தேசிய சுகாதாரப் பாதுகாப்புத்திட்டம் - National Health Protection Scheme (NHPS) சுகாதாரத்தை மையப்புள்ளியாகக் கொண்டுள்ளது. ஏழ்மையிலும், நலிந்தநிலையிலும் உள்ள 10 கோடி மக்களுக்கு ஆண்டுக்கு ஐந்து இலட்சம் ரூபாய் வரை மருத்துவக்காப்பீடு வழங்கும் திட்டம் இதுவாகும். இதனோடு கூட ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் மூலம் ஒன்றரை இலட்சம் சுகாதார, உடல்நல மையங்கள் 1200 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

மலைவாழ் மக்களுக்கு அவர்கள் வசிக்கும் இடங்களிலேயே தரமான கல்வி அளிப்பதற்கென ஏகலைவா மாதிரி உறைவிடப்பள்ளிகள் அமைப்பதற்கு அறிவிப்பு செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தகுந்த முயற்சியாகும். பிரதம மந்திரியின் ஆய்வுப்பங்காளர்கள் - Prime Minister’s Research Fellows (PMRF) என்ற திட்டம் பி.டெக் படித்திருக்கும் மிகச்சிறந்த 1000 மாணவர்கள் இந்திய தொழில்நுட்பக்கழகங்கள் (IITs), இந்திய அறிவியல் கழகங்கள் (IISc) ஆகியவற்றில் சேர்ந்து மிக அதிகமான உதவித்தொகையுடன் முனைவர் பட்ட ஆராய்ச்சி (Ph.D படிப்பு) மேற்கொள்வதற்கு வழி ஏற்படுத்தித் தந்திருக்கிறது.

மூத்த குடிமக்களின் கண்ணியமான வாழ்க்கைக்கு வழிசெய்யும் நோக்கில் பட்ஜெட்டில் அதிக எண்ணிக்கையிலான புதிய நடவடிக்கைகள் செய்யப்பட்டுள்ளன. வங்கிகளிலும், அஞ்சல் அலுவகங்களிலும் மூத்த குடிமக்கள் செய்திருக்கும் முதலீடுகளுக்குக் கிடைக்கும் வட்டித்தொகைக்கான வருமான வரி வரம்பு ரூ.10000த்திலிருந்து ரூ.50000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. வரிச் சலுகைக்காக சுகாதாரக்காப்பீடு பிரிமியத்தொகையைக் கழித்துக்கொள்வதும் அதிகரிக்கப்பட்டுள்ளது. மருத்துவச் செலவினங்களுக்கான வரிக்கழிவு ரூபாய் முப்பதாயிரத்திலிருந்து ரூபாய் ஐம்பதாயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. பிரதம மந்திதிரியின் வய வந்தன யோஜனா திட்டத்தில் அதிகபட்ச முதலீடு ரூ.15 இலட்சம் வரை 8% வட்டி அளிக்கப்படுகிறது. இதுவரை இதில் அதிகபட்ச முதலீட்டுத்தொகை ரூ.7.5 இலட்சமாக இருந்துவந்தது. இந்தத் திட்டத்தில் முதலீடு செய்வதற்கான கால அவகாசம் மார்ச் 2020 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் வளர்ச்சிக்கான இயந்திரங்கள் என்று வருணிக்கப்பட்டு அவற்றிற்கு கடன்உதவி, மூலதன, வட்டி மானியங்கள் தருவதற்கும், புதுமையாக்கங்களுக்கும் என ரூ.3794 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு பெருகும். சுயதொழில் முயற்சிகள் அதிகரிக்கும்.

குடிமக்களின் வாழ்க்கையை எளிதாக்குவதில் கவனம் செலுத்துவதன் மூலமாக எளிதாகத்தொழில் செய்வது என்பதை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. ஒட்டுமொத்தமாகப் பார்க்கும் போது இந்த பட்ஜெட், பொருளாதாரத்தின் அனைத்து முக்கியமான துறைகளிலும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கி அனைத்து மக்களின் வாழ்க்கையையும் தொட்டபடி பயணிக்கிறது.

**- ஆசிரியர்**

# மத்திய பட்ஜெட் 2018-19
# - பொருளாதாரத்தை முன்னெடுத்துச் செல்லுதல்

- ஹஷ்முக் ஆதியா

2018-19ஆம் ஆண்டுக்கான மத்திய நிதிநிலை அறிக்கை பல்வேறு வகைகளில் தனித்துவம் கொண்டதாகும். கடந்த இரண்டு ஆண்டுகளில் இந்திய அரசு மேற்கொண்ட பணமதிப்பிழப்பு நடவடிக்கை, பொருள்கள் மற்றும் சேவை வரி விதிப்பு அறிமுகம் ஆகிய இரு முக்கிய பொருளாதார சீர்திருத்தங்களின் சாதகமான பயன்களை இந்தியப் பொருளாதாரம் அனுபவித்துக்கொண்டிருக்கும் நிலையில், இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. பொருளாதார நடவடிக் கைகளின் அனைத்து காரணிகளும் வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கும் நிலையில், அதைப்பயன்படுத்தி இனிவரும் ஆண்டுகளில் எட்டு விழுக்காடு பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கு ஏற்ற பொருளாதாரச் சூழலைக் கட்டமைக்கும் நோக்குடன் இந்த நிதிநிலை அறிக்கை உருவாக்கப் பட்டிருக்கிறது.

மத்திய அரசின் இந்த நிதிநிலை அறிக்கை, மற்ற நிதிநிலை அறிக்கைகளில் இருந்து பல்வேறு வழிகளில் மாறுபட்டது ஆகும். வேளாண்மை மற்றும் ஊரகப் பொருளாதாரத்திற்காக அதிக தொகையை செலவழிப்பதன் மூலம் உழவர்களின் வருவாயை அதிகரிக்க உதவுவதுடன், பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான தேவையை அதிகரிப்பதுதான் இந்த நிதிநிலை அறிக்கையின் முக்கிய நோக்கமாகும். இதன் மூலம் தனியார் முதலீடுகள் மேம்படுத்தப்படும். இந்த நிதிநிலை அறிக்கையில் ஊரகக் கட்டமைப்பை உருவாக்குதல், ஊரக வேலைவாய்ப்பைப் பெருக்குதல் ஆகியவற்றுக்காகத்தான் அதிக நிதி செலவிடப் படவுள்ளது. ஊரக வாழ்வாதாரத் திட்டத்திற்கான நிதிஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சுயஉதவிக்குழுக்களுக்கு, குறிப்பாக மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு தொகுப்புநிதி மற்றும் வங்கிக்கடன் மூலம் உதவிகள் செய்யப்படும். உணவுப்பதனத் தொழில்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறைக்கான நிதிஒதுக்கீடும் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. வேளாண்மை சார்ந்த பிற செயல்பாடுகளை உருவாக்குவதற்கும், அதன் மூலம் முதன்மை வேளாண் விளைபொருட்களுக்கு மதிப்புக்கூட்டப்படுவதற்கும் இது பெருமளவில் உதவும். மூன்று முக்கிய வேளாண் விளைப்பொருட்களுக்கான - தக்காளி, வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் விலைகள் சீரற்றதாக இருப்பதைக் கருத்தில்கொண்டு, அப்பொருட்களுக்கு நல்லவிலை கொடுப்பதற்காக 'Operation Greens' (பசுங்காய்கறிகள் நடவடிக்கை) என்ற திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. பால் பண்ணைத் துறையின் முன்னேற்றத்திற்காக அறிவிக்கப்பட்டு சிறப்பாக செயல்படுத்தப்படும் 'Operation Flood' திட்டத்தைப் போன்று இந்தத் திட்டமும் செயல்படுத்தப்படும். பசுங்காய்கறிகளின் நடவடிக்கை திட்டத்திற்காக முதற்கட்டமாக ரூ.500 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதைக்கொண்டு காய்கறிகள் உற்பத்தி மையங்களும், நுகர்வு மையங்களும் முறையாக இணைக்கப்படும். இந்தக் காய்கறிகளை நுகர்வு மையங்களுக்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான தளவாடக் கட்டமைப்புகள் உருவாக்கப்படும். தேவைப்படும் இடங்களில் இந்தக் காய்கறிகளை இருப்பு வைப்பதற்கான கிடங்கு வசதிகளும், பதப்படுத்தும் வசதிகளும் ஏற்படுத்தப்படும். உழவர் உற்பத்தி அமைப்புகளின் உதவியுடன் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஆண்டுக்கு 100 கோடி வரை வருமானம் ஈட்டும் உழவர் உற்பத்தி நிறுவனங்களுக்கு வருமான வரி விலக்கு அளிக்கும் திட்டமும் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. உணவுப் பதனத்துறையில் தொழில்முறைத்தன்மையை இந்த அறிவிப்பு ஊக்குவிக்கும். ஊரகப்பொருளாதார வளர்ச்சிக்கான மத்திய அரசின் நிதிநிலை அறிவிப்புகளால் 321 கோடி

மனித நாள்கள் வேலைவாய்ப்பு ஏற்படுத்தப்படும். அதுமட்டுமின்றி, இந்தத்திட்டத்தின் மூலம் 51 இலட்சம் புதிய ஊரக வீடுகள், 1.88 கோடி கழிப்பறைகள், 3.17 இலட்சம் கிலோமீட்டர் நீளத்திற்கு ஊரகச்சாலைகள் ஆகியவையும் ஏற்படுத்தப்படும். அத்துடன் 1.75 கோடி வீடுகளுக்கு புதிய மின் இணைப்பு வழங்கப்படும். இதற்கெல்லாம் மேலாக, வேளாண்துறை வளர்ச்சிக்கும் இது உத்வேகம் அளிக்கும்.

2018-19ஆம் ஆண்டுக்கான மத்திய நிதிநிலை அறிக்கையில் இரண்டாவது முக்கிய அம்சம் என்னவென்றால், சுகாதாரம், கல்வி மற்றும் பிற சமூகப்பாதுகாப்புத் திட்டங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள முக்கியத்துவம் ஆகும். கல்வித்தரத்தை மேம்படுத்துவது, ஆசிரியர்களின் தரத்தை அதிகரிப்பது, கூடுதல் கற்றலுக்காக டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது ஆகியவற்றில் கல்வித்துறை சார்ந்த அறிவிப்புகள் கவனம் செலுத்துகின்றன. உயர்கல்வித்துறையைப் பொறுத்தவரை அடுத்த நான்கு ஆண்டுகளில் ஒரு இலட்சம் கோடி மூலதனச்செலவு செய்வதன் மூலம் எய்ம்ஸ் போன்ற உயர்கல்வி நிறுவனங்களை அமைப்பதற்கான இலட்சியத்திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மூலதனச் செலவுகள் அனைத்தும் நிதிநிலைஅறிக்கை ஒதுக்கீடுகளுக்கு அப்பால் செயல்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

சுகாதாரத்துறையைப் பொறுத்தவரை ஆரோக்கியமான இந்தியா என்ற இலட்சியத்திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார கவனிப்புகளுக்கான நல மையத்திட்டம், ஒவ்வொரு ஏழைக்குடும்பத்திற்கும் ஒவ்வொரு ஆண்டும் ரூ.5 இலட்சத்திற்கான முதன்மை மற்றும் இரண்டாம் நிலை நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான மருத்துவக் காப்பீட்டுத்திட்டம் ஆகியவை ஆரோக்கியமான இந்தியா திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். இந்தத்திட்டத்தால் மொத்தம் 10 கோடி குடும்பங்கள், அதாவது 50 கோடி மக்கள் பயனடைவார்கள். இந்தக்குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட நோய்களுக்காக அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் ரூ.5 இலட்சம் வரை செலவு பிடிக்கக்கூடிய அறுவை சிகிச்சைகள் உள்ளிட்ட மருத்துவ கவனிப்புகளை ஒரு பைசா கூட செலவில்லாமல் செய்துகொள்ளலாம். புற்றுநோய், இதயநோய்கள், சிறுநீரகபாதிப்பு போன்ற கடுமையான நோய்களால் ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த எவரேனும் பாதிக்கப்பட்டால், அவர்களுக்கான மருத்துவச்செலவுகளை அரசே ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையை ஏழை எளிய மக்களிடம் இத்திட்டம் விதைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான கருவிகளாகத் திகழும் சிறு மற்றும் நடுத்தர தொழில்துறையினருக்கு உதவும் நோக்குடன் பல திட்டங்கள் 2018-19ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளன. இத்தகைய தொழிற்சாலைகளில் ஏதேனும் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டால், அவற்றிற்கான 12 விழுக்காடு ஊதியத்தை மத்திய அரசு வழங்கும். புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கும்போது, அதற்காக ஆகும் செலவில் 30 விழுக்காட்டிற்கு வருமான வரி விலக்களிக்க ஏற்கெனவே வகை செய்யப்பட்டுள்ள நிலையில், அத்துடன் கூடுதலாக இந்தச்சலுகையும் வழங்கப்படுகிறது. ஜவுளி மற்றும் தோல்பொருள் துறைகளின் முன்னேற்றத்திற்கு இந்த நிதிநிலை அறிக்கையில் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. உள்கட்டமைப்பு மேம்பாட்டைப் பொறுத்தவரை ஏற்கெனவே உள்ள சாலைகள் மற்றும் புதிய சாலைகள், தொடர்வண்டிப்பாதைகள் மற்றும் நகர்ப்புறக் கட்டமைப்புத்திட்டங்களுக்கு கூடுதல் நிதிநிலை ஆதாரங்கள் மற்றும் கடன் மூலம் நிதியுதவி செய்யும் இலட்சியத்திட்டத்தை இந்த நிதிநிலைஅறிக்கை அறிவித்திருக்கிறது. 2017-18ஆம் ஆண்டில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக்காக ரூ.4.94 இலட்சம் கோடி செலவிடப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ள நிலையில், 2018-19ஆம் ஆண்டில் கட்டமைப்பு மேம்பாட்டிற்காக செலவிடப்படும் தொகையின் அளவு 5.97 இலட்சம் கோடியாக உயர்த்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பொருள்கள் மற்றும் சேவைவரி விதிப்பு நடைமுறைப்படுத்தப்படுவதால் ஏற்படும் தொடக்ககால இழப்புகளை அரசே ஏற்றுக்கொள்ளுதல், மறை முகவரிகள் தரப்பில் எவ்வளவு வருவாய் கிடைக்கும்

பட்ஜெட் 2018-19

## பட்ஜெட் தொகைகள்



| தொகைகள் ரூ. கோடியில் | 2016-17 உண்மை நிலவரம் | 2017-18 பட்ஜெட் மதிப்பீடு | 2017-18 திருத்தப்பட்ட மதிப்பீடு | **2018-19** பட்ஜெட் மதிப்பீடு |
|---|---|---|---|---|
| வருவாய் வரவுகள் | 13,74,203 | 15,15,771 | 15,05,428 | 17,25,738 |
| மூலதன வரவுகள்* | 6,00,991 | 6,30,964 | 7,12,322 | 7,16,475 |
| மொத்த வரவுகள் | 19,75,194 | 21,46,735 | 22,17,750 | 24,42,213 |
| மொத்த செலவுகள் | 19,75,194 | 21,46,735 | 22,17,750 | 24,42,213 |
| வருவாய்ப் பற்றாக்குறை | 3,16,381 | 3,21,163 | 4,38,877 | 4,16,034 |
| வருவாய்ப் பற்றாக்குறை விளைவு | 1,50,648 | 1,25,813 | 2,49,632 | 2,20,689 |
| வருவாய்ப் பற்றாக்குறை | 5,35,618 | 5,46,531 | 5,94,849 | 6,24,276 |
| முதன்மை பற்றாக்குறை | 54,904 | 23,453 | 64,006 | 48,481 |

* சந்தை உறுதிப்படுத்துதல் திட்டத்தின் கீழ் வந்துள்ள வருவாயைத் தவிர்த்தது

PIB/KBK

என்பது குறித்த நிச்சயமற்ற நிலை ஆகிய பாதிப்புகள் இருக்கும் போதிலும், நிதிநிலையை திடமாக்குவதற்கான வலிமையான செயல்திட்டத்தை மத்திய அரசு வகுத்திருக்கிறது. 2017-18ஆம் ஆண்டிற்கான நிதிப்பற்றாக்குறை 3.2 விழுக்காட்டிலிருந்து 3.5 விழுக்காடாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. 2018-19ஆம் ஆண்டில் நிதிப் பற்றாக்குறையின் அளவு நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் 3.3 விழுக்காடாக இருக்கும். அடுத்து வரும் இரு ஆண்டுகளில் (சாத்தியமானால் ஒரே ஆண்டில்) நிதிப்பற்றாக் குறையை மூன்று விழுக்காடு என்ற அளவுக்கு குறைக்க திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. பண மதிப்பிழப்பு மற்றும் ஜிஎஸ்டி அறிமுகத்தால் விளையக்கூடிய நற்பயன்கள் காரணமாக, அடுத்த ஆண்டுக்கான வருவாய் இலக்கை மிஞ்சும் வகையில் வருமானம் கிடைக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அவ்வாறு நடந்தால் அரசுத் திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்ய கூடுதல் நிதி கிடைக்கும்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இது வளர்ச்சிக்கான நிதிநிலை அறிக்கையாகும். இது ஊரகப் பொருளாதாரத்திற்கு புத்துணர்வூட்டும் நிதிநிலை அறிக்கையாகும். இது புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கான நிதிநிலை அறிக்கையுமாகும்.

- **முனைவர் ஹஷ்முக் ஆதியா**, நிதித்துறை செயலாளர், இந்திய அரசு

●

# மத்திய பட்ஜெட் 2018-19இல் விவசாயமும் விவசாயிகளும்: நீடித்த - அனைவரையும் உள்ளடக்கிய புத்தாக்கமான அம்சங்கள்

- ஜெ.பி.மிஸ்ரா, ஷிவாலிக்கா குப்தா

கூட்டுமுயற்சி அனைவரையும் உள்ளடக்கிய முயற்சி என்பதற்கான ஒரு உதாரண முயற்சியாக மத்திய பட்ஜெட் 2018-19 அமைந்துள்ளது. வேளாண் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு பட்ஜெட் தனது முழு கவனத்தையும் செலுத்தியுள்ளது. அனைவரையும் உள்ளடக்குதல், புத்தாக்கங்கள், வழக்கமான முறையில் இருந்து மாறுபட்டு புதுமையான முறையில் முன்மாதிரியான நடவடிக்கைகளைத் தொடங்குதல் ஆகிய அம்சங்கள் பட்ஜெட்டில் பொருத்தமாக இணைக்கப்பட்டுள்ளன. பட்ஜெட்டில் உற்பத்தியைவிட வருமானத்துக்கே முக்கியத்துவம் தரப்படுகிறது. தீவிரமான உள்ளீட்டு விவசாயத்துக்கான வெளிப்படையான தேர்வாக இது இருக்கிறது. இதுவரை உணவுப்பற்றாக்குறை உள்ள நாடாக இருந்த நிலையை மாற்றி உபரி உணவுஉற்பத்தி நிலையை அடைந்திருந்தாலும், நிகர ஏற்றுமதியாளராக வளர்ந்திருந்தாலும், தொழில்நுட்பத்தின் முக்கிய பலாபலன்கள் குறிப்பிட்ட நிலப்பகுதிகளுக்கு மட்டுமே கிடைத்துள்ளன. வருடத்தின் அனைத்து காலாண்டுகளிலும் போதுமான தண்ணீர் வசதி கிடைக்காமல் துன்புறும் நிலப்பகுதிகள் மிகவும் பின் தங்கியே உள்ளன. விவசாய நிலத்தின் அளவு குறைந்து வருதல், மூலவளங்களின் பற்றாக்குறை, வேளாண் உள்ளீட்டுப்பொருள்களின் செலவுஅதிகரிப்பு, விவசாயத் தொழிலாளர்களுக்கான செலவுஅதிகரிப்பு ஆகியன விவசாயத்தில் இருந்து கிடைக்கும் நிகரலாபத்தைக் குறைக்கின்றன. வரும் 2022ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரண்டு மடங்காக அதிகரிக்கவேண்டும் என்ற மாண்புமிகு பிரதம மந்திரியின் அறிவிப்பு இந்த பட்ஜெட்டில் சரியான கண்ணோட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. செயல் உத்தியானது விவசாயிகளின் நல்வாழ்வை உயர்த்துதல் மற்றும் விவசாயிகளின் துயரை நீக்குதல் ஆகியவற்றை மையமாகக் கொண்டுள்ளது. “உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதல்” ஆகியன உள்ளிட்ட விரிவான அணுகுமுறை முன்வைக்கப்படுகிறது. சந்தை உள்கட்டமைப்பு வசதிகள், பதப்படுத்துதல், மதிப்புக் கூட்டுதல், வேளாண் வர்த்தகம், பன்முகத்தன்மை ஆகியவற்றில் அதிக முதலீடுகளைச் செய்வதன் மூலம் இந்த அணுகுமுறை நடைமுறைப்படுத்தப்படும். விவசாயிகள் நல்வாழ்வுக்கான பூர்வாங்க நடவடிக்கைகளோடு இணைந்தே இவை மேற்கொள்ளப்படும்.

## அதிக பட்ஜெட் ஒதுக்கீடு

இந்தியாவில் நெடுங்காலமாக புறக்கணிக்கப்பட்ட விவசாயத்தின் பராக்கிரமம் 2018-19ஆம் நிதி ஆண்டுக்கான நிதிமந்திரியின் பட்ஜெட் உரையில் மிகவும் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது. பிப்ரவரி 1, 2018இல் தாக்கல் செய்யப்பட்ட நிதிஅறிக்கை விவசாயிகளின் துயரத்தின் மீது பல பரிமாணங்களில் கவனம் செலுத்தும் தைரியமான முடிவுகளைக் கொண்டுள்ளது. புத்தாக்கங்கள், வருமானம், முதலீடு மற்றும் ஊரக உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தி அனைவரையும் உள்ளடக்குதல் என்ற அம்சத்தின் மீது பட்ஜெட்டானது நங்கூரம் பாய்ச்சி நிற்கிறது. 2018-19ஆம் நிதிஆண்டுக்கான பட்ஜெட் உரையில், விவசாயம் மற்றும் அது சார்ந்த துறைகளுக்கான நிதிஒதுக்கீட்டு உயர்வு சுமார் 15 சதவிகிதம் மட்டுமே என்பது சற்றே குறைவானது போன்று தோன்றலாம். ஆனால் துறைக்குள் முன்வைக்கப்படும் முன்னுரிமைகள் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன. விவசாயிகள் எதிர்கொள்ளும் இடர் காரணிகளை நீக்குவதற்கு அரசு விரும்புகிறது. பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத்திட்டத்துக்கு முந்தைய ஆண்டைவிட இந்த ஆண்டு 22 சதவிகிதம் அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இயற்கை விவசாய விளைபொருட்களுக்கு மதிப்புக்கூட்டல் செய்யும் சங்கிலித்தொடர் செயல்கள், அதிக மதிப்புள்ள விளைபொருள்கள், முக்கியமான வேளாண் உள்ளீட்டுப் பொருள்கள் மற்றும் சேவைகளுக்கு அதிக நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விவசாயிகளையும் விவசாயத்தையும் அரசாங்கம் முக்கியமான ஒன்றாக நினைப்பதற்கு சான்றாதாரமாக

விவசாயத்துக்கான கடனைக்கூறலாம். தேவையின் அடிப்படையில் விதைக்கான ஒதுக்கீடு செய்யப்படுகிறது. திருத்தப்பட்ட பட்ஜெட் மதிப்பீட்டின் அடிப்படையில் இந்த ஒதுக்கீடு ஒவ்வொரு வருடமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. பதப்படுத்துதல் மற்றும் மதிப்பு கூட்டல் ஆகிய இரு பிரிவுகளும் உரிய கவனம் பெறாமல் இருந்தன. ஆனால் இந்த ஆண்டுக்கான பட்ஜெட்டில் இவற்றுக்கு அதிகஅளவில் முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. உணவுப்பதப் படுத்துதல் தொழில் அமைச்சகத்துக்கான ஒதுக்கீடு 201718ஆம் ஆண்டின் பட்ஜெட் ஒதுக்கீட்டைவிட சுமார் 100 சதவிகிதம் அதிகரித்துள்ளது. (அட்டவணை1)

| அட்டவணை 1: வேளாண் அமைச்சகம் மற்றும் உணவுப்பதப்படுத்துதல் தொழில் அமைச்சகம் ஆகியவற்றுக்கான பட்ஜெட் ஒதுக்கீடு அதிகரிப்பு | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | துறை / அமைச்சகம் | 2016-17 | 2017-18 | 2018-19 | மாற்றம் சதவீததத்தில் |
| 1 | வேளாண் அமைச்சகம் | 44,500 | 50,264 | 57,600 | 15% |
| 1.1 | வேளாண்மை, கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நல்வாழ்வுத் துறை (DACFW) | 36,912 | 41,105 | 46,700 | 14% |
| 1.2 | கால்நடை, பால்வளம் மற்றும் மீன் வளத்துறை (DAHDF) | 1,858 | 2,167 | 3,100 | 43% |
| 1.3 | வேளாண் ஆராய்ச்சி மற்றும் கல்வித் துறை (DARE) | 5,729 | 6,992 | 7,800 | 12% |
| 2 | உணவு பதப்படுத்துதல் தொழில்கள் அமைச்சகம் | 713 | 715 | 1,400 | 96% |

2016-17ஆம் ஆண்டுக்கான உண்மையான செலவினம், 2017-18ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட பட்ஜெட் மதிப்புகள், 2018-19ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் ஒதுக்கீடு ஆகியவற்றை ஒப்பிட்டுப்பார்த்தால், அரசு தனது முன்னுரிமைகளாக எவற்றை நிர்ணயித்துவருகிறது என்ற போக்கு நமக்குத் தெரியவரும். இந்திய விவசாயத்தில் முக்கியமான பிரிவுகள் அனைத்துக்கும் அதிக அளவிலான பட்ஜெட் ஒதுக்கீடுகள் (அட்டவணை2) வழங்கப்பட்டுள்ளன. இந்தத் தொடர் செயல்கள் அனைவரையும் உள்ளடக்குதல் என்பதன் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. 2018-19ஆம் ஆண்டின் மத்திய பட்ஜெட்டில் எடுக்கப்பட உள்ள நடவடிக்கைகள் குறித்து அதிரடியான அறிவிப்புகளும் உள்ளன. புதியதாக எடுக்கப்பட உள்ள தெளிவான பூர்வாங்க நடவடிக்கைகள் விவசாயப்பிரிவை இதுவரை பார்த்துவந்த மரபான அணுகுமுறையில் இருந்து மடைமாற்றம் செய்து புதுவிதமாக அணுகச்செய்பவையாக உள்ளன. இந்த மாற்றத்தைச்செய்யும் போதே விவசாயிகளுக்குக் கிடைக்கக் கூடிய வருமானத்தைப் பெறுவதற்கு அவர்களுக்குத் தடையாக இருக்கும் முக்கியமான அம்சங்களையும் அரசு அடையாளம் கண்டுள்ளது.

**அட்டவணை 2:**

| அட்டவணை 2: வேளாண் மற்றும் வேளாண் வர்த்தகத்தில் முக்கியமான பிரிவுகளுக்கு விரிவான கவனம் | | | | | |
|---|---|---|---|---|---|
| முன்னுரிமைப் பிரிவு | இந்திய அரசு திட்டம் | 2016-17 | 2017-18 | 2018-19 | மாற்றம் சதவீததத்தில் |
| இடர் மேலாண்மை | பிரதமரின் ஃபசல் பீமா திட்டம் | 11,051.00 | 10,699.00 | 13,000.00 | 22% |
| இயற்கை விவசாயம் | வடகிழக்கு பிராந்தியத்துக்கான ஆர்கானிக் மதிப்புக் கூட்டல் தொடர் செயல் அபிவிருத்தி | 48.20 | 100 | 160 | 60% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அதிக மதிப்புள்ள விளைபொருட்கள் | தோட்டக்கலை அபிவிருத்திக்கான இயக்கம் | 1,493.07 | 2,190.00 | 2536 | 16% |
| தரமான உள்ளீட்டுப் பொருட்கள் மற்றும் டி.ஓ.டி | விதை மற்றும் பயிரிடுதல் | 167.85 | 480.00 | 332.00 | 31% |
| | பயிர் பாதுகாப்பு | 137.86 | 62.66 | 129.25 | 106% |
| | வேளாண் விரிவாக்கம் | 590.46 | 821.00 | 1,020.00 | 24% |
| | விவசாய வேலைகளை இயந்திரமயமாக்குதல் | 366.93 | 776.71 | 1,165.29 | 50% |
| நீர் வளத்துக்கான முதலீடு | PMKSY- HarKhetkoPani | 439.8 | 1888 | 2600 | 79% |
| | PMKSY -Per Drop More Crop - ஒரு துளி நீரில் கூடுதல் பயிர் | 1991.25 | 3000 | 4000 | 33% |
| விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் | விவசாயிகளுக்கான வேளாண் கடன் | 900000 | 1000000 | 1100000 | 10% |
| வெண்மைப் புரட்சி | கால்நடை வளர்ப்பு இயக்கம், LHDC | 1309.16 | 1632.97 | 2219.89 | 36% |
| நீலப் புரட்சி | மீன்பிடித் தொழிலுக்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தி | 387.81 | 301.73 | 642.61 | 113% |
| பதப்படுத்துதல் - மதிப்பு கூட்டல் | பிரதமரின் கிஸான் சம்பதா திட்டம் (PM Kisan Sampada Yojana) | | | 1313.08 | |


### முன்மாதிரி மாற்றம்: விரிவாக்கப்பட்ட நோக்க எல்லை மற்றும் இயங்குமுறை

வேளாண்பிரிவுக்குள்ளேயே மிகப்பெரிய பாகுபாடுகள் உள்ளன. 2011இல் எடுக்கப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பானது சுமார் 55 சதவிகித விவசாயிகள் விவசாயத்தொழிலாளர்களாக உள்ளனர் எனக்கூறுகிறது. SECC 2011 தரவானது 56.4 சதவிகித கிராமப்புற குடும்பத்தினர் நிலமற்றவர்களாக உள்ளனர் எனக்கணக்கிட்டுள்ளது. குறைந்தபட்சம் 16.44 மில்லியன் தொழிலாளர்கள் தங்களது வாழ்வாதாரத்துக்கு கால்நடைவளர்ப்பு மற்றும் மீன் பிடிப்புத் தொழில் ஆகியவற்றைச் சார்ந்துள்ளனர். மத்திய பட்ஜெட் 2018-19இல் முன் வைக்கப்பட்டுள்ள கொள்கைசார் முடிவுகள் நாட்டின் விவசாயநிலவரத்தின் மீது நீண்ட காலத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தும். இதற்குக்காரணம் அனைவரையும் உள்ளடக்கும் தன்மை இருப்பதாகும். பட்ஜெட் விவசாயத்தை ஒரு தொழிலாக வெளிப்படையாக அங்கீகரிக்கிறது. அரசாங்கத்திட்டங்களின் பலன்களைப் பெற்றுக்கொள்கின்ற செயலூக்கம் இல்லாத விவசாயிகள் என்ற அணுகுமுறையில் இருந்து விவசாயிகளுக்கு அதிகாரம்அளித்தல் என்ற அணுகுமுறைக்கு மாறுவது வரலாற்று முக்கியத்துவம் கொண்டதாகும். இதைத் திறம்படச் செயல்படுத்த மூலவளங்கள் நியாயப்படி பயன்படுத்தப்படவேண்டும். அதாவது விவசாயம் என்ற பிரிவுக்குள்ளேயே இருக்கின்ற பல பங்குதாரர்களுக்கும் மூலவளம் பரவலாகக் கிடைக்கச்செய்யவேண்டும். இந்தப் பிரிவில் சிறு மற்றும் விளிம்பு நிலை விவசாயிகள், மீன்வள விவசாயிகள், கால்நடைவளர்ப்போர் எனப்

பலரும் அடங்குவர். மேலும் உணவுப்பதப்படுத்துதலும் இதில் உள்ளடங்கும். ஊரக இணைப்பு என்பது விவசாயிகளை அங்கீகரித்து அவர்களை பெரும்போக்கோடு இணைக்கும் செயலை மேற்கொள்வதோடு, வழக்கமான முறையை மீறி குத்தகைக்குப்பயிரிடுவோர், கால்நடைவளர்ப்போர், பண்ணைக்கடன் திட்டத்தின் கீழ் கடன்பெற்று சிறிய அளவில் மீன்வளர்ப்போர் ஆகியோரையும் இது உள்ளடக்குகிறது. இந்த ஒரே ஒரு பிரிவே நாட்டின் தொழிலாளர் சக்தியில் 50 சதவிகிதத்துக்கும் மேல் உள்ளவர்களால் ஆனது என்பதே இதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டிவிடுகிறது என்று கூறலாம். ஊரக வாழ்வின் வளத்துக்கு முக்கிய அடித்தளமாக விவசாயம் சார்ந்த தொழில்கள் பிரிவு இருக்கிறது. ஏனெனில் 70 சதவிகிதம் இந்தியர் இப்பொழுதும் கிராமங்களில்தான் வசிக்கின்றனர்.

விவசாயஉற்பத்தி / உற்பத்தித்திறன் என்ற சொல்லாடலில் இருந்து மாறி நிதிஅனுமதி மூலமாக விவசாயிகளின் வருவாயை இரட்டிப்பாக்குதல் என்று அரசு இப்போது பேச ஆரம்பித்துள்ளது. தெளிவான, செயல்வடிவம் தரக்கூடிய வரைபடத்துடன் வருமானத்தை உள்ளடக்கிய கண்ணோட்டம் இப்போது உள்ளது. விவசாய உற்பத்தி என்பதில் இருந்து வருவாய்ப்பாதுகாப்பு என்ற மாற்றம் முதற்கொண்டு, வாழ்வாதார உருவாக்கத்துக்கு ஏற்படும் அறுவடைக்குப் பின்னான சவால்கள் வரை கடந்த 3 ஆண்டுகளில் விவசாயம் சார்ந்த தொழில்பிரிவுகள் பரிணாம மாற்றத்தைச் சந்தித்துள்ளன. இந்த முறைமைச் சட்டகம் எப்படி உருவானது என்பதற்கான தர்க்கவிளக்கம் உள்ளது. கடந்த மூன்று பட்ஜெட்டுகளிலும் வருவாய் பாதுகாப்பு என்பது திரும்பத்திரும்பச் சொல்லப்பட்டே உள்ளது. தற்போதைய அரசு பதவி ஏற்றதில் இருந்து அதன் இரண்டாம் ஆண்டில் விவசாயிகளின் பொருளாதார நிலையை உறுதிசெய்வதற்கு உதவக்கூடிய பிரதமமந்திரி பயிர் காப்பீட்டுத்திட்டமானது அறிமுகப்படுத்தப்பட்டது. அத்திட்டத்தில் இப்போது 26.50 சதவிகிதம் விவசாயிகள் உள்ளடக்கப் பட்டுள்ளனர். ஆனால் காரீஃப் 2017 பருவத்தில் இந்தத்திட்டத்தின் கீழ் உள்ள விவசாயிகளில் கடன் வாங்காத விவசாயிகளின் எண்ணிக்கை 6 மடங்காக அதிகரித்துள்ளது. விவசாயத்தில் நீடித்த தன்மையை நிலைநாட்ட நுண்நீர்ப்பாசனம், மண்வளம் மற்றும் இயற்கை விவசாயத்துக்கான புதிய நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. எத்தனை பேருக்கு தரப்பட்டுள்ளது என்ற கணக்கைவிட எத்தனை பேருக்கு பயன்பட்டுள்ளது எனப் பார்த்துப் பேசும் சொல்லாடல் மண்வள அட்டையைப் பொறுத்து இப்போது உருவாகிள்ளது. இதுவரை அரசால் 11.5 கோடி மண்வள அட்டைகள் விநியோகிக்கப்பட்டு உள்ளன. இதுவரை இதேசிய விவசாயச்சந்தை மேடையில் 470 சந்தைகள் இணைப்பு பெற்றுள்ளன. இதற்கு முந்தைய பட்ஜெட்டுகளிலும் கால்நடைவளர்ப்புப் பிரிவுக்கு உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தித்தரப்படும் எனச் சொல்லப்பட்டுள்ளது. ஊரகக்குடியிருப்புகளை அணுகுவதற்கு முறையான சாலை வலைப்பின்னல் அமைப்பை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. அதே போன்று விவசாயச்சந்தைகளை அணுகுவதற்கும் சாலை வசதி மேம்படுத்தப்பட உள்ளது.


**படம் 1: மாநில வாரியாக குத்தகைக்கு தரப்பட்டுள்ள நிலம்**




## அனைவரையும் உள்ளடக்குதல்: கவனம் பெறாத மக்கள் மீது கவனம் செலுத்துதல்

2004ஆம் ஆண்டு முதல் விவசாயத்துக்கான பட்ஜெட்டில் நிறுவனக்கடன் அளவானது தொடர்ந்து அதிகரித்துவந்தது. இதனால் விவசாயம் செய்வதற்கான கடன்கிடைத்தல் மற்றும் பணப்புழக்க இடைவெளி பெரிதும் நிரப்பப்பட்டது. எனினும் இதில் மண்டல வித்தியாசங்களும் முன்னுரிமைகளில் வேறுபாடுகளும் இருக்கின்றன. 2018-19ஆம் ஆண்டின் விவசாயக்கடனுக்கான இலக்கு ரூ.11 இலட்சம் கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த

ஒதுக்கீடு விவசாயத்தில் நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்படும் தனியார் முதலீட்டை ஊக்கப்படுத்தும். அதே போன்று பண்ணை அளவில் உற்பத்தித்திறனையும் அதிகரிக்கும். ஆனால், இந்தக்கடன் உதவியானது இதுநாள் வரை நிலஉரிமையாளர்களுக்கு மட்டுமே கிடைத்துவந்தது. குத்தகை அடிப்படையில் பயிர் செய்பவர்களுக்கு வங்கிக் கடன் கிடைக்க AP உரிமம் தேவைப்படுவது போன்று இந்த நிறுவனக்கடன் பெற ஏதாவது ஒரு உரிமத்தைத் தர வேண்டி இருந்தது. இந்த ஏற்பாடு நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்கின்ற விவசாயிகளில் பலருக்கும் கடன் கிடைப்பதில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது. நாட்டில் எத்தனை பேர் குத்தகை விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர் எனக் கணக்கிடுவது சிரமமான செயலாகும். ஏனெனில் குத்தகை விவசாயம் என்பது அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்படுவது இல்லை என்றாலும் செய்யப்பட்ட கணக்கீடுகள் குத்தகை விவசாயிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதாகச் சொல்கின்றன. இதில் மூன்றில் ஒரு பங்குக்கும் அதிகமானோர் நிலம் அற்றவர்கள் ஆவர். சுமார் 56 சதவிகிதம் பேர் மிகவும் சிறிய அளவு நிலத்துக்கே சொந்தக்காரர்கள் ஆவர். பல்வேறு NSSO கணக்கெடுப்புகள் கடந்த ஆண்டுகளில் குத்தகை விவசாயிகளின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்து இருப்பதாகக் கூறுகின்றன. இத்தகைய குத்தகைவிவசாயிகள் சில மாநிலங்களில் மொத்த விவசாய நிலத்தில் 25 சதவிகிதத்துக்கும் அதிகமான நிலத்தில் பயிரிடுகின்றார்கள் (படம் 1). இன்னொரு ஆர்வமூட்டும் விஷயம் என்னவென்றால், குத்தகை மூலமாக மட்டுமே நிலத்தைப்பெறுபவர்கள் (குத்தகை ஒப்பந்தம் மூலமே நிலத்தை எடுத்துக்கொள்ளும்



படம் 2: மொத்த குத்தகை நிலத்தில் வாடகைதாரர் எடுத்துள்ள குத்தகை நிலத்தின் பங்கு

நிலமற்ற குடும்பத்தினர்) எண்ணிக்கை 1991இல் இருந்ததோடு ஒப்பிட 2.5 மடங்கு அதிகரித்துள்ளது (1991இல் இவர்களின் எண்ணிக்கை 12.1 சதவிகிதம் ஆகும். இது 2012-13 இல் 30 சதவிகிதமாக அதிகரித்துள்ளது). சில மாநிலங்களில் இந்த எண்ணிக்கை 2003ஆம் ஆண்டுக்கும் 2013ஆம் ஆண்டுக்கும் இடையில் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது (படம் 2). இந்த நிலமில்லாத குத்தகைப் பயிர்தாரர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிப்பு என்பது உணவுப் பாதுகாப்பை அடைவதில் நிலமற்ற குடும்பத்தாரின் பங்கை எடுத்துக்காட்டுகிறது. ஆனால் கடன்பெறவோ, நிவாரணம் பெறவோ அல்லது அரசு நலத்திட்டங்களைப் பெறவோ இவர்களால் முடியாது. இந்த நிலைமையில் செயலூக்கமாகவும் அதிக எண்ணிக்கையிலும் இருக்கும் இந்த விவசாயிகளுக்கும் நிறுவனக்கடன் கிடைக்க வழி வகை செய்தாகவேண்டும். கடன்வசதி பெறுவதற்கு குத்தகைத்தாரர்களையும் சேர்த்துக்கொள்வதாக 2018-19ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் அறிவித்துள்ளது.

நிதி ஆயோக் இந்த குத்தகை விவசாயிகளையும் பெரும்போக்கில் இணைத்துக்கொள்வதற்கான புதிய அணுகுமுறைகளைக் கண்டறியவேண்டும் என்பதைக் கட்டாயமாக்கியுள்ளது. குத்தகை விவசாயிகளின் பொருளாதார நிலைமை மேம்படவும் சமூக அந்தஸ்து உயரவும் பயிர்க்கடன்களைப் பெறக்கூடிய வழிமுறைகைளை உருவாக்கி அவர்களை வலுப்படுத்த வேண்டும் என்றும் நிதிஆயோக் கூறியுள்ளது. குத்தகைக்கு விவசாயம் பார்ப்பதோடு அவர்களுக்கு இதர பண்ணை, பண்ணைசாராத, பண்ணைக்கு வெளியே என அனைத்து இடத்திலும் வேலைவாய்ப்பு வசதிகளைப்பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும். மத்திய பட்ஜெட் 2018-19இல் உள்ள குறிப்பிடத்தக்க மற்றொரு புத்தாக்க நடவடிக்கை என்னவென்றால் விவசாயத்தை அதன் முழுமையைக் கணக்கில் கொண்டு பார்ப்பதுவே ஆகும். கிசான் கடன்அட்டைத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்குப் பயிர்க்கடன் தரும் அதே முறையில் மீன் பிடிப்பு மற்றும் கால்நடைவளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும் கடன் தரும் முறை விரிவுபடுத்தப்பட்டுள்ளது. கால்நடை, பால்வளம் மற்றும் மீன்பிடிப்பு ஆகியன விவசாய GVAயில் ஏறத்தாழ 27 சதவிகிதம் பங்களிப்பு செய்கின்றன. சிறு, விளிம்புநிலை மற்றும் நிலமற்ற விவசாயக்குடும்பத்தாரின் அந்தஸ்து நிலைமையில்

இது நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும் வாய்ப்பைக்கொண்டுள்ளது. கால்நடைவளர்ப்பு, பால்வளம் மற்றும் மீன்பிடிப்புத் துறைக்கான ஒதுக்கீடு 31 சதவிகிதம் அதிகரித்துள்ளது என்பது இந்தப்பிரிவுக்கான முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத்துறைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கு அதிகம் தேவைப்படும் அரசு முதலீடுகள் இனி இரண்டு புதியநிதியங்கள் மூலம் விநியோகிக்கப்படும். இதற்கான கூட்டு மொத்ததொகை ரூ.10,000 கோடி ஆகும். 10 கோடி குடும்பங்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய தேசிய சுகாதாரப்பாதுகாப்புத்திட்டம் விவசாயிகள் உள்ளிட்ட இலட்சக்கணக்கான ஊரகக் குடும்பங்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

சந்தை மற்றும் அனைவருக்கும் ஆதாயம் தரும் விலை அனைவரையும் உள்ளடக்கிய குறைந்தபட்ச ஆதார விலை (MSP) விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் கீழ் குறைந்தபட்ச ஆதாரவிலை என்பது இதுவரை தேர்ந்தெடுக்கப்பட்ட பயிர்கள் மற்றும் நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட மண்டலங்களுக்கு மட்டும் செல்லுபடியாகும் வகையில் இருந்தது. குறைந்தபட்ச ஆதார விலை (MSP) மீதான மற்றொரு விமர்சனம் என்னவென்றால் அது உற்பத்திச் செலவு மீது கணக்கிடப்பட்டு போதுமான சலுகையைத் தரவில்லை என்பதாகும். விவசாயிக்கு MSPக்குச் சமமான வருவாய் கிடைப்பதை உறுதி செய்யும் மாற்று வழிமுறைகளைப் பரிந்துரைக்குமாறு நிதிஆயோக்கை அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. இது இந்த வகையில் முதலாவது அறிவிப்பு ஆகும். பெரும்பாலும் விவசாயி குறைந்தபட்ச ஆதார விலை (MSP)க்குக் குறைவான சந்தை விலையிலேயே விற்குமாறு நிர்ப்பந்திக்கப்படுகிறார். அதிக வருவாய் ஈட்டும் எந்த வாய்ப்பும் அவருக்கு அளிக்கப்படுவதில்லை. குறைந்தபட்ச ஆதார (MSP) விலையில் பொருட்களை வாங்குவதற்கான முன்மாதிரி நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வந்துள்ளது அல்லது அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதார விலை (MSP) தொகையானது விவசாயிக்குக் கிடைப்பதை உறுதிசெய்யும் வேறு ஏதாவது வழிமுறையானது கடைபிடிக்கப்பட்டாக வேண்டும். இத்தகைய அறிவிப்பு வரவேற்கப்படக் கூடிய ஒன்றே ஆகும். மாற்றுஏற்பாடு என்ற முறையில் நாடாளுமன்ற உறுப்பினரின் பவந்தார் திட்டத்தின் (விலை பற்றாக்குறை பட்டுவாடா) BhaavantarYojana (Price Deficiency Payments) – மீது சிந்தனையாளர் குழு அண்மையில் மேற்கொண்ட மதிப்பீட்டைச் சொல்லலாம். தற்போது எம்.எஸ்.பி யானது கொள்கை அளவில் விவசாயிகளின் உற்பத்திச் செலவைவிட 50 சதவிகிதம் கூடுதலாக நிர்ணயிக்கப்படவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது வருமானத்தைக் கவனத்தில் கொள்வதை உறுதிப்படுத்தும் ஒரு நடவடிக்கையாக உள்ளது. விவசாயம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் செயற்கை நுண்ணறிவு குறித்து நிதிஆயோக் ஆலோசிக்கவேண்டும் என்று கட்டாயமாகச் சொல்லப்பட்டுள்ளது. இது சிறப்பாகத் திட்டமிடலில் மூலவளங்களைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள உதவும். மேலும் எதிர்காலத் தேவைகளின் அடிப்படையில் விவசாயிகள் உற்பத்தியில் ஈடுபடவும் உதவும்.

விளைநிலத்தின் வாசலுக்கு அருகிலேயே விற்பனைச் சந்தை, விவசாய அறுவடைவிலைக்கும் குறைந்தபட்ச ஆதார விலைக்கும் இடையில் மிகப்பெரிய இடைவெளி இருப்பதற்கான பல காரணங்களில் ஒன்றாகச் சந்தையை அணுகுவதில் உள்ள கட்டுப்பாடுகள் ஆகியவை உள்ளன. மொத்த விவசாயிகளில் 85 சதவிகிதம் பேர் சிறு மற்றும் விளிம்பு நிலை விவசாயிகள் பிரிவுகளில் அடங்குவர். அவர்களது உற்பத்தியின் அளவானது குறைவாக இருப்பதால் அவர்கள் சந்தைக்குச் சென்று பொருள்களை விற்பதில் பல கட்டுப்பாடுகள் உள்ளன. விவசாயிக்கும் மொத்த விற்பனை சந்தைகளுக்கும் இடையில் தொடர்பு ஏதும் இல்லாமல் இருக்கும் நிலையானது அணுகுவதற்கு எளிதான மற்றும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்ட சந்தைகளை உருவாக்குவதற்கு தடையாக நீண்ட காலமாக இருந்துவருகிறது. தற்போதுள்ள 22,000 ஊரக விளைச்சல் காலச்சந்தைகளை கிராமிய வேளாண்சந்தைகளாக Grameen Agricultural Markets (GrAMS) மாற்ற அரசு ரூ.2,000 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. ஒருசேர மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கவும் வாங்கவும் உதவுகின்ற இந்த GrAMS சந்தைகள் பல்நோக்குக்களமாக இருக்கும். ஒருங்கிணைந்த தேசியச்சந்தை என்ற கனவை உண்மையாக்கும் வகையில் இந்த GrAMS முறையான இணைப்புவசதிகளை ஏற்படுத்தித்தரும். அறுவடைக்குப் பின்பு மேற்கொள்ளும் முக்கியமான நடவடிக்கைகளை கிராமஅளவிலேயே கிடைக்கச் செய்யவேண்டும். இதற்கு பிரதம மந்திரி கிராமச்சாலைகள் திட்டம்3 ஆனது ஊரகக் குடியிருப்புகளை GrAMS சந்தைகளுடன் இணைக்க

கவனம் செலுத்தும். இந்த இணைப்புச்சாலைகள் அனைத்துப் பருவ காலத்துக்கும் ஏற்ற வகையில் அமைக்கப்படும்.

## மதிப்புக்கூட்டல் தொடர் செயல்களின் மதிப்பு

விவசாயம் மற்றும் விவசாயம் சாராத என இரு நிலைகளிலும் ஊரக வாழ்வாதாரத்துக்கு மிகத்துணிவான முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. கிராம நிலையிலேயே இலாபம் தரக்கூடிய வகையில் மதிப்புக்கூட்டல் தொடர் செயல்களை மேற்கொள்ளுதல், உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், விவசாயிகள் நிலையிலேயே விலை நிர்ணயம் செய்தல் ஆகியன மேற்கொள்ளப்படும். விவசாயத்தை அபிவிருத்தி செய்ய தொகுப்பு அடிப்படையிலான அணுகுமுறை தேவை என வெளிப்படையாகவே வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையானது படிப்படியாக செயல்படுத்தப்படும். எதிர்காலத்தில அரசு மற்றும் தனியார் மேற்கொள்ளும் விவசாய நடவடிக்கைகளுக்கான அடிப்படையாக இந்த அணுகுமுறையே இருக்கும். விவசாய உற்பத்தியாளர் கம்பெனிகள் (FPCs) சிறப்புக்கூறு திட்டங்களை அமல்படுத்துவதில் முக்கிய பங்கை வகிக்கும். தேவையான நிர்வாக மற்றும் தொழில்நுட்பவசதிகள் அளிக்கப்பட்டு உதிரியாகச் செயல்படும் இந்தப் பிரிவை ஒன்றாகச் சேர்த்து மேம்படுத்தும் முயற்சியாக இது அமையும். ரூ.100 கோடிக்குக் குறைவான ஆண்டுத்தொழில் தொகை உள்ள FPCக்களுக்கு 100 சதவிகித வரிக்குறைப்பு என்பது நீண்ட நாட்களுக்கு பொருளாதார ஸ்திரத்தன்மையோடு இவை செயல்பட வழிவகுக்கும். ஆண்டு முழுவதும் வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் தக்காளி (OPT) ஆகியவை கிடைக்கச் செய்வதற்காக புதியதாகத் தொடங்கப்பட்டுள்ள பசுமைச் செயல் திட்டத்தின் (ஆப்பரேஷன் கிரீன்ஸ்) மையமாக இந்த FPOs இருக்கும். 'ஆப்பரேஷன் கிரீன்ஸ்' செயல்பாட்டுக்காக ரூ.500 கோடியிலான தனி நிதித் தொகுப்பு பயன்படுத்தப்படும். வேளாண் சார்ந்த போக்குவரத்து, பதப்படுத்துதல் வசதிகள், OPT பயிர்களை தொழில் நிபுணத்துவத்துடன் நிர்வகித்தல் ஆகியவற்றை மேம்படுத்த இந்த நிதி பயன்படுத்தப்படும்.

உணவுபதப்படுத்துதல் தொழில்பிரிவானது GVAக்கு தோராயமாக 8.80 சதவிகிதம் உற்பத்தி சார்ந்தும் 8.30 சதவிகிதம் விவசாயம் சார்ந்தும் பங்களித்து வருகின்றது. இந்த உணவு பதப்படுத்துதல் தொழிலுக்கான பட்ஜெட் ஒதுக்கீடு இரண்டு மடங்காக்கப்பட்டுள்ளது. 2017-18இல் இருந்த ரூ.175 கோடி என்ற நிதி ஒதுக்கீடு 2018-19இல் ரூ.1,400 கோடி என அதிகரிக்கப்பட்டுள்ளது. நம்நாட்டில் பயன்படுத்திக்கொள்ளாத வேளாண்ஏற்றுமதி கொள்திறன் (யு.எஸ்.டாலர் 70 பில்லியன்) அதிகமாக உள்ளது. இலக்கு நிர்ணயித்து ஏற்றுமதி விதிகளைத்தளர்த்தி வேளாண் பொருள்களை ஏற்றுமதி செய்தாகவேண்டும் என்று இந்தக் கொள்திறன் அளவு சுட்டிக்காட்டுகிறது. அதே போன்று 42 மெகா உணவுப்பூங்காக்களிலும் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும் ஆய்வு செய்யவேண்டும்.

## அதிகமதிப்புள்ள விளைபொருள்கள்

தோட்டக்கலைப்பயிர்கள், மருத்துவ மற்றும் வாசனைத் தாவரங்கள் Medicinal & Aromatic Plants (MAPs) போன்ற அதிக மதிப்புள்ள விளைபொருள்கள் பட்ஜெட்டில் சிறப்புக்கவனம் பெற்றுள்ளன. வேளாண்வருவாயைப் பெருக்குவதற்கு இவை உதவும். நம் நாட்டில் 8,000 தாவர இனங்கள் மருத்துவ மூலிகைகளாக இனம் கண்டறிந்து பட்டியலிடப்பட்டுள்ளன. இந்திய வாசனைத்திரவிய சந்தையானது கடந்தகாலங்களில் சீராக வளர்ச்சி அடைந்து வந்துள்ளது. எக்கனாமிஸ்ட் பத்திரிகையின் நுண்ணறிவுப் பிரிவு இந்தியாவில் பெர்ஃபியூம் மற்றும் இதர வாசனைத் திரவியங்கள் விற்பனை 3,169 மில்லியன் அமெரிக்க டாலர் என மதிப்பிட்டுள்ளது. அழுகிவிடக் கூடிய தோட்டக்கலைப் பொருள்களின் உற்பத்திக்கு 'ஆப்பரேஷன் கிரீன்' உந்துதல் அளிக்க உதவும். இதனோடு தொடர்புடைய தொழில் துறையில் MSMEs க்களுக்கு பலன் தரும் வகையில் MAPs யில் பயிரிடுவதை ஒருங்கிணைப்பதற்கு உதவ ரூ.200 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயத்தின் தேவை மற்றும் விநியோகம் எதிர்வரும் காலத்தில் எப்படி இருக்கும் என்பதைக் கண்டறிவதற்கு கடந்த இரண்டு ஆண்டுகளில் நிதிஆயோக் மற்ற அமைச்சகங்களுடன் இணைந்து பல்வேறு முயற்சிகளை எடுத்துவந்துள்ளது. அதற்காக இந்த பட்ஜெட்டிலும் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது ஊக்கம் அளிப்பதாக இருக்கிறது.

## இயற்கை மூலவளங்கள் மற்றும் நீடித்த நிலைத்தன்மை

மத்திய பட்ஜெட் 2018-19இல் அறிவிக்கப்பட்டுள்ள விலை மற்றும் உற்பத்தித்திறனுக்கான ஊக்கத்தொகை என்பது நவீனகால நீடித்த நிலைத்தன்மை காரணிகளுக்கு சமமான முக்கியத்துவம் கொடுத்து இணைத்துள்ளது. விவசாய உற்பத்தியாளர் சங்கங்கள் ஒவ்வொரு 1,000 ஹெக்டேர் நிலத்திலும் இயற்கை விவசாயத்தை மேம்படுத்தச் செய்யக்கூடிய முன்மாதிரி வேலைகளை ஊக்கப்படுத்தும் கருவிகளாக இருக்கும் என்பது அங்கீகரிக்கப் பட்டுள்ளது. வடகிழக்குப் பிராந்தியத்துக்கான இயற்கை விவசாய மதிப்புக் கூட்டுத் தொடர்செயல்களை மேம்படுத்துவதற்குத் தேவையான நிதிஒதுக்கீடானது 60 சதவிகிதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. வடகிழக்குப்பிராந்தியம் இயல்பாகவே பெரும்பாலும் இயற்கை விவசாயத்தில்தான் ஈடுபட்டுள்ளது. ASEAN and Act East policy கீழ் இயற்கை விவசாயப்பொருட்களை ஏற்றுமதி செய்ய அதிக அளவில் வாய்ப்புள்ளது. 2018-19ஆம் ஆண்டிற்கு எல்லா நிலத்துக்கும் நீர் மற்றும் ஒரு துளி நீரில் கூடுதல்பயிர் ஆகிய இரண்டு திட்டங்களுக்குமான (PMKSY-HarKhetKoPani and PMKSY-Per drop More Crop) நீர்ஆதாரமுதலீடுகள் முறையே 38 சதவிகிதம் மற்றும் 33 சதவிகிதம் அதிகரித்துள்ளன. பிரதமமந்திரி கிரிஷி சின்சாயி திட்டத்தின் (PM Krishi Sinchayi Yojana (PMKSY) வரம்பானது குறைந்துவரும் நிலத்தடிநீர் நிலைமையை எதிர்கொண்டு செயலாற்றும் வகையில் விரிவாக்கப்பட்டுள்ளது. 30 சதவிகிதத்துக்கும் குறைவான விவசாயநிலங்களுக்கு பாசனநீர் கிடைக்கும் என்பது உறுதியாக இல்லாத 96 பற்றாக்குறை மாவட்டங்களில் நீர் ஆதாரங்கள் மீது கவனம் செலுத்தப்படும். அறுவடைக்குப் பின்பு நிலத்தில் எஞ்சியுள்ள உபரிகளை அகற்றுவதற்கான இயந்திரங்களை வாங்குவதற்கு மாநிலஅளவில் அரசாங்கங்களுக்கு இடையிலான ஒத்துழைப்புடன் மான்யம் தருவதற்கான சிறப்புத்திட்டம் ஒன்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக குளிர்காலத்தில் தில்லியில் காற்றின் தரம் குறைந்துவருகிறது என்ற குற்றச்சாட்டுக்கு எதிர்வினையாக இந்தச் சிறப்புத்திட்டம் அறிவிக்கப்பட்டுள்ளது. வட இந்தியாவில் நெல் அறுவடைக்குப்பிறகு விளைநிலத்தில் எஞ்சியுள்ளவற்றை அகற்றுவதற்கு தீ வைப்பதால் எழும் புகை குறித்து இந்த ஆண்டின் பொருளாதார ஆய்வறிக்கை உறுதிப்படுத்தியுள்ள சூழலில் புதிய திட்டம் குறித்த அறிவிப்பானது அதற்கிசைந்தது போலவே உள்ளது. விவசாயிகள் தாங்கள் சூரியசக்தி மூலம் தயாரிக்கின்ற உபரிமின்சாரத்தை கம்பிவழி மின்சார விநியோக அமைப்புக்கும் விநியோக நிறுவனங்களுக்கும் விற்கும் முறையானது விவசாயிகளுக்கு வருமானம் ஈட்டும் வழியாகவும் நீடித்த நிலையான இலக்குகளை அடையும் வழியாகவும் உள்ளது. GOBAR-DHAN என்ற ஆர்கானிக் பயோஅக்ரோ மூலவளங்களைப் பயன்படுத்த செயலாற்றுதல் திட்டமானது பண்ணைகளில் உள்ள மாட்டுச்சாணம் மற்றும் திடக்கழிவுகளை உரமாகவும், எருவாகவும், பயோ கேஸ் ஆகவும் மாற்றக்கூடிய ஒரு திட்டமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நிதிஆயோக் அடையாளம் கண்டுள்ள வளர்ச்சி தாகம் கொண்ட 115 மாவட்டங்களில் திட்டங்களை ஒருங்கிணைப்பதற்கு உரிய முக்கியத்துவம் மத்திய பட்ஜெட்டில் தரப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களில் இயக்கப்பணி வேகத்தில் மாற்றங்கள் கொண்டுவரப்படும். அதாவது 2022ஆம் ஆண்டுக்குள் புதிய இந்தியா என்ற உத்வேகத்தில் இங்கு மாற்றங்கள் மேற்கொள்ளப்படும். இந்த வளர்ச்சிதாகம் கொண்ட மாவட்டங்களில் ஆரோக்கியம், ஊட்டச்சத்து, கல்வி, விவசாயம், மின்னணு இணைப்பு, தொழில்திறன் மேம்பாடு மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள் ஆகிய அம்சங்களில் மாற்றங்களைக்கொண்டு வர கவனம் செலுத்தப்படும்.

## முடிவுரை

விவசாயம் ஒரு தொழிலாக நீடித்து இருக்க வேண்டுமென்றால் அதற்கு ஏற்ற ஊரகச்சூழல் அமைப்பை உருவாக்குவது முக்கியம் என்ற கருத்தாக்கத்தை மத்திய பட்ஜெட் உறுதியாக அங்கீகரித்துள்ளது. ரூ.20,000 கோடி தொடக்கநிதியில் முன்பு அறிவிக்கப்பட்ட நீண்டகால நீர்ப்பாசன நிதியத்தின் கீழ் இருக்கும் நீர்ப்பிடிப்புப்பகுதி வளர்ச்சித்திட்டங்களை இப்போதும் உள்ளடக்குவதன் மூலம் திட்டங்களுக்குத் தேவையான தொடர்ச்சி கிடைப்பது தெளிவாகிறது. மின்சாரம், சமையல் எரிவாயு இணைப்புகள், துப்புரவு, வீட்டுவசதி மற்றும் சுகாதாரவசதி ஆகியவற்றை எளிதில் அணுகிப்பெறமுடியும் என்று பட்ஜெட்டில் பல்வேறு முன்மாதிரியான நடவடிக்கைகள் மூலம்



அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு விவசாயிகளின் வருமானத்தை இரண்டு மடங்காக்க வேண்டும் என்ற தொலைநோக்குப்பார்வைக்கு அணி சேர்ப்பது போன்று உள்ளது. கடந்த ஆண்டோடு ஒப்பிட தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்துக்கான ஒதுக்கீடு 28 சதவிகிதம் அதிகரித்துள்ளது. ரூ.1290 கோடி ஒதுக்கீட்டில் தொடங்கப்பட்டுள்ள திருத்திஅமைக்கப்பட்ட தேசிய மூங்கில் இயக்கமானது பண்ணை மற்றும் பண்ணை சாராத வருமானத்தை அதிகரிப்பதோடு ஊரக இந்தியாவில் வேலைவாய்ப்பையும் அதிகரிக்கும். குறுகிய காலகட்டத்துக்குள் விளைவுகளைத் தரக்கூடிய முன்கூட்டியே நிர்ணயித்த, தெளிவான மற்றும் முக்கிய முன்மாதிரியான நடவடிக்கைகள் தொடங்க ஏதுவாக நிதி ஆதாரங்களை மீண்டும் மீண்டும் புதுப்பிக்கக்கூடியதாக நிதிஒதுக்கீடுகள் இருப்பதாகத்தோன்றுகின்றன. கடந்த ஆண்டு பட்ஜெட்டில் பயிர் அறிவியல் மற்றும் கால்நடை அறிவியல் ஆகியவற்றில் ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்குமான நிதிஒதுக்கீடு நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் இப்போது 2018-19ஆம் ஆண்டுக்கு இந்தத் துணைத் தலைப்புகளின் கீழ் நிதிஒதுக்கீடுகள் முந்தைய ஒதுக்கீடுகளை விட முறையே 78 சதவிகிதம் மற்றும் 47 சதவிகிதம் அதிகரித்துள்ளன. இந்தத் தலைப்புகளின் கீழ் மீண்டும் நிதிஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது ஆகும். இது அதிகஅளவில் எதிர்பார்க்கப்பட்டு காத்திருந்த ஒதுக்கீடு ஆகும். ஏனெனில் விவசாய அபிவிருத்திக்கு நவீன, புதிய தொழில்நுட்பங்கள் தேவை. இதற்கு ஆராய்ச்சி மற்றும் நிறுவனங்களை வலுப்படுத்த அதிகஅளவில் முதலீடுகள் தேவைப்படும். அதற்கு இந்த ஒதுக்கீடு உதவும். 2018-19ஆம் ஆண்டுக்கான நிதிஒதுக்கீட்டு முறையானது ஒருங்கிணைந்த முழுமையான பார்வையில் விவசாய அபிவிருத்தியை முடுக்கிவிடுவதற்கு எந்தெந்த முக்கியமான பிரிவுகளில் செலவினத்திற்கு கவனம் செலுத்தவேண்டுமோ அங்கெல்லாம் தீவிரகவனம் செலுத்தியுள்ளது. ‘‘விவசாயிகளின் நலவாழ்வு’’ என்ற ஒரே மையக்கருத்தில் பட்ஜெட் நங்கூரம் பாய்ச்சி நின்றுள்ளது. அனைவரையும் உள்ளடக்குதல், புத்தாக்கம், வேலைவாய்ப்பு மற்றும் நீடித்த நிலைத்தன்மை ஆகியவற்றில் போதுமான கவனமும் செலுத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் உள்ள புதிய அம்சம் என்னவென்றால் முக்கியமான முன்மாதிரியான நடவடிக்கைகளை ஒன்றாக இணைத்து நடைமுறைப்படுத்த அளவான நிதியை கவனமாகப்பயன்படுத்துதல் என்பதாகும். இத்தகைய முன்மாதிரியான நடவடிக்கைகளை எவ்வளவு விரைவாக நடைமுறைப்படுத்தமுடியுமோ அவ்வளவு விரைவாக நடைமுறைப்படுத்தும்போது அது புதிய வளர்ச்சிக்கு வரவேற்பு கூறுவதாக அமையும். நாட்டுக்கு வளமை மற்றும் அனைவரையும் உள்ளடக்குதல் கொண்ட வளர்ச்சியாக அது இருக்கும்.

---

- **டாக்டர் கே.பி.மிஸ்ரா,** புதுதில்லியில் உள்ள இந்திய அரசின் நிதிஆயோக்கில் ஆலோசகர் (விவசாயம்).

- **ஷிவாலிக்கா குப்தா,** புதுதில்லியில் உள்ள இந்திய அரசின் நிதிஆயோக்கில் இளம் தொழில்நிபுணர்.

# பட்ஜெட்டும் உணவுப்பாதுகாப்பும்

- Dr. M.S. சுவாமிநாதன்

பட்டினியைத் தவிர்க்க சமூகஆதரவு அவசியம் என்ற நிலையில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் உணவுப்பாதுகாப்பு வழங்குவதற்கு நாடாளுமன்றம் மூலம் சட்டம் இயற்றி செயல்படுத்தும் ஒரே நாடு இந்தியாவாகத்தான் இருக்கமுடியும். இருந்தாலும்கூட பட்டினியும், சத்துணவு போதாமையும் பரவலாக காணப்படுகின்றன. இதனால், நம் குழந்தைகளும், பெண்களும், ஆண்களும் அவர்களின் மரபணுசார் முழுத்திறமையையும் பயன்படுத்தி உடல் வளர்ச்சியையும்; மன வளர்ச்சியையும் பெறமுடியாமல் உள்ளனர். நிதிநிலை அறிக்கையையும் பிற நடவடிக்கைகளையும் கணக்கில் கொண்டு நிதி சார்ந்தும் மற்றும் அறிவியல் சார்ந்தும் கூடுதலான கவனம் செலுத்தவேண்டிய சில நிலைமைகளை நான் இங்கே விளக்குகிறேன்.

## விலை ஏற்றம் / இறக்கம்

விலைவாசி கடுமையாக மாறுபடுவதால் வருமானமும், ஸ்திரத் தன்மையும் பாதித்து நம் விவசாயிகள் பெரிதும் கவலையுறுகிறார்கள். இதில் குறிப்பாக உருளைக்கிழங்கு, தக்காளி, வெங்காயம் ஆகியவற்றின் விலைகளைக் கூறலாம். இப்படிப்பட்ட கடினமான விலைவேறுபாடு ஒரு தொடர் பிரச்சினையாகவே இருந்துவருகிறது. இந்த நிலைமையை சமாளிக்க நாம் தற்காலிக நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர்த்து நிரந்தரத்தீர்வு காணவேண்டும். இதற்கு சாத்தியமாகக்கூடிய ஒரு தீர்வாக நகர்ப்புறங்களிலேயே காய்கறி, பழங்களை வளர்க்க நாம் ஊக்கமளிக்கவேண்டும். நகர்ப்புறங்களிலேயும், அதன் ஒட்டிய பகுதிகளிலும் உள்ள இடங்களைப் பயன்படுத்தி இதை நாம் மேற்கொள்ளலாம். வீட்டு மாடிகளிலும், காலியாக உள்ள இடங்களிலும் தக்காளி, வெங்காயம், மிளகாய் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களைப் பயிரிடலாம். இதனால், நிலையான விலை, மக்களுக்குத் தேவையான சத்துணவு ஆகிய இரு பயன்களும் கிடைக்கும்.

## கடலோரப்பகுதிகளில் கடல்நீர் விவசாயம்

இந்தியாவின் கடற்கரையின் நீளம் சுமார் 8000 கிலோ மீட்டர்கள். கேரளாவின் குட்டநாடு பகுதியில் செய்யப்படுவது போல விவசாயத்தை இந்தப்பகுதிகளில் மேற்கொள்ளலாம். கடலோர நீர் மற்றும் பயிர்வளர்ப்புப் பகுதிகளில் விவசாயத்தையும், மீன்வளத்தையும் இணைத்து செயல்படுத்தலாம். உலகளவில் நமக்குக் கிடைக்கும் நீரில் 97 சதவிகிதம் கடல் நீர். ஆகவே, இதைப் பயன்படுத்தி எப்படி விவசாயம் செய்யமுடியும் என்பதில் இந்தியா முன்னணியில் இருக்கவேண்டும். அப்படிச் செய்தால், கடலோர விவசாயம் செழிப்பதுடன், கடலோர மக்கள் சுனாமி போன்ற பேரிடர்களை எதிர்கொள்ளவும் உதவமுடியும். கடல் நீரைக்கொண்டும், கடலுக்கு அடியிலும் விவசாயம் செய்யக்கூடிய தொழில்நுட்பம் M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி அமைப்பில் உள்ளது. இந்த நிறுவனம், இதற்கான பயிற்சியையும், திறமை வளர்ப்பையும் மேற்கொள்ளத் தயாராக உள்ளது. இதன் ஒரு பகுதியாக அலையாத்திக் காடுகளையும், உப்பை ஏற்றுக்கொள்ளும் செடி, கொடி வகைகளையும் நாம் பேணிக் காக்கவேண்டும். இதற்காக, இந்த நிறுவனத்தில் உவர்நிலத் தாவரத் தோட்டம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.



## சிறுதானியங்களின் ஆண்டு

இந்தியஅரசு 2018ஆம் ஆண்டை சிறுதானியங்களுக்கான ஆண்டாக அறிவித்துள்ளது. சாமை, திணை, கேழ்வரகு, பனிவரகு, கம்பு மற்றும் பிற சிறுதானியங்களின் உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. கொல்லி மலைப்பகுதியில் இச்சிறுதானியங்களின் விளைச்சலுக்குத்தேவையான அடிப்படை உயிர்ச்சத்துக்கள் மிகுந்துள்ளன. ஆகவே, இந்த சிறுதானியங்களை போற்றிப் பாதுகாக்க ஒரு சிறுதானிய உற்பத்தி மலைப்பகுதியை நாம் அமைக்க வேண்டும். இந்த சிறுதானியங்களைப்

பயன்படுத்தி, அந்தப்பகுதியிலேயே பல உணவுப்பொருள்களை, குறிப்பாக சிற்றுண்டிப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைக்கவேண்டும்.

## கால்நடை பராமாஜீப்பும், மீன்வளமும்

பயிர் வளர்க்கும் விவசாயிகளுக்கு மட்டுமல்லாமல், கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு பணி செய்பவர்களுக்கும் கிசான் கடன் அட்டைகளை வழங்கவேண்டும். கால்நடை பராமரிப்புகளான ஆடு, கோழிவளர்ப்பு ஆகியவை விவசாயிகளுக்கு கணிசமான கூடுதல் வருமானத்தைக் கொடுக்கும். கடலில் மீன் வளத்தைப் பெருக்குவதற்காக மீன் பிடித்தொழில் தடைசெய்யப்பட்டுள்ள காலங்களில், மீனவர்களுக்கு இதன் மூலம் கூடுதல் வருமானம் கிடைக்கும்.

## நெல் சார்ந்த உயிரிப்பூங்கா அமைத்தல்

இந்தப் பூங்காவின் மூலம் விவசாயிகள் நெற்பயிர் சார்ந்த பொருள்களைப் பயன்படுத்தி எப்படி தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளலாம் என்பது தெரியவரும். இதனால், அரிசி, வைக்கோல் நெல், உமி மற்றும் தவிடு ஆகியவற்றைப் பயன்படுத்தி மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்களைத் தயாரிக்கலாம். இதைப்போலவே, பருப்புசார் தாவரங்களுக்கான உயிரிப் பூங்காக்களை அமைத்து அதன் மூலம் அதனுடைய பல பொருட்களைப் பயன்படுத்தி விவசாயிகள் கூடுதல் வருமானம் பெறலாம்.

## பருவநிலைக்கு ஏற்ற செயல்பாடு

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றிய அளவிலும் பருவநிலை ஆபத்துக்களை எதிர்கொள்ளும் மேலாண்மை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஒன்று செயல்படவேண்டும். பருவநிலை மாற்றங்களால் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்ள பயிற்சி பெற்ற ஒரு ஆணும், ஒரு பெண்ணும் அந்த ஒன்றியத்தில் செயல்படவேண்டும். பருவநிலை மாற்றங்களால் பேரிடர் நிகழக்கூடிய ஆபத்து உள்ளதால், அந்தப்பகுதிகளிலும், மற்றப்பகுதிகளிலும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இப்படிப்பட்டவர்களுக்கு பயிற்சி அளிக்கக்கூடிய பயிற்சித் திட்டங்கள், M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ளன.

## விவசாய பள்ளிகள் அமைத்தல்

முன்மாதிரியான விவசாயிகளின் பண்ணைகளில் விவசாயிகள் மற்ற விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் பள்ளிகள் அமைக்கவேண்டும். அப்படி செய்வதன் மூலம் விவசாயத் தொழிலுக்குத் தேவையான திறன்களை வேகமாக பரவலாக்கமுடியும்.

## நகர்ப்புறங்களில் காய்கறி பழவிவசாயம்

இன்று நம்நாட்டில் நகரமயமாக்கல் வேகமாக பெருகிக்கொண்டிருக்கும் நேரத்தில், அங்கு காணப்படும் பொருள்களின் தேவை மற்றும் வழங்கலுக்கு இடையே உள்ள வேறுபாட்டால் விலைவாசி உயருகிறது. நகர்ப்புறங்களிலேயே காய்கறி பழங்களை பயிரிடுவது இதற்கு ஒரு தீர்வு. அதற்கான தொழில்நுட்ப விநியோகத் திறன்களை மக்களுக்கு அளிக்கவேண்டும். இஸ்ரேல் நாட்டில் இப்படி பரவலாக்கப்பட்ட விவசாயத்திற்கு கூட்டுறவு விநியோகம் பலம் சேர்க்கிறது. நகர்ப்புறங்களிலேயே உற்பத்தி செய்வதன் மூலம் நுகர்வோருக்கு நிலையான விலையில் பொருள்கள் கிடைக்கும். அதே சமயம், இப்படி உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரம் நன்றாக உள்ளதா என்றும் பார்த்து தேவையற்ற பூச்சிக்கொல்லிகளும் இன்ன பிற இராசயனப்பொருட்களும் தவிர்க்கப்படவேண்டும். அப்படி செய்வதன் மூலம் தரமான பொருள்களை ஒரே சீரான விலையில் வழங்கமுடியும். பழங்கள் மற்றும் காய்கறிகளில் சிலவற்றை நகர்ப்புறமக்கள் மிகவும் விரும்புகிறார்கள். ஆகவே, நகர்ப்புறங்களிலும்;, சுற்று வட்டாரங்களிலும் இப்படிப்பட்ட பொருள்;களை உற்பத்தி செய்வது அவசியம்.



தேசிய உணவுப்பாதுகாப்பு சட்டம் 2013 இன்படி பொது விநியோகத் திட்டத்தில், சிறுதானியங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. ஒரு ஊடகச் செய்தியின்படி, கர்நாடகத்திலும் பிற சில மாநிலங்களிலும் கேழ்வரகு, இன்னும் சில சிறுதானியங்கள் பயிரிடப்படும் பரப்பளவு அதிகரிக்கப்படும். இப்படிப்பட்ட பயிர்களில்

விவசாயிகளுக்கு மீண்டும் நம்பிக்கை ஏற்பட அதற்குண்டான விலையைக் கொடுத்து அரசு கொள்முதல் செய்யவேண்டும். ஒரு குவிண்டால் ரூ.2000 என்ற அளவில் 1,00,000 டன் கேழ்வரகை கர்நாடக அரசு கொள்முதல் செய்துள்ளது. கொள்முதலும், பயன்பாடும் அதிகரித்தால் விவசாயிகள் இந்த பொருள்களைக் கூடுதலாகப் பயிரிடுவார்கள். 1992 முதல், M.S. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் தமிழ்நாட்டின் கொல்லி மலைப்பகுதிகளிலும், ஒடிசாவின் கோராப்பூர் பகுதிகளிலும் இது மாதிரியான சிறுதானியங்களுக்கு நல்ல விலை வாய்ப்பை அளித்து அவற்றைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. உணவுப்பாதுகாப்பு சட்டம் 2013லும் பொது விநியோக அமைப்பில் கேழ்வரகு, ஜோவார், பாஜ்ரா போன்ற சிறுதானியங்கள் இடம் பெற்றுள்ளன. இந்த சிறுதானியங்கள் சத்தானவை என்று நாம் இப்போது அறிந்து கொண்டது மட்டுமல்லாமல் மழை நிலவரம் சீராக இல்லாத நிலைமையையும் இவை தாங்கக்கூடியவை என்று அறிகிறோம். இப்படிப்பட்ட சத்துமிக்க, பருவநிலை மாற்றங்களை சமாளித்து நிலைத்து நிற்கும் சிறுதானியப்பயிர்களை மழை குறைவான இடங்களில் பெருமளவில் பயிர் செய்ய அவற்றிற்கு உகந்த சந்தை வாய்ப்பை நாம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அதிர்ஷ்டவசமாக தற்போது கேழ்வரகு, பாஜ்ரா, ஜோவார் போன்ற சிறுதானியங்களைக் கொண்டு தயாரிக்கப்படும் நிறுவனங்கள் அதிகரித்து வருகின்றன. உணவுப் பாதுகாப்பு சட்டத்தின் கீழும் பள்ளி உணவுத்திட்டத்திலும் இந்த சத்துமிக்க சிறுதானியங்கள் பயன்படுத்தப்படுவதை நாம் உறுதிசெய்யவேண்டும். அவைகளை பருவநிலை மாற்றத்திற்கு ஏதுவான சத்துமிக்க சிறுதானியங்கள் என்று அழைக்கவேண்டும். இது அல்லாமல், அடுத்த பத்து ஆண்டுகளில் ஒரு ஆண்டை அதிகம் பயன்படுத்தப்படாத சத்துமிக்க சிறுதானியங்கள் ஆண்டாக ஐக்கிய நாடுகள் பிரகடனப்படுத்த நாம் பரிந்துரைக்கவேண்டும். அடுத்த ஆண்டு, பருப்புக்களுக்கான உலக ஆண்டாகும். பருப்புகளும், புரதச்சத்து மிகுந்தவை, பருவநிலை மாற்றத்திற்கு ஏதுவானவை. இப்படிப்பட்ட உணவு தானியங்களை விவசாயம் செய்து, மக்கள் உண்ணும் வகையில், அரசு கொள்கை அமைந்தால், போஷாக்கு இல்லாத குழந்தைகள் மற்றும் பெண்களுக்கான நாடு நம் நாடு என்ற அவப்பெயரை நாம் களையமுடியும்.

இப்படிப்பட்ட ''ஆதரவற்ற பயிர்களின்'' உற்பத்தித்திறனை மேம்படுத்த, இது சம்பந்தமான ஆய்வுகளில் அதிக முதலீடு செய்யவேண்டும். அப்படி அதிக மகசூல் கிடைத்து சந்தையில் விற்பனையாகும் நிலையில் சிறு விவசாயிகள் பெருமளவில் இவற்றைப் பயிர் செய்வார்கள்.

அறுவடைக்குப்பின் அந்த பொருள்களை பாதுகாத்து மேலாண்மை செய்வது நமக்கு இருக்கும் மற்றொரு பெரிய பிரச்சினை. தற்போது, உற்பத்திக்கும் அறுவடைக்கு பின்புமான தொழில்நுட்பங்களில் மிகுந்த இடைவெளி காணப்படுவதால் உற்பத்தியாளர்கள், நுகர்வோர் ஆகிய இருவருமே பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இந்த வகையில்தான் உணவுப்பதனீட்டு தொழில்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றன. அதிர்ஷ்டவசமாக 2018-19 பட்ஜெட்டில் உணவுப்பாதுகாப்பிற்கும் உணவுப்பொருள்களைப் பதனிடுவதற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. அறுவடைக்குப்பின்பான தொழில்நுட்பத்தில் அதிக முதலீடு செய்ய மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை நாம் உருவாக்கவேண்டும். இதற்கு, நாடெங்கிலும் குளிரூட்டப்பட்ட கிடங்குகள் தேவை. பஞ்சாப், ஹரியானா பகுதிகளில் குளிரூட்டப்பட்ட கிடங்குகள் போதிய அளவில் இருந்திருந்தால், மேற்குவங்கம், உத்திரபிரதேசம், பிகார் மாநிலங்களில் சமீபத்தில் ஏற்பட்ட உருளைகிழங்கு பற்றாக்குறை ஏற்பட்டிருக்காது. இப்படிப்பட்ட பிரச்சினைகளை சமாளிக்க தொழில்நுட்பமும், அரசுக்கொள்கையும், விவசாயிகளின் ஈடுபாடும் இருந்தால் விரைவில் அழுகிவிடும் பொருள்களை பெருமளவு உற்பத்தி செய்யமுடியும்.

சமீபத்திய நேஷனல் ஜியோகிராஃபிக் இதழில் (பிப்ரவரி 2018) ''சீனாவிற்கு யார் உணவளிப்பது என்ற கட்டுரை வெளியானது. அதைப்போலவே ''இந்தியாவிற்கு யார் உணவளிப்பது?'' என்ற கேள்வியை நாம் கேட்கவேண்டும். குறைந்துகொண்டே போகும் விவசாய நிலங்களிலிருந்து அதிகரித்துக் கொண்டே போகும் மக்கள் தொகைக்கு எப்படி உணவளிப்பது? இந்த பட்ஜெட்டில் இந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு நல்ல ஆரம்பத்தைப் பார்க்கமுடிகிறது.

**Dr. M.S. சுவாமிநாதன்,** நிறுவனத்தலைவர்,
M.S. சுவாமிநாதன் ஆராயச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை.

# மத்திய பட்ஜெட் 2018-19 பகுப்பாய்வு

- ஜே.டி.அகர்வால்

ஏற்கனவே நாட்டில் இருக்கின்ற பொருளாதார, சமூக மற்றும் அரசியல் நிலைமைகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அதன் பின்னணியில் இந்த ஆண்டின் பட்ஜெட்டானது பகுப்பாய்வு செய்யப்படவேண்டும். அமைப்பு ரீதியான பெரும் சீர்திருத்தங்களை கடந்த நான்கு ஆண்டுகளாக அரசு மேற்கொண்டது. இதன் விளைவாக உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 2017-18 ஆம் ஆண்டில் 6.75 சதவிகிதம் என்ற நிலையை அடைய உள்ளது. இது 2018-19 இல்7.5 சதவிகிதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. நவம்பர் 2016இல் மேற்கொள்ளப்பட்ட பணமதிப்பு நீக்கம், ஜுலை 1, 2017 இல் அறிமுகப்படுத்தப்பட்ட சரக்குகள் மற்றும் சேவை வரி, புதிய திவால் சட்டம், ஆதார் அட்டை நடைமுறையாக்கல், நேரடி அந்நிய முதலீட்டில் கட்டுப்பாடுகள் தளர்வு, நிதிப்பிரச்சனையில் தவிக்கும் பொதுத்துறை வங்கிகளை வலுப்படுத்த ரூ.88,000 கோடியில் மறுமூலதனத்திட்டத்தை செயல்படுத்துதல், குறிப்பாக ஆண்டின் பிற்பாதியில் பொருளாதார முடுக்கத்தைக் கவனித்தல் போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 7.2 சதவிகிதத்தில் விரைவான பொருளாதாரவளர்ச்சி, நிலையான பணவீக்கம் (கடந்த 6 ஆண்டுகளில் மிகக்குறைவான அளவு), நிதி வலுவூட்டல், பேரியல் பொருளாதார நிலைத்தன்மை, 409.4 பில்லியன் டாலர் என்ற அளவில் வலுவான அந்நியச்செலாவணி கையிருப்பு, இதில் 14.1 சதவிகித வளர்ச்சி விகிதம், ஒரு இலட்சம் கோடி ரூபாய்க்கு பங்கு விற்பனை மூலமான தொடர் நடவடிக்கைகள் ஆகியன வளர்ச்சிக்கான அடையாளங்களாக உள்ளன. மானியங்களில் ரூ.65,000 கோடி சேமிப்பு என்பது நேரடிப்பலன்கள் பரிமாற்றத் திட்டத்திற்கு அடிப்படையாக ஆதார் அடையாளத்தை மாற்றியுள்ளது. இந்தக் குறிகாட்டிகளில் சில இந்தியப்பொருளாதாரம் மீண்டெழும் நிலையைக் காட்டுகின்றன. உலகில் செயல்திறன் மிக்க பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியப்பொருளாதாரம் உள்ளது. பணமதிப்பு நீக்கம் மற்றும் ஜி.எஸ்.டி முதலான அமைப்பு ரீதியான சீர்திருத்தங்களால் ஏற்பட்ட தொந்தரவுகள் வளர்ச்சியின் மீதும், பொருளாதாரத்தில் பேரியல் பொருளாதாரக் காரணிகள் மீதும் தீவிரமான பாதகமான விளைவுகளை ஏற்படுத்தவில்லை என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சமன்பாடு பெரிய அளவில் அடையப்பட்டுள்ளது.

எனினும், பொருளாதாரம் சில குறிப்பிட்ட சவால்களை எதிர்கொள்ளவேண்டிய தேவையும் உள்ளது. 2016-17ஆம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 275.7 மில்லியன் டன் எனவும் காய்கறிகள் மற்றும் பழங்கள் உற்பத்தி 300 மில்லியன் டன் எனவும் இருந்தபோதிலும், விவசாயத்துறையில் வளர்ச்சி விகிதம் மிகக்குறைவாக அதாவது 2017-18ஆம் ஆண்டில் 2.1 சதவிகிதமாகவே இருக்கிறது. விவசாயிகளின் வருமானத்தை அதிகப்படுத்துதல், விவசாய உற்பத்தித்திறனை உயர்த்துதல், விவசாயம் மீண்டெழுவதை வலுப்படுத்துதல், கல்வியை விரிவுபடுத்துதல், சுகாதார வசதிகள் அனைவருக்கும் கிடைக்கச்செய்தல், வேலைவாய்ப்பை உருவாக்குதல், முதலீட்டுக்கும் ஏற்றுமதிக்கும் உந்துதல் தருதல், ஊரகப்பகுதிகளில் மின்சாரம் மற்றும் குடிநீர் வசதிகள் அனைவருக்கும் கிடைக்கச்செய்து அதன் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் போன்ற பிரதம மந்திரியின் சிறப்பு கவனத்தை பெற்றுள்ள அம்சங்களும் நிறைவேற்றப்பட வேண்டும். மிக அதிகமான அளவில் காணப்படும் வருவாய் ஈட்டாத வங்கிச் சொத்துக்கள் மற்றொரு சவாலாக இருக்கின்றன. அதே போன்று அரசு பொதுத்துறை வங்கிகளில் மூலதனத்தை மீண்டும் செலுத்தவேண்டிய தேவை என்ற பிரச்சனையும் உள்ளது.

மேற்கொள்ளப்பட்டிருக்கும் அமைப்பு சார்ந்த சீர்திருத்தங்கள், கடந்த நான்கு ஆண்டுகளில் அடைந்துள்ள சாதனைகள், பொருளாதாரம் எதிர்கொள்ளும் சவால்கள் ஆகியவற்றின் பின்னணியில்தான் தற்போதைய பட்ஜெட்டானது உருவாகியுள்ளது. வேளாண்மை, ஊரகவளர்ச்சி, சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு, MSME உள்கட்டமைப்பு வசதி ஆகியவற்றை வலுப்படுத்தவேண்டும் என்ற பிரதம மந்திரியின் நோக்கத்திற்கு ஏற்ப பட்ஜெட் தயாரிக்கப்பட்டுள்ளது.

## 1. பொருளாதாரவளர்ச்சியும், நிதிப்பற்றாக் குறையைச் சமாளித்தலும்

இந்த ஆண்டின் பட்ஜெட்டானது இந்தியாவின் பொருளாதாரம் 2.5 டிரில்லியன் அளவில் உள்ளது

எனத்தெரிவிக்கிறது. வளர்ச்சிக்கான இலக்காக 8 சதவிகிதம் என்பதை நிதி அமைச்சர் மிகச்சரியாக நிர்ணயித்துள்ளார். 2018-19ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதமானது 7.2 சதவிகிதத்தில் இருந்து 7.4 சதவிகிதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2018-19இல் மிக வேகமாக வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் ஒன்றாக இந்தியாவின் பொருளாதாரம் தொடர்ந்து விளங்கிவருகிறது. இதன் மூலம் இந்தியா உலகப்பொருளாதார வளர்ச்சிக்கு சாதகமாகவே பங்காற்றுகிறது. விவசாயம் மற்றும் தொழில் பிரிவுகளில் எதிர்பார்க்கக்கூடிய வளர்ச்சிநிலையை அடைவதற்கு நிதிஅமைச்சர் சரியான அளவில் ஒதுக்கீடுகளைச் செய்துள்ளார். “இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள்” இயக்கத்தை இதற்கான இலக்காக அவர் எடுத்துக்கொண்டுள்ளார்.

நிதிப்பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3.2 சதவிகிதம் என்ற அளவில் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க நிதி அமைச்சர் மிகவும் கவனம் செலுத்தி உள்ளார். நிதிப்பற்றாக்குறையானது 2010ஆம் ஆண்டில் 6.4 சதவிகிதமாக இருந்தது. இது சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. நிதிப்பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட தொடர் முயற்சிகளின் பலனாக இந்தியாவின் கடன் விகித அளவு கடந்த ஆண்டு அதிகரித்துள்ளது. கடன் விகித அளவு மற்றும் வர்த்தகம் செய்வதில் எளிமை ஆகியன சில்லறை வியாபாரத்தில் 100 சதவிகிதம் நேரடி அந்நிய முதலீட்டை அனுமதித்துள்ளன. இதர அமைப்பு சார்ந்த சீர்திருத்தங்கள் நிர்ணயிக்கப்பட்ட வளர்ச்சி விகித இலக்குகளை எட்ட உதவுகின்றன.




ஊரகப்பகுதிகளில் வாழ்வாதாரங்களை உருவாக்கவும் சமூக நலத் திட்டங்களுக்காவும் குறிப்பிடத்தக்க வகையில் ரூ.14.34 இலட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது வறுமையை ஒழிப்போம் (கரீபி ஹட்டாவோ) என்ற இயக்கத்தின் இலக்கை அடைவதற்கான சரியான பாதையில் அடி எடுத்து வைப்பதாக உள்ளது. மேலும் இது முற்போக்கான, எதிர்காலத்தை முன்கூட்டியே உணரக்கூடிய நடவடிக்கையாகவும் உள்ளது. அமைப்புரீதியான பலன்கள் மற்றும் வளர்ச்சியின் பலன்கள் விவசாயிகள், ஏழைகள் மற்றும் நமது சமுதாயத்தில் இதர ஏதுமற்ற நிலையில் உள்ள பிரிவினர்கள் ஆகியோருக்குக் கிடைக்கச்செய்யும் வகையில் பல்வேறு திட்டங்கள் முன்மொழியப் பட்டுள்ளன. அதே போன்று வளர்ச்சியில் பின்தங்கி உள்ள பிராந்தியங்களுக்குப் பலன் கிடைக்கவும் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. இத்தகையத் திட்டங்கள் பாராட்டுக்கு உரியவை ஆகும். இந்த ஆண்டின் பட்ஜெட்டானது இத்தகைய பலாபலன்களை ஒன்று திரட்டித்தரும்.

## 2. விவசாயமும், ஊரகப் பொருளாதாரமும்

இந்தியப்பொருளாதாரமானது இப்பொழுதும் விவசாயம் சார்ந்ததாகவே உள்ளது. சுமார் 49 சதவிகித மக்கள் நேரடியாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். கடந்த காலத்தில் விவசாயத்துக்கும் ஊரக வளர்ச்சிக்கும் கவனம் செலுத்தி அரசுகள் பல முயற்சிகளை தொடர்ச்சியாக எடுத்தன. எனினும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் மற்றும் ஊரக இந்தியாவில் வாழ்கின்ற மக்கள் இப்பொழுதும் பரிதாபமான வறுமை நிலையிலேயே உள்ளனர். வசதிகள் ஏதுமற்ற வாழ்க்கை நிலையையே மேற்கொண்டு வாழ்கின்றனர். தேவையான சுகாதார மற்றும் கல்வி வசதிகளுடன் ஊரக மற்றும் சமூக உள்கட்டமைப்பு வசதிகளை அவர்களுக்கு ஏற்படுத்தித் தரவேண்டும். நிதிஅமைச்சர் மிகச்சரியாக விவசாயத்தையும் ஊரகப் பொருளாதாரத்தையும் வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தியுள்ளார். 2022ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருமானத்தை இரட்டிப்பாக்கவேண்டும் என்ற பிரதம மந்திரியின் விருப்பத்திற்கு ஏற்ப நிதி அமைச்சர் விவசாயிகளுக்கு அதிக வருவாயை ஈட்டித்தருவதற்கு முக்கியத்துவம் அளித்துள்ளார். குறைந்த செலவில் அதிக உற்பத்தி பெறுதல் மற்றும் உற்பத்தி செய்த பொருள்கள் மூலம் அதிக வருவாய் ஈட்டுதல் ஆகிய இரண்டையும் அடைவதற்கு விவசாயிகளுக்கு உதவிகள் செய்யப்படும் என நிதிஅமைச்சர் கூறியுள்ளார். தாங்கள் விளைவிக்கும் பொருள்களுக்கு விவசாயிகள் நியாயமான

விலையைப்பெறுவது என்பது இதற்கு அடிப்படைத்தேவையாகும். அதே போன்று சந்தைகளுக்கு இடையில் தொடர்பை வலுப்படுத்துவதும் முக்கியமானதாகும்.

இந்த விஷயங்களைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு அதன் அடிப்படையில் நிதி அமைச்சர் காரீஃப் பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதார விற்பனை விலை (எம்.எஸ்.பி) என்பது உற்பத்திச்செலவைவிட 1.5 மடங்கு இருக்கவேண்டும் என முன்மொழிந்துள்ளார். இது 23 வகையான உற்பத்திப்பொருட்களுக்கும் பொருந்தும். வேளாண்சந்தை மற்றும் உள்கட்டமைப்பு வசதி நிதியத்துக்கு நிதிஅமைச்சர் ரூ.2,000 கோடி தொகையை ஒதுக்கியுள்ளார். வேளாண் விளைபொருள்கள் விற்பனையை மேம்படுத்து வதற்காக ஆப்பரஷேன் கிரீன் (பசுமை இயக்கம்) செயல்படுத்தப்பட உள்ளது. இதற்காக ரூ.500 கோடி தனியாக ஒதுக்கப்பட்டுள்ளது.

விவசாயக்கடன் வசதிகள் விவசாயிகளை தங்களது பணியைத் தொடர்ந்து செய்ய உதவுகின்றன. பெரும்பான்மையான விவசாயிகள் சிறுவிவசாயிக ளாகவும் விளிம்பு நிலை விவசாயிகளாகவும் இருப்பதால் இந்தக்கடன் வசதிகள் அவர்களின் உற்பத்தித்திறனை அதிகரிக்க உதவும். விவசாயக்கடன்களுக்கான இலக்கு 8.5 இலட்சம் கோடியில் இருந்து 11 இலட்சம் கோடி என உயர்த்தப்பட்டுள்ளது. இது விவசாயிகளுக்குப் பெரும் உதவியாக இருக்கும். அதிலும் குறிப்பாக சிறு விவசாயிகள் மற்றும் விளிம்புநிலை விவசாயிகள் இதனால் பெரும் உதவி பெறுவார்கள். அதே சமயம் யாருக்கு கடன் தேவை என்று கண்டறிந்து இலக்கு நிர்ணயிக்கப்படுகிறதோ அவர்களுக்குச் சரியாக கடன் போய்ச்சேர்வதை உறுதிப்படுத்த வேண்டிய தேவை உள்ளது. அதற்கான முயற்சிகளும் முறையாக மேற்கொள்ளப்படவேண்டும். இது வரையில் கூறிய திட்ட முன்மொழிவுகளோடு நிதிஅமைச்சர் விவசாயக்கடன் அட்டை வசதியை மீன்வளம் மற்றும் கால்நடைப் பராமரிப்பு போன்ற துணைப் பிரிவுகளுக்கும் விரிவுபடுத்தியுள்ளார். மீன்பிடித்தல் மற்றும் மீன்வளர்த்தல் மேம்பாட்டு நிதியத்துக்கு ரூ.10,000 கோடியும், கால்நடை பராமரிப்பு நிதியத்துக்கு ரூ.10,000 கோடியும் ஒதுக்கி நிதியங்களை ஏற்படுத்த இருப்பது கவனத்துக்குரிய நடவடிக்கைகள் ஆகும். இத்தகைய நிதியங்களை உருவாக்குவதன் மூலம் இந்தத்தொழில்களில் ஈடுபட்டுள்ளோர் பலன் பெறுவார்கள். மேலும் அவர்களது வருமானமும் அதிகரிக்கும்.

தற்போதுள்ள 22,000 ஊரகச்சந்தைகளை தரம் உயர்த்தி கிராமிய வேளாண் சந்தைகளாக (கிராம்ஸ்) மாற்றுதல் என்ற நிதிஅமைச்சரின் அறிவிப்பு சிறு மற்றும் விளிம்புநிலை விவசாயிகளில் 86 சதவிகிதத்துக்கும் அதிகமானவர்களின் நலன்களைக் கவனத்தில் எடுத்துக்கொண்ட அறிவிப்பாக உள்ளது. மேலும் ரூ.1,290 கோடி முதலீட்டில் 42 மாபெரும் உணவுப்பூங்காக்கள் அமைக்க இருப்பது விவசாயத்தின் உற்பத்தித்திறனை அதிகரிக்க பெரும் உதவியாக இருக்கும். அறுவடைக்குப் பின்பான வரி மான்யம் மற்றும் விவசாயப்பொருள்கள் தயாரிக்கும் கம்பெனிகளுக்கு 100 சதவிகித தள்ளுபடி ஆகியன விவசாய விளைபொருள்களின் உற்பத்தியை அதிகரிக்கும். மேலும் விவசாய விளைபொருள்களை 100 பில்லியன் டாலர் மதிப்புக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பையும் இலக்காகக்கொண்டு முன்னேறமுடியும். இது காலம் செல்லச்செல்ல விவசாயிகளுக்கு வருமானத்தை அதிகரிக்கும். விவசாயிகள் தங்களது வயல்களுக்கு நீர் பாய்ச்ச சூரிய நீரேற்று பம்ப்புகளை பயன்படுத்த உதவும் வகையிலான பட்ஜெட் / ஒதுக்கீடு பாராட்டத்தக்க அம்சமாகும். விவசாயக் கடன்அட்டைகள் வசதியை மீன்வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கும் விரிவுபடுத்தியுள்ளது என்பது அவர்களின் மூலதனத்தேவைகளை நிறைவுசெய்ய உதவுவதோடு அவர்களது வருமானத்தை அதிகரிக்கவும் உதவும்.

### 3. ஊரகப்பொருளாதாரம்

பல்வேறு திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள் மூலமாக ஊரகப்பொருளாதாரத்தில் வறுமையை நீக்குவதற்கு நிதிஅமைச்சர் தீவிரமான முயற்சியை எடுத்துள்ளார். பட்ஜெட்டின் மனிதநேய அணுகுமுறையாக இந்த முயற்சியானது உள்ளது. ஏழை மற்றும் கீழ்நிலை மத்தியதரக்குடும்பங்களின் நல்வாழ்வு மீது நிதிஅமைச்சர் அக்கறை எடுத்துக்கொண்டுள்ளார். ஏழைப்பெண்களுக்கு உஜ்வாலா திட்டத்தின் கீழ் 8 கோடி இலவச சமையல் எரிவாயு இணைப்பு தரப்பட உள்ளது. சௌபாக்யா திட்டத்தின் கீழ் 4 கோடி ஏழை வீடுகளுக்கு இலவச மின்இணைப்பு தரப்பட உள்ளது. இந்தத்திட்டத்திற்காக ரூ.16,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டமானது எரிபொருள் எரிக்கப்படுவதைக் குறைக்கிறது; விறகுக்காக மரம் வெட்டப்படுவதைக் குறைக்கிறது. மேலும் பெண்களின் சிரமமும் குறையும். 2022 ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் வீடு என்ற இலக்கைப் பூர்த்திசெய்யும் வகையில் 2019ஆம் ஆண்டுக்குள் ஊரகப்பகுதிகளில் ஒரு

கோடி வீடுகளுக்கு மேல் கட்டப்படும். தூய்மை இந்தியா இயக்கத்தின் கீழ் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட 6 கோடி கழிவறைகளோடு புதியதாக 2 கோடி கழிவறைகள் கட்டப்படும். இவை வரவேற்கப்படக்கூடிய நடவடிக்கைகள் ஆகும். அதே போன்று தேசிய வாழ்வாதாரத் திட்டத்திற்கு ரூ.5,750 கோடியும் சமூகப்பாதுகாப்பு திட்டங்களுக்கு 2018-19ஆம் ஆண்டு ரூ.9,975 கோடியும் ஒதுக்கப்பட்டு இருப்பது பாராட்டுக்குரிய அம்சங்கள் ஆகும். இத்தகைய திட்டங்கள் இந்தியப்பெண்களுக்கு கௌரவம் அளிக்க உதவுபவையாக இருக்கும்.

இருந்தபோதிலும், திட்டங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துதல் என்பது இல்லாத போது நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைய முடியுமா என்ற சந்தேகமானது தோன்றியுள்ளது. அடிமட்ட நிலையிலேயே ஊழல் இருப்பது பயன் பெறக்கூடிய மக்களிடம் நலத்திட்டங்கள் சென்று சேர்வதைப் பாதிக்கிறது.

## 4. கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப்பாதுகாப்பு

நீடித்த மற்றும் நிலையான சமூகத்தைக் கட்டமைப்பதற்கு நாட்டின் கல்வியும் சுகாதாரநிலையும் மிகவும் முக்கியமானவையாகும். கல்வியானது மனித வளத்தைப் பயன்படுத்தி அதன் மூலம் நாட்டின் செல்வவளம் அதிகரிக்க உதவுகிறது. கூடவே நல்ல வாழ்க்கைக்கான வருமானத்தையும் தருகிறது. அதே நேரம் சிறப்பான சுகாதாரப்பராமரிப்புக்கான வசதிகள்தான் அத்தகைய மனித வளத்தை நீடித்து இருக்கச்செய்கின்றன. ஆரோக்கியம் என்பதுதான் உலகுக்கு இயற்கை கொடுத்துள்ள மிக முக்கியமான கொடைகளுள் ஒன்றாகும். நிதி அமைச்சர் கல்வி, சுகாதாரம் மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய அம்சங்களுக்கு கூடுதல் கவனம் செலுத்தியுள்ளார் என்பது மகிழ்ச்சிக்குரியதாகும். நிதிஅமைச்சர் சுகாதாரத்துறைக்கு உள்நாட்டு மொத்த உற்பத்தியில் செய்துள்ள நிதிஒதுக்கீட்டு சதவிகிதம் என்பது மற்ற பிரிக் நாடுகளுடன் ஒப்பிட்டுப்பார்த்தால் குறைவானதே ஆகும். இந்தியாவில் சுகாதாரத்துறைக்கான செலவு ஜி.டி.பி.யில் 1.4 சதவிகிதம் ஆகும். ஆனால் சீனாவில் இது 3.2 சதவிகிதமாக உள்ளது.

கல்வியில் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக நிதிஅமைச்சர் ஒரு இலட்சம் கோடி ஒதுக்கியுள்ளார். திட்டமிடுதல் மற்றும் கட்டிடக்கலைக்காக இரண்டு புதிய பள்ளிகளை நிர்மாணித்தல்; ஒவ்வொரு மூன்று பாராளுமன்றத் தொகுதிகளுக்கும் ஒரு மருத்துவக்கல்லூரி தொடங்கப்படும் என்ற அறிவிப்பு; புதியதாக 24 மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படும் என்ற அறிவிப்பு, மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைகளைத் தரம் உயர்த்துதல் ஆகியன நாட்டில் மருத்துவக்கல்வியும் மருத்துவச்சேவை வசதிகளும் அருகிலேயே கிடைக்கச்செய்யும். அதே போன்று 2020ஆம் ஆண்டுக்குள் 50 இலட்சம் இளைஞர்களுக்கு உதவித்தொகைகள் வழங்கப்படும் என்ற அறிவிப்பு நடுநிலை மற்றும் கீழ்நிலை மத்தியதர வர்க்கத்தினரின் தகுதி வாய்ந்த இளைஞர்கள் உயர்கல்வி கற்க உதவியாக இருக்கும். இதில் ஐரோப்பிய பாரம்பரிய மருத்துவக்கல்லூரிகளில் பயிலும் மருத்துவக்கல்வியும் உள்ளடங்கும்.


ஆயுஷ்மன் பாரத் திட்டத்தின் கீழ் ரூ.1,200 கோடி ஒதுக்கீட்டில் வீட்டுக்கு அருகிலேயே மருத்துவ வசதிகள் கிடைக்கும் வகையில் 1.5 இலட்சம் மையங்கள் அமைக்க இருப்பதாகத் தெரிவிக்கும் பட்ஜெட் அறிவிப்பு பாராட்டப்பட வேண்டிய அம்சமாகும்.

பட்ஜெட்டில் நிதிஅமைச்சர் அறிவித்துள்ள தேசிய சுகாதார பாதுகாப்புத்திட்டம் என்று பெயரிடப்பட்டுள்ள சுகாதார பராமரிப்புத்திட்டமானது அரசு நிதியில் செயல்படுத்தப்பட உள்ள உலகின் மிகப்பெரிய திட்டமாக இருக்கும். இந்தத் திட்டத்தின் கீழ் 10 கோடிக்கும் அதிகமான ஏழை மற்றும் பாதிப்பு அடையக்கூடிய குடும்பங்கள் பயன்பெறும். அதாவது 10 கோடி குடும்பங்களில் இருந்து தோராயமாக 50 கோடி பயனாளிகள் இந்தத்திட்டத்தின் கீழ் வருவார்கள். இரண்டாம் நிலை மற்றும் புறநிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறுவதற்கு ஒரு குடும்பத்துக்கு ஓராண்டில் ரூ.5 இலட்சம் ரூபாய் காப்பீடாகக் கிடைக்கும். இது பாராட்டத்தக்க ஒரு நடவடிக்கை ஆகும். இது காப்பீட்டு வணிகம் மேம்பட உதவுவதோடு நாட்டில் வேலை வாய்ப்புகளையும் உருவாக்கும்.

சுகாதாரச்சேவைகளை வழங்குவதற்கு 1.5 இலட்சம் மையங்களை உருவாக்குவது, மருத்துவக்கல்லூரிகள் ஏற்படுத்துவது மற்றும் அரசு நிதி உதவியில் சுகாதாரப் பராமரிப்பு திட்டங்களைச் செயல்படுத்துவது ஆகியவை கூடுதலான வேலை வாய்ப்புகளை உருவாக்கும். அதே சமயம் நாட்டுமக்களின் ஆரோக்கியமும் காக்கப்படும். இவை பல்வேறு பிராந்தியங்களில் வசிக்கும் மக்கள் அருகிலேயே தரமான மருத்துவ சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள உதவும். இதற்காக அவர்கள் பெருநகரங்களுக்குச் செல்லவோ அல்லது சிரமங்களை அனுபவிக்கவோ தேவையில்லை.

பிரதமமந்திரி மக்கள் நிதித்திட்டத்தின் கீழ்

தொடங்கப்பட்ட அனைத்து 16 கோடி வங்கிக்கணக்குகளையும் நுண் காப்பீடு மற்றும் ஓய்வூதியத்திட்டங்களில் சேர்ப்பது என்ற அம்சம் சிறப்பான சிந்தனையின் வெளிப்பாடாக உள்ளது. அனைவரையும் உள்ளடக்கும் திட்டங்களின் கீழ் தாழ்த்தப்பட்டோர் நல்வாழ்வுக்கு ரூ.52,719 கோடியும் பழங்குடியினர் நல்வாழ்வுக்கு ரூ.39,139 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதிஒதுக்கீடானது தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கு உதவியாக இருக்கும். தாழ்த்தப்பட்டோர் மக்கள் தொகை 50 சதவிகிதத்துக்கும் அதிகமாக இருக்கும் ஒன்றியங்களில் நவோதயா வித்யாலயா போன்று ஏகலைவா பள்ளிகள் தொடங்கப்படும். புதிய ஊழியர்களுக்கு அதிகாரம் அளிப்பதற்காக தொழிலாளர் வருங்கால வைப்புநிதியில் அடுத்த 3 ஆண்டுகளுக்கு அனைத்துத் தொழில்பிரிவுகளிலும் உள்ளோர் தங்களது சம்பளத்தில் 12 சதவிகிதத்தைப் பங்களிப்பாக செலுத்தவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. பெண் ஊழியர்களுக்கு முதல் 3 ஆண்டுகளுக்கு இந்தப்பங்களிப்பு 8 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டு உள்ளது.




## 5. உள்கட்டமைப்பு வசதி மற்றும் தொழில்துறை

பொருளாதார வளர்ச்சிக்கான நெம்புகோலாக உள்கட்டமைப்பு வசதிகள் இருப்பதால் இந்த உள்கட்டமைப்பு வசதிகளில் முதலீடு செய்ய பிற துறைகளுக்குத் தரப்படும் முக்கியத்துவத்துக்குச் சமமான முக்கியத்துவத்தை நிதிஅமைச்சர் அளித்துள்ளார். உள்கட்டமைப்பு வசதிகளுக்கான பட்ஜெட் ஒதுக்கீடு 2018-19ஆம் ஆண்டுக்கு ரூ.5.97 இலட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது என அவர் அறிவித்துள்ளார். சாலைகள், விமானநிலையங்கள், ரெயில் பாதைகள், துறைமுகங்கள், உள்நாட்டு நீர்வழிகள் ஆகிய வலைப்பின்னல்களின் மூலம் தேசத்தை இணைப்பதற்காக இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலாவை மேம்படுத்துவதற்கு பத்து முக்கியமான சுற்றுலாத்தலங்களை பிரபலமான அடையாளச் சுற்றுலாத்தலங்களாக மாற்றுவதற்கு பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. உள்கட்டமைப்பு வசதி மற்றும் திறன்மேம்பாடு, தொழில்நுட்ப அபிவிருத்தி. தனியார் முதலீட்டை ஈர்த்தல், பிராண்டிங், சந்தைப்படுத்துதல் ஆகியவற்றை உள்ளடக்கிய முழுமையான அணுகுமுறை மூலம் இது மேற்கொள்ளப்படும். இவை எல்லாம் வரவேற்கத்தக்க அறிவிப்புகள் ஆகும். இவை வேலை வாய்ப்புகளை உருவாக்குவதோடு வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

ரெயில்வே துறை, விமானப்போக்குவரத்து மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மின்னணு மயமாக்குதல் ஆகியவற்றுக்கு மிகப்பெரிய அளவில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆளில்லாத ரெயில்வே கிராஸிங்குகளை நீக்குதல், தானியங்கி படிக்கட்டுகளை கட்டமைத்தல், வைஃஃபை மற்றும் சி.சி.டி.வி கேமரா அமைத்தல் போன்றவை உள்ளிட்ட நடவடிக்கைகளுக்கு ரெயில்வே துறைக்கு ஒதுக்கீடு ரூ.1.48 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மும்பை ரெயில் நெட்வொர்க்குக்கு ரூ.11,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பெங்களூரு மெட்ரோ இரயில் சேவைக்கு ரூ.17,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதிஒதுக்கீடு இந்த மெட்ரோ நகரங்களின் தேவைகளைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளும்.

கிராமங்களில் பிராட்பேண்ட் வசதி கிடைப்பதை மேலும் விரிவாக்குவதற்கு ஐந்து இலட்சம் வைஃஃபை ஹாட்ஸ்பாட்டுகள் அமைக்க அரசு முன்மொழிந்துள்ளது. இது ஐந்து கோடி ஊரகக் குடிமக்களுக்கு இணைய இணைப்புகளை வழங்கும். தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கவும், விரைவுபடுத்தவும் 2018-19ஆம் ஆண்டுக்கு ரூ.10,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது அரசின் டிஜிட்டல் இந்தியா திட்டத்துக்கு உதவியாக இருக்கும்.

99 சதவிகித நிறுவனங்களை உள்ளடக்கிய குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் (எம்.எஸ்.எம்.இ) மீது நிதி அமைச்சர் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளார். இத்தொழில் பிரிவில் கடன் அளிக்க உதவி, மூலதனம் மற்றும் முதலீட்டு மானியம், புத்தாக்கங்கள் ஆகியவற்றுக்கு ரூ.3,794 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை மற்றும் இயந்திரம் / உபகரணங்கள் ஆகியவற்றில் முதலீடு ஆண்டுக்கு ரூ.50 கோடி என்ற அடிப்படையில் எம்.எஸ்.எம்.இ வகை பிரிக்கப்பட்டன. இப்போது இது, ஆண்டுத் தொழில்தொகை 250 கோடி என இருந்தால் வரி விகிதம் 25 சதவிகிதம் எனக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த மாற்றம் வர்த்தகம்

செய்வதில் எளிமையை ஏற்படுத்தும், வளர்ச்சி சார்ந்ததாகவும் ஜிஃஎஸ்ஃடியை மையமாகக் கொண்டதாகவும் உள்ள புதிய வரி விதிப்பு முறைக்கு இசைந்ததாக செயல்படும். நிதிஅமைச்சர் எம்.எஸ்.எம்.இக்களுக்கு ரூ.3 இலட்சம் கோடிக்கும் அதிகமாக முத்ரா கடன்களை அறிவித்துள்ளார். 2018-19ஆம் ஆண்டுக்கு ஜவுளித்துறைக்கு ரூ.7,148 கோடி ஒதுக்கீடு என்பது வேலைவாய்ப்புகளை உருவாக்குவதோடு வளர்ச்சிக்கும் வழிவகுக்கும்.

## 6. வேலைவாய்ப்பு

படித்த இளைஞர்களிடம் வேலைவாய்ப்பின்மை அதிக அளவில் இருக்கிறது. இது உடனடியாக கவனம் செலுத்த வேண்டிய ஒன்றாக இருக்கிறது. 70 இலட்சம் முறைசார் வேலைகளை உருவாக்கும் வேலைவாய்ப்புத் திட்டத்திற்கு இந்த ஆண்டின் பட்ஜெட் மிகச் சரியான கவனம் செலுத்தியுள்ளது. உள்கட்டமைப்பு வசதி, சாலை, ரெயில்வே, விமானநிலையங்கள், ஹெலிபேட், ஊரக உள்கட்டமைப்பு வசதி, ஊரகப்பகுதிகளை நகரப்பகுதிகளோடு இணைத்தல் ஆகியவற்றில் முதலீடு என்பது புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் என்ற கண்ணோட்டத்துடன் அமைந்துள்ளது. புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு பட்ஜெட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பாராட்டும் அதே வேளையில் இந்திய நிதிநிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ள ஆய்வுகளில் ஒன்று பரிந்துரைத்துள்ளபடி தேசிய தொழிலாளர் பரிமாற்றகம் ஒன்றை அமைப்பது குறித்தும் அரசு சிந்திக்கவேண்டும். இந்த ஆய்வானது நாட்டில் உள்ள வேலைவாய்ப்பின்மை என்ற பிரச்சினை குறித்து மேற்கொள்ளப்பட்டதாகும். இதன் முடிவுகள் ஃபைனான்ஸ் இந்தியா இதழில் வெளியிடப்பட்டுள்ளன.

விவசாயம், கல்வி, சுகாதாரம் மற்றும் உள்கட்டமைப்பு வசதி போன்றவற்றில் சமூக நல்வாழ்வுத்திட்டங்களுக்கு அதிக ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது ஆகும். அதே வேளையில், பங்கு விற்பனை மூலமான இலக்கு ரூ.80,000 கோடி என நிர்ணயிக்கப்பட்டு இருந்தபோதிலும் நிதிப்பற்றாக்குறையானது 3.3 சதவிகிதத்திலேயே கட்டுப்படுத்தப்படும் என்றும் கூடுதல் வரிச்சுமை இல்லாமலேயே வளர்ச்சி விகிதமானது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 7.2 சதவிகிதத்தில் இருந்து 7.4 சதவிகிதம் அளவிற்கு உயரும் என்றும் நிதிஅமைச்சர் இலக்கு நிர்ணயித்து இருப்பதும் மேலும் பாராட்டுக்குரியதாகும்.

## 7. வரி விகித முன்மொழிவுகள்

நிலைபேறு பராமரிக்கப்பட வரிவிதிப்பு கொள்கையில் குறைந்தபட்ச மாற்றமே இருக்கவேண்டும் என்றே எப்போதும் அறிவுறுத்தப்பட்டுவருகிறது. அதற்கேற்ப நிதி அமைச்சர் தனிநபர் வருமான வரிவிகிதம் மற்றும் நிறுவன வரிவிகிதத்தில் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை. மாதச்சம்பளம் வாங்குபவர்களுக்கு ஒரே ஒரு நிவாரணமாக போக்குவரத்து படியைத் திரும்பப் பெற்றுக்கொண்டு ரூ.40,000 நிலையான கழிவு என்பதை அறிமுகப்படுத்தியுள்ளார். மூத்தகுடிமக்கள் மீது அக்கறையை வெளிப்படுத்தியுள்ளார். மூத்தகுடிமக்களுக்கு வங்கி மற்றும் அஞ்சலக வைப்புத்தொகை மீது கிடைக்கும் வட்டி வருமானத்துக்கு ரூ.10,000 வரை வரி விலக்கு என்று இருந்ததை 194A பிரிவின் கீழ் ரூ.50,000 வரை வரிவிலக்கு என உயர்த்தப்பட்டுள்ளது. சுகாதாரக் காப்பீட்டுக்கான பிரீமியம் மற்றும் / அல்லது மருத்துவச்செலவை கழித்துக்கொள்வதற்கான வரம்பு 80Dயின் கீழ் ரூ.30,000இல் இருந்து ரூ.50,000 என உயர்த்தப்பட்டு உள்ளது. இது மத்தியதர வர்க்கத்திற்கு கிடைக்கும் மற்றொரு பலன் ஆகும்.

நிதிஅமைச்சர் நீண்டகால மூலதன ஆதாய வரியை பங்கு ஈவின் அடிப்படையில் 10 சதவிகிதம் என்ற விகிதத்தில் மிகச்சரியாக அறிமுகப் படுத்தியுள்ளார். ஏனெனில் இந்த வகைச்சொத்தில் இருந்து கிடைக்கக்கூடிய ரூ.3.6 இலட்சம் கோடி வருமானத்திற்கு வரிவிலக்கு அளிப்பதற்கு எந்த நியாயமான காரணங்களும் இல்லை. எல்.டி.சி.ஜி (நீண்டகால மூலதன ஆதாயங்கள்) மீதான வரி அக்டோபர் 2004க்கு முன்பு இருந்தது போல 20 சதவிகிதம்தான் இருக்கவேண்டும். பரஸ்பர நிதியங்களின் பங்குகள் பிரித்துக்கொடுக்கப்படுவதால் கிடைக்கும் பங்கு ஆதாயங்கள் அனைத்துக்கும் 10 சதவிகிதம் வரி செலுத்தவேண்டும் என பட்ஜெட்டில் வழிமொழியப்பட்டுள்ளது. பரஸ்பர நிதிய அமைப்புகள் தங்களது முதலீட்டாளர்களுக்கு பிரித்துத்தரும் நிகர தொகையை இது குறைக்கும். எல்.டி.சி.ஜி சந்தைகளில் ஏற்படும் பாதகமான எதிர்வினைகள் தேவை இல்லாதவை ஆகும். பெருமளவில் சமூகப் பாதுகாப்புத்திட்டங்களைச் செயல்படுத்த தேவைப்படும் வருவாய்க்காக நிதி அமைச்சர் ஒரு சதவிகித கல்வி வரி (வரி மீது வரி) விதித்துள்ளார்.

இந்த பட்ஜெட் ஒரு கனவு பட்ஜெட்டாக அமைய வரிவிலக்குக்கான குறைந்தபட்ச வரம்பான ரூ.3 இலட்சம் என்பதை உயர்த்துவதன் மூலம் வரக்கூடிய வருவாய் ரூ.15,000 கோடியை இழப்பது என்பது சுட்டிக்காட்ட வேண்டிய முக்கிய அம்சமாகும்.

இதனை எல்.டி.சி.ஜி மீதான வரியை 20 சதவிகிதம் என உயர்த்துவதன் மூலம் ஈட்டலாம்.

வளர்ச்சியையும் வேலைவாய்ப்பையும் மேம்படுத்த உதவும் வகையில் ரூ.250 கோடி வரை ஆண்டுத்தொழில் தொகை உள்ள எம்.எஸ்.எம்.இ தொழில் பிரிவுகளுக்கான நிறுவனவரி 25 சதவிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த வரிக் குறைப்பும் தனிநபர் வரிவிதிப்பில் நிவாரணமும் சேர்ந்து மொத்தமாக ரூ.5,995 கோடி வருவாய் இழப்பை ஏற்படுத்தும்.

இருந்தபோதிலும், ‘‘இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள்‘‘ என்ற இயக்கத்தை மேம்படுத்தவும் வருவாய் சார்ந்த கரிசனத்திலும் நிதிமைச்சர் பல்வேறு பொருட்களுக்கான சுங்கவரியை 2.5 சதவிகிதத்தில் இருந்து 10 சதவிதமாக அதிகரித்துள்ளார். வாசனைத்திரவியங்கள் மற்றும் டாய்லெட் உபயோகப் பொருட்கள் (10%), வாகனங்கள் மற்றும் வாகன உதிரிபாகங்கள் (5%), காலணிகள் (10%), கவரிங் நகைகள் (5%), எலெக்ட்ரானிக்ஸ் / வன்பொருட்கள் (5%), மரச் சாமான்கள் (10%), கைக்கடிகாரங்கள் மற்றும் கடிகாரங்கள் (10%), பொம்மைகள் மற்றும் விளையாட்டுப்பொருட்கள் (10%), ஜவுளிகள் (10%), தாவரங்களில் இருந்து தயாரிக்கப்பட்ட சமையல் எண்ணெய் (15% முதல் 17.5% வரை), போன்ற பொருள்களுக்கு சுங்கவரி உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் அதே சமயம் சில பொருள்களுக்கான சுங்கவரியையும் நிதிஅமைச்சர் குறைத்துள்ளார். மூலதனப் பொருள்கள் மற்றும் எலெக்ட்ரானிக்ஸ் (5%), மருத்துவ உபகரணங்கள் (2.5%), வெப்பம் கடத்தாத பொருள்கள் (2.5%), என சில பொருள்களுக்கு சுங்கவரி குறைக்கப்பட்டுள்ளது. இதன் பயனாக சுங்கவரி அதிகரிக்கப்பட்டுள்ள பொருள்களின் விலை அதிகமாக இருக்கும். அதே சமயம் சில பொருட்களின் விலை மிகவும் குறைவாக இருக்கும்.

### முடிவுரை:

இந்த பட்ஜெட்டை தாக்கல் செய்ததன் மூலம் நிதிஅமைச்சர் மிகச்சிறப்பான பணியை நிறைவேற்றியுள்ளார். ஒட்டுமொத்தமாகப்பார்த்தால், சந்தைப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட முறையில் இருந்து மடைமாறி சமூக நலவாழ்வுக் கண்ணோட்டத்தில் பட்ஜெட் அமைந்திருப்பது வரவேற்கத்தக்க ஒரு மாற்றமாகும். இதன் மூலம் அரசாங்கம் நாட்டின் 80 சதவிகித மக்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களைக் கவனத்தில் கொண்டுள்ளது.

மத்திய பட்ஜெட் 2018-19ஆனது மக்கள் சார்பான பட்ஜெட் ஆக உள்ளது. இந்தப் பட்ஜெட்டை முற்போக்கானது, அனைத்து தரப்பினருக்கும் சமநிலையில் இருப்பது, பெரும்போக்கில் இருந்து மாறுபட்டு இருப்பது எனக்குறிப்பிடலாம். மக்களின் விருப்பங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கலாம். விவசாயம், ஊரகமேம்பாடு, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் முதலீடு ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் இது வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட பட்ஜெட் என நிரூபிக்கப்படும். குறைந்த செலவில் வீட்டுவசதி வழங்குவதை மேம்படுத்த நிதிஅமைச்சர் சரியான முயற்சிகளை எடுத்துள்ளார். இந்த முயற்சி ரியல் எஸ்டேட் தொழிலுக்கு ஊக்கமாக இருக்கும். அதே போன்று வளர்ச்சிக்கும் வழிகோலும். மின்னணு பொருளாதாரத்தை மேம்படுத்தும் வர்த்தகத்தை மேற்கொள்வதில் எளிமை தரும் நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டுள்ளார். வேளாண்மை மற்றும் தொழில்துறையில் நிலவும் தேக்க நிலையை அரசின் மிக அதிகமான செலவு ஒதுக்கீடு தலைகீழாக மாற்றிவிடும்.

அமைப்புச் சீர்திருத்தங்களுக்கான தேவை இப்போது உள்ளது. விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கவும் தொழில்நுட்பம் சார்ந்த ஒன்றாக விவசாயத்தை ஒட்டுமொத்தமாக மாற்றி அமைக்கவேண்டிய தேவையும் இப்போது உள்ளது. ஆனால் அது பட்ஜெட் திட்டங்களில் ஒரு அங்கமாக சேர்க்கப்பட்டு இருக்கவில்லை. அதே போன்று அனைத்து நிலைகளிலும் கல்வியானது மறுசீரமைக்கப்பட வேண்டும். சட்டம் மற்றும் நீதிமன்ற சீர்திருத்தங்கள் அமைய அமைப்புரீதியான மாற்றங்கள் தேவைப்படும். தற்போதைய அமைப்பு முறை பொருளாதாரம் மக்களின் தேவைகள் ஆகியவற்றிற்கு ஏற்ப செயல்பட முடியாமல் உள்ளது. வழக்கமான முறையில் இல்லாமல் புத்தாக்க முறையில் இதற்கான தீர்வைப்பற்றி நிதிஆயோக் யோசித்து செயல்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது. தற்போது இருப்பதுடன் மேலும் அதிகமாக சேர்த்துக்கொள்வது என்ற அணுகுமுறையோ அல்லது இருக்கின்ற அமைப்பை மேலும் சீராக்கிக் கொள்ளுதலோ நாம் எதிர்பார்க்கக் கூடிய விளைவுகளைத் தராது என்றே கூறலாம்.

மத்திய பட்ஜெட் 2018-19 என்பது வறுமையை நீக்கும், விவசாயிகளைக் காக்கும் பட்ஜெட் எனக் கூறலாம்.

---

- **பேராசிரியர் ஜே.டி.அகர்வால்,** கிரேட்டர் நொய்டாவில் உள்ள இந்திய நிதி நிறுவனத்தில் நிதியியல் துறையில் மதிப்புறு பேராசிரியராகவும் தலைவராகவும் பணிபுரிகிறார்.

●

# வளரும் இந்தியாவில் முன்னேறத்துடிக்கும் மாவட்டங்கள்- ஒரு வளர்ச்சிப்பயணம்

- அமிதாப் காந்த்

வலிமை மிக்க வளர்ச்சிப்பாதையில் இந்தியா பயணித்துக்கொண்டிருக்கிறது. 2018-ஆம் ஆண்டில் உலகில் மிகவும் வேகமாக முன்னேறும் நாடு என்ற பெருமையை இந்தியா மீண்டும் பிடிக்கும் என்று உலக வங்கி, மூடி'ஸ் முதலீட்டாளர்கள் சேவை நிறுவனம் உள்ளிட்ட பன்னாட்டு நிறுவனங்கள் கணித்துள்ளன. உலகவங்கி அண்மையில் வெளியிட்ட எளிதாக வணிகம் செய்ய ஏற்ற நாடுகளின் பட்டியலில் இந்தியா 42 இடங்கள் முன்னேறியிருக்கிறது. இந்த அளவுக்கு முன்னேற்றம் கண்ட ஒரே நாடு இந்தியா தான் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி வாய்ப்புகள் சாதகமாக இருக்கும் நிலையில் நமது சமூகத்துறை கடுமையான வளர்ச்சி சவால்களை எதிர்கொண்டுவருகிறது. ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டநிறுவனம் வெளியிட்ட 2016ஆம் ஆண்டுக்கான மனித வளர்ச்சிக் குறியீட்டுப்பட்டியலில் மொத்தமுள்ள 188 நாடுகளில் இந்தியா 131-ஆவது இடத்தில் உள்ளது. அதேபோல், உலகப் பட்டினிப்பட்டியலில் மொத்தமுள்ள 119 நாடுகளில் இந்தியா 100-ஆவது இடத்தில் உள்ளது. அண்மையில் நடத்தப்பட்ட தேசிய குடும்ப நலக்கணக்கெடுப்பில் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு 2 பெண்களிலும் ஒருவர் ஊட்டச்சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளனர்; ஒவ்வொரு 3 குழந்தைகளில் ஒன்று வளர்ச்சிக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளது; ஒவ்வொரு 4 குழந்தைகளில் ஒன்று சத்துக்குறைவால் பாதிக்கப்பட்டுள்ளது; ஒவ்வொரு 5 குழந்தைகளிலும் ஒன்று பலவீனமாக உள்ளது என்று தெரியவந்துள்ளது. கற்றல் தொடர்பான பல்வேறு ஆய்வுகளின் முடிவுகளும் கவலையளிக்கும் வகையில் தான் உள்ளன. எனினும் இந்த புள்ளிவிவரங்களை ஆழமாக ஆராய்ந்தால், இவை குறித்த நிலைமை வேறுவகையாகவும், அச்சப்பட வேண்டிய நிலையில் இல்லாமலும் உள்ளன. உதாரணமாக வளர்ச்சி குறைந்த குட்டைக் குழந்தைகளின் சதவீதம் கேரளத்தில் 19.7 ஆகவும், பிகாரில் 48.3 ஆகவும் உள்ளது; எடை குறைந்த குழந்தைகளின் சதவீதம் மிசோராமில் 11.90 ஆகவும், ஜார்க்கண்டில் 47.80 ஆகவும் உள்ளது; 1000 பிரசவங்களில் குழந்தைகள் இறப்புவிகிதம் அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளில் 10 ஆகவும், உத்தரப்பிரதேசத்தில் 64 ஆகவும் உள்ளது; ஒரு இலட்சம் பிரசவங்களில் தாய்மார்கள் இறப்பு விகிதம் கேரளத்தில் 61 ஆகவும், அஸ்ஸாமில் 300 ஆகவும் உள்ளது; ஐந்தாம் வகுப்பு கணிதத்திற்கான தேசிய சாதனைக் கணக்கெடுப்பில் தமிழ்நாடு 56 விழுக்காடும், சத்தீஸ்கர் 32 விழுக்காடும் மதிப்பெண் பெற்றுள்ளன; அதேபோல் படித்து புரிந்து கொள்வதில் தமிழ்நாடு 56 விழுக்காடும், பிகார் 29 விழுக்காடும் பெற்றுள்ளன; வீடுகளைப் பொறுத்தவரை 5 மாநிலங்கள் 100% இலக்கையும் ஜார்க்கண்ட் குறைந்தபட்சமாக 40 விழுக்காட்டையும் எட்டியுள்ளன. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் நாடு முழுவதும் 200 மாவட்டங்கள் தேசிய சராசரியிலிருந்து பின்தங்கியுள்ளன.

இனிவரும் காலங்களில் பல்வேறு அரசுத் திட்டங்களை இயக்கமாக குவித்து செயல்படுத்துதல், மாவட்ட அளவில் பணிகள் நடக்கும்போதே அவற்றைக் கண்காணித்தல் உள்ளிட்ட நடவடிக்கைகள் தான், அடுத்த 3 முதல் 5 ஆண்டுகளில் இந்தியாவின் சிறந்த மாவட்டங்களுக்கு இணையாக இந்த மாவட்டங்களும் முன்னேறுவதற்கு வகைசெய்யும்.

பொருளாதாரம், சமூகம் ஆகிய இரு வளர்ச்சிக் குறியீடுகளில் நாட்டின் பல்வேறு நிலப்பகுதிகளில் காணப்படும் மிகப்பெரிய அளவிலான பாகுபாடு கடந்த 1960ஆம் ஆண்டுகளில் இருந்தே கொள்கை வகுப்பாளர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. அவ்வாறு அடையாளம் காணப்பட்ட பின்தங்கிய மாவட்டங்கள் பெரும்பாலும் பிரிக்கப்படாத பிகார், மத்தியப் பிரதேசம், உத்தரப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களின் அங்கமாகவே இருந்தன. இப்பகுதிகளின் வளர்ச்சிக்காக அமைக்கப்பட்ட குழுக்களின் ஒவ்வொரு பரிந்துரையும் பிரிவு சார்ந்ததாகவும், நிலப்பகுதி சார்ந்ததாகவுமே அமைந்திருந்தன. திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஒருங்கிணைப்பு குறைவாகவும், மையப்படுத்தப்பட்ட கண்காணிப்பு அறவே இல்லாமலும் இருந்தன. இந்தப்பகுதிகளின் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியில் ஒருபகுதி மட்டும் தான் சம்பந்தப்பட்ட பகுதிகளை சென்றடைவதாக குழுக்களின் அறிக்கைகளில் கூறப்பட்டிருந்தது. செயல்படுத்தப்படும்

திட்டங்களின் முன்னேற்றம் குறித்த நம்பத்தகுந்த, நிகழ்நேரத் தகவல்களை பெறுவது பெரும் சவாலாக உள்ளது. இதில் மற்றொரு பிரச்சினை என்னவென்றால், ஒரு குறிப்பிட்ட அளவில் அனைவருக்கும் பொருந்தக்கூடிய கொள்கைகளை வகுக்கும் அணுகுமுறை கடைபிடிக்கப்படுவதுதான். பலவிதமான நிலப்பரப்பு, கலாச்சாரம், நம்பிக்கைகள் உள்ள இந்தியாவில், ஒட்டுமொத்தக் கொள்கை வரம்புக்குள் அந்தந்தப் பகுதிக்கு ஏற்றவாறு கொள்கைகளை மாற்றியமைத்து செயல்படுத்துவது தான் தீர்வாக அமையும். இறுதியாக, போலியோ ஒழிப்பு போன்ற வெற்றிகரமான திட்டங்கள் மக்கள் பங்களிப்புடன் சாதிக்கப்பட்டன என்பதிலிருந்து மக்கள் பங்களிப்பு இல்லாமல் பின்தங்கிய மாவட்டங்களின் முன்னேற்றம் சாத்தியமல்ல என்ற பாடத்தை நாம் அறிந்து கொள்ளவேண்டும். இதையே வேறு வார்த்தைகளில் குறிப்பிட வேண்டுமானால் மக்கள் இயக்கங்களின் மூலமாகத் தான் இந்த பின்தங்கிய மாவட்டங்களை முன்னேற்றமுடியும்.

வளர்ச்சிப்பயணத்தில் கற்றுக்கொண்ட பாடங்களை கருத்தில் கொண்டு 'முன்னேறத் துடிக்கும் மாவட்டங்களின் வளர்ச்சிக்கான திட்டத்தை' இந்தியஅரசு அண்மையில் தொடங்கியது. 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தின் 75ஆவது ஆண்டு விழாவையொட்டி 09.08.2017 அன்று மாவட்ட ஆட்சியர்களுடன் காணொளிக் காட்சி மூலம் கலந்துரையாடிய மாண்புமிகு பிரதமர் அவர்கள், "இந்தியாவின் மிகவும் பின்தங்கிய 100 மாவட்டங்களைச் சேர்ந்த மக்களின் சமூகப் பொருளாதாரச் சூழல் மேம்படும்போது அது நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு மிகவும் ஊக்கமாக அமையும்" என்று கூறினார். "மத்திய மற்றும் மாநில அரசுகளின் திட்டங்களை ஒருங்கிணைத்தல், நிகழ்நேரத் தகவல்களை (ரியல்டைம்) இணைத்தல், மாவட்டங்களிடையே போட்டியை ஏற்படுத்துதல், மக்கள் இயக்கமாக நடத்துதல்" ஆகியவை இந்தத்திட்டத்தின் விரிவான வரையறைகள் ஆகும்.

இத்திட்டத்திற்காக 28 மாநிலங்களில் மொத்தம் 115 மாவட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் குறைந்தபட்சம் ஒரு மாவட்டம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. இவற்றில் 30 மாவட்டங்களை நிதிஆயோக் அமைப்பும், 50 மாவட்டங்களை மத்திய அமைச்சகங்களும் கடந்த காலங்களில் அரசு வெளியிட்ட புள்ளி விவரங்களின் அடிப்படையிலான ஒருங்கிணைந்த காரணி குறியீடுகளைப் பயன்படுத்தித் தேர்வு செய்தன. மீதமுள்ள 35 மாவட்டங்களை இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என்ற அடிப்படையில் மத்திய உள்துறை அமைச்சகம் தேர்ந்தெடுத்தது. நிதி ஆயோக் அமைப்பு இந்தத்திட்டத்தை செயல்படுத்தும். இந்தத்திட்டங்கள் மாநில அரசுகளின் மூலமாகத்தான் செயல் படுத்தப்படும் என்பதால், அதற்கான மாநில அரசுகளின் திறனையும் கருத்தில் கொண்டுதான் மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. மிகவும் முக்கியமான வளர்ச்சிக்குறியீடுகளில் இந்த மாவட்டங்களின் செயல்பாடுகளை 2022ஆம் ஆண்டுக்குள் மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதில் மாநில அரசுகளுக்கு மத்தியஅரசு ஆதரவளிக்கும். அத்தகைய ஆதரவை நிதிஆயோக் ஒருங்கிணைக்கும். அதுமட்டுமின்றி, இந்த மாவட்டங்களின் செயல்பாடுகளை மதிப்பிடுவதற்கான மேலாண்மை தகவல் அமைப்பையும் நிதி ஆயோக் ஏற்படுத்தும்.

முதன்மை செயல்பாட்டுக் காரணிகளை அடையாளம் காண்பதும், அந்த காரணிகளில் எட்டப்பட்டுள்ள முன்னேற்றத்தை அளவீடு செய்து அவற்றின் அடிப்படையில் ஆண்டு தரவரிசை தயாரித்து வெளியிடுவதும் தான் இத்தகைய மாவட்டங்களின் முன்னேற்றத்திற்கான உத்திகளின் முக்கிய அம்சங்களில் இடம்பெறுகின்றன. அடையாளம் காணப்பட்ட மாவட்டங்களில் சமூகக் காரணிகளையும், அடிப்படை வசதிகளையும் மேம்படுத்தி, அங்கு வாழும் குடிமக்களின் வருமானத்தின் தரத்தை அதிகரித்து அதன்மூலம் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதே இந்தத் திட்டத்தின் முதன்மை நோக்கம் ஆகும். அதன்படி, சுகாதாரம் மற்றும் நுண்ணூட்டச்சத்து, கல்வி, வேளாண்மை மற்றும் நீர் ஆதாரங்கள், அடிப்படைக் கட்டமைப்பு, நிதி உள்ளடக்கம் மற்றும் திறன் உருவாக்கம் ஆகிய 5 துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. மாவட்டங்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கும் அவற்றிற்குக் கிடைக்கும் வாய்ப்புகளுக்கும் இடையில் மிகப்பெரிய அளவில் வேறுபாடுகள் இருப்பதால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் அதனை முன்னேற்றுவதில் பங்கு வகிக்கும் அனைத்துத் தரப்பினரின் முயற்சிகள், உறுதிப்பாடுகள், முன்னேற்றங்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தனித்தனியான முதன்மை செயல்பாட்டுக் காரணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இந்த முதன்மை செயல்பாட்டுக் காரணிகள் எனப்படுபவை மேற்குறிப்பிடப்பட்ட 5 துறைகளில் செய்யப்படும் முதலீடு, உற்பத்தி மற்றும் பயன்களின் தொகுப்பு ஆகும். இவை குறித்த தகவல்கள் மாவட்ட

அளவில் உடனுக்குடன் வெளியிடப்படும். சுகாதாரம் மற்றும் நுண்ணூட்டச் சத்துத்துறையின் முதன்மைச் செயல்பாட்டுக் காரணிகளில் தாய் சேய் நலம்; குழந்தைகளின் நுண்ணூட்டச்சத்து, மகப்பேறு பராமரிப்பு மற்றும் நுண்ணூட்டச்சத்து; தடுப்பூசி; சுகாதாரத்திற்கான கட்டமைப்புகள் மற்றும் மனித வளங்கள் ஆகியவை அடங்கும். நிகர மாணவர் சேர்க்கை விகிதம்; கட்டமைப்பு; கற்றல் விளைவுகள்; எழுத்தறிவு விகிதம் மற்றும் கல்வி உரிமைச் சட்டத்தை பின்பற்றுதல் ஆகியவற்றை உள்ளடக்கியவை கல்விக்கான முதன்மை செயல்பாட்டுக் காரணிகள் ஆகும். நீர்ப்பாசனம் சார்ந்த முதலீடுகள் மற்றும் வேலைவாய்ப்பு; பிரதமரின் பயிர்க்காப்பீட்டுத் திட்டத்தின்படியான பயிர்க்காப்பீடு; முக்கியமான இடுபொருள்களின் பயன்பாடு மற்றும் விநியோகம் ஆகியவை வேளாண்துறைக்கான முதன்மை செயல்பாட்டுக் காரணிகளில் அடங்கும். அடிப்படைக் கட்டமைப்புகளில் சாலைகள், தண்ணீர், கழிப் பறைகள், வீட்டுவசதி, மின்சாரம் மற்றும் இணையத் தொடர்பு வசதி ஆகியவை அடங்கும். இவை தவிர டாட்டா அறக்கட்டளை, பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ஆகிய இரு அமைப்புகள் காலாண்டு அடிப்படையில் பரந்த சீரற்ற மாதிரி முறையைப் பயன்படுத்தி வீடுதோறும் கணக் கெடுப்புகளை நடத்தும்.

இந்தத்திட்டத்தை செயல்படுத்துவதில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதுமைகளில் ஒன்று என்னவென்றால் மத்திய, மாநில அரசுகளின் கூடுதல் அல்லது இணை செயலாளர்கள் நிலையில் உள்ள அதிகாரிகளை பொறுப்பு அதிகாரிகளாக நியமிப் பதுதான். இந்த அதிகாரிகள் தங்களின் அனுபவத்தின் துணையுடன் மாவட்ட நிர்வாகத்திற்கு வழிகாட்ட மிகவும் பொருத்தமானவர்கள் என்பது மட்டுமின்றி, சம்பந்தப்பட்ட மாவட்டத்திற்கும், மாநில மற்றும் மத்திய அரசுகளுக்கும் இடையில் இணைப்புப் பாலமாகவும் செயல்படும் திறமை கொண்டவர்கள் ஆவர். மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்கள்தான் முக்கியமான அதிகாரிகளாக இருப்பார்கள். திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை அதிகாரம் பெற்ற செயலாளர்கள் குழு கண்காணித்து, மாவட்ட அளவிலான குழுக்கள் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில் தேவையான கொள்கை மாற்றங்களை மேற்கொள்ளும். அதேபோல், மாநில அரசுகள் மாநில அளவில் தலைமைச் செயலாளரை உள்ளடக்கிய குழுவை அமைக்கவேண்டும்.

ஒவ்வொரு மாவட்டமும் ஒவ்வொரு காரணியிலும் 2022ஆம் ஆண்டிற்குள் விரும்பத்தக்க அளவை எட்டுவதற்கு வசதியாக, மாவட்ட அளவிலான குழுக்கள் ஒவ்வொரு காரணியின் தற்போதைய நிலையின் அடிப்படையில் தொடக்கநிலை அறிக் கையையும், மாவட்டத்தில் இருக்கும் வளங்களின் அடிப்படையில் ஆண்டுவாரியான இலக்குகள் பட்டியலையும் தயாரிக்கவேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் குறைந்தது இரு மாதங்களுக்கு ஒருமுறை வருகை தரும் மத்திய அரசின் பிரதிநிதி அங்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து நிதிஆயோக் அமைப்புக்கு அறிக்கை அளிப்பார். அந்த அறிக்கையை பகுப்பாய்வு செய்து, அதன் முடிவுகளை அதிகாரம் பெற்ற செயலாளர்கள் குழுவின் ஆய்வுக்காக நிதி ஆயோக் முன்வைக்கும். மொத்தமுள்ள 115 மாவட்டங்களில் 30 மாவட்டங்களில் இந்தத் திட்டத்தை நிதிஆயோக் செயல்படுத்தும், 35 மாவட்டங்களை மத்திய உள்துறை அமைச்சகம் கையாளும், மீதமுள்ள 50 மாவட்டங்களை மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை; மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு; பஞ்சாயத்து ராஜ்; வேளாண்மை மற்றும் உழவர்கள் நலத்துறை; மனிதவள மேம்பாடு; குடிநீர் மற்றும் துப்புரவு; வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரம்; நீர்வளம்; மின்சாரம்; சமூகநீதி மற்றும் பழங்குடியினர் விவகாரம் ஆகிய அமைச்சகங்கள் பகிர்ந்துகொள்ளும்.

**முன்னேறத் துடிக்கும் 115 மாவட்டங்களின் பட்டியல்**

| மாநிலம் | நிதி ஆயோக்கின் 30 மாவட்டங்கள் | மத்திய அமைச்சகங்களின் 50 மாவட்டத் தொகுப்பு | உள்துறை அமைச்சகத்தால் தேர்வு செய்யப்பட்ட, இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட 35 மாவட்டங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஆந்திரப்பிரதேசம் | | 1 விஜயநகரம் | 1. விசாகப்பட்டினம் | 3 |
| ஆந்திரப்பிரதேசம் | | 2. கடப்பா | | |
| அருணாச்சல பிரதேசம் | | 1. நம்சாய் | | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| அஸ்ஸாம் | 1. டாரங்க் | 1. உடல்கிரி | | 7 |
| அஸ்ஸாம் | 2. துப்ரி | 2. ஹைலாக்கண்டி | | |
| அஸ்ஸாம் | 3. பர்பேட்டா | | | |
| அஸ்ஸாம் | 4. கோல்போரா | | | |
| அஸ்ஸாம் | 5. பக்சா | | | |
| பிகார் | 1. கத்தியார் | 1. காகரியா | 1. அவுரங்காபாத் | 13 |
| பிகார் | 2. பெகுசராய் | 2. புர்னியா | 2. பங்கா | |
| பிகார் | 3. ஷேக்புரா | | 3. கயா | |
| பிகார் | 4. அராரியா | | 4. ஜாமுய் | |
| பிகார் | 5. சீதாமரி | | 5. முசாபர்பூர் | |
| பிகார் | | | 6. நவடா | |
| சத்தீஸ்கர் | | 1.கோர்பா | 1. பாஸ்டர் | 10 |
| சத்தீஸ்கர் | | 2. மகாசமுந்த் | 2. பிஜப்பூர் | |
| சத்தீஸ்கர் | | | 3. தண்டேவாடா | |
| சத்தீஸ்கர் | | | 4. காங்கர் | |
| சத்தீஸ்கர் | | | 5. கோண்டாகோன் | |
| சத்தீஸ்கர் | | | 6. நாராயண்பூர் | |
| சத்தீஸ்கர் | | | 7. ராஜ்நந்த்கோன் | |
| சத்தீஸ்கர் | | | 8. சுக்மா | |
| குஜராத் | | 1.நர்மதா | | 2 |
| குஜராத் | | 2. தாஹோத் | | |
| ஹரியானா | | 1.மேவாட் | | 1 |
| ஹிமாச்சலபிரதேசம் | | 1.சம்பா | | 1 |
| ஜம்மு&காஷ்மீர் | | 1.குப்வாரா | | 2 |
| ஜம்மு&காஷ்மீர் | | 2. பாரமுல்லா | | |
| ஜார்க்கண்ட் | 1. சாகிப்கஞ்ச் | 1. கோட்டா | 1.லத்தேகார் | 19 |
| ஜார்க்கண்ட் | 2. பக்காவூர் | | 2.லோகர்தாகா | |
| ஜார்க்கண்ட் | | | 3.பலாமு | |
| ஜார்க்கண்ட் | | | 4. பர்பி சிங்பும் | |
| ஜார்க்கண்ட் | | | 5. ராம்கார் | |
| ஜார்க்கண்ட் | | | 6. ஆன்ச்சி | |
| ஜார்க்கண்ட் | | | 7. சிம்தேகா | |
| ஜார்க்கண்ட் | | | 8. மேற்கு சிங்பும் | |
| ஜார்க்கண்ட் | | | 9. பொகாரோ | |
| ஜார்க்கண்ட் | | | 10. சத்ரா | |
| ஜார்க்கண்ட் | | | 11. தும்கா | |
| ஜார்க்கண்ட் | | | 12. கார்வா | |
| ஜார்க்கண்ட் | | | 13. கிர்தி | |
| ஜார்க்கண்ட் | | | 14. கும்லா | |

| | | | | |
|---|---|---|---|---|
| ஜார்க்கண்ட் | | | 15. ஹசாரிபாக் | |
| ஜார்க்கண்ட் | | | 16. குந்தி | |
| கர்நாடகா | | 1. யாத்கிர் | | 2 |
| கர்நாடகா | | 2. ராய்ச்சூர் | | |
| கேரளா | | 1. வயநாடு | | 1 |
| மத்தியப்பிரதேசம் | 1. தாமோஹ் | 1. சத்தார்பூர் | | 8 |
| மத்தியப்பிரதேசம் | 2. சிங்ரோலி | 2. ராஜ்கார் | | |
| மத்தியப்பிரதேசம் | 3. பர்வாணி | 3. குணா | | |
| மத்தியப்பிரதேசம் | 4. விதிஷா | | | |
| மத்தியப்பிரதேசம் | 5. கந்தவா | | | |
| மஹாராஷ்டிரா | 1. நந்துர்பர் | 1. வாசிம் | 1. கட்சிரோலி | 4 |
| மஹாராஷ்டிரா | | 2. ஓஸ்மனாபாத் | | |
| மணிப்பூர் | | 1. சந்தெல் | | 1 |
| மேகாலயா | | 1. ரிபோய் | | 1 |
| மிசோராம் | | 1. மாமித் | | 1 |
| நாகலாந்து | | 1. கிபைர் | | 1 |
| ஒடிசா | 1. ராயகடா | 1. கந்தமால் | 1. கோரப்புட் | 8 |
| ஒடிசா | 2. கலாஹந்தி | 2. கஜபதி | 2. மல்காங்கிரி | |
| ஒடிசா | | 3. தென்கணல் | | |
| ஒடிசா | | 4. பலாங்கிர் | | |
| பஞ்சாப் | | 1. பிரோஸ்பூர் | | 2 |
| பஞ்சாப் | | 2. மோகா | | |
| இராஜஸ்தான் | 1.பாரன் | 1. தோல்பூர் | | 5 |
| இராஜஸ்தான் | 2. ஜெய்சல்மீர் | 2. கரோலி | | |
| இராஜஸ்தான் | | 3. சிரோஹி | | |
| சிக்கிம் | | 1. மேற்கு சிக்கிம் | | 1 |
| தமிழ்நாடு | | 1. இராமநாதபுரம் | | 2 |
| தமிழ்நாடு | | 2. விருதுநகர் | | |
| தெலுங்கானா | | 1. பூல்பால்பள்ளி | 1. கம்மம் | 3 |
| தெலுங்கானா | | 2. ஆசிபாபாத் | | |
| திரிபுரா | | 1. தலாய் | | 1 |
| உத்தரப்பிரதேசம் | 1. சித்திரக்கூட் | 1. சந்த்ரோலி | | 8 |
| உத்தரப்பிரதேசம் | 2. பல்ராம்பூர் | 2. சித்தார்த்நகர் | | |
| உத்தரப்பிரதேசம் | 3. பராய்ச் | 3. பதேப்பூர் | | |
| உத்தரப்பிரதேசம் | 4. சோன்பத்ரா | | | |
| உத்தரப்பிரதேசம் | 5. சரஸ்வதி | | | |
| உத்தர்காண்ட் | | 1. ஹரித்வார் | | 2 |
| உத்தர்காண்ட் | | 2. உத்தம்சிங் நகர் | | |

| | | | | |
|---|---|---|---|---|
| மேற்குவங்கம் | 1. முர்ஷிதாபாத் | 1. நாடியா | | 5 |
| மேற்குவங்கம் | 2. மால்டா | 2. தஷின்தினாஜ்பூர் | | |
| மேற்குவங்கம் | 3. பிர்பும் | | | |
| **மொத்தம்** | **30** | **50** | **35** | **115** |

## முன்னேறத்துடிக்கும் மாநிலங்களின் வளர்ச்சியை அளவிடுவதற்கான காரணிகள்

### கூட்டுக்குறியீட்டுக்கான மதிப்பெண்கள்

| **துறைகள்** | **மதிப்பெண்** |
|---|---|
| சுகாதாரம் மற்றும் நுண்ணூட்டச் சத்து | 30% |
| கல்வி | 30% |
| வேளாண்மை மற்றும் நீர்வளம் | 20% |
| நிதி உள்ளடக்கம் மற்றும் திறன் உருவாக்கம் | 10% |
| அடிப்படைக் கட்டமைப்புகள் | 10% |
| **கூட்டுக்குறியீடு** | **100%** |

தொடக்க நிலை தகவல் வெளியீடு மற்றும் உடனுக்குடனான கண்காணிப்பு ஆகியவையும், முன்னேறத்துடிக்கும் இந்த மாவட்ட மக்களின் நலனை மேம்படுத்துவதில் மாநிலங்களுக்கு இடையிலான போட்டியும் 01.04.2018 முதல் தொடங்கும். பின்தங்கிய மாவட்டங்களை முன்னேற்றுவது என்பது புதுமையான சிந்தனை அல்ல.... ஆனால், இந்தத் திட்டத்தை மத்தியஅரசு வித்தியாசமான முறையில் செயல்படுத்த உள்ளது.

‘‘வெற்றியாளர்கள் வித்தியாசமான விஷயங்களை செய்வதில்லை... ஆனால், செய்வதை வித்தியாசமாக செய்வார்கள்’’ என்ற பொன்மொழி முன்னேறத் துடிக்கும் மாவட்டங்கள் விஷயத்தில் நிரூபிக்கப்படுவது உறுதி.

- **அமிதாப் காந்த்**, நிதிஆயோக் அமைப்பின் தலைமை செயல்அலுவலர்

•

இந்திய அரசின் வெளியீட்டுப்பிரிவு இந்தியிலும் ஆங்கிலத்திலும் தனித்தனியாக பாரத் 2018 (இந்தி), INDIA 2018 (ஆங்கிலம்) ஆகிய ஆண்டு நிகழ்வுகள் பற்றிய சான்றாதாரங்களுடன் கூடிய இரண்டு புத்தகங்களை வெளியிடுகிறது. அரசாங்கத்தின் பல்வேறு பிரிவுகள் பற்றிய முக்கியமான பல தகவல்களை உள்ளடக்கிய ஆண்டுத்தொகுப்பு நூல்கள் இவை.

சென்ற ஆண்டு வெளியிடப்பட்ட இது போன்ற புத்தகங்கள் ஒரு இலட்சம் பிரதிகளுக்கும் மேல் விற்பனையாயின. INDIA 2018 புத்தகம் கல்வியாளர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், இளைஞர்கள், நூலகங்களுக்கு ஏற்றது. துல்லியமான, நம்பகமான தகவல்களைக் கொண்டிருக்கும் இந்த நூலினை நிறுவனங்களும் பொதுமக்களும் கூட பயன்படுத்திக் கொள்ளலாம். பல்வேறு வகைப்பட்ட போட்டித்தேர்வுகளை எதிர்கொள்வதற்கும் இந்த நூல் உதவிடும்.

உங்கள் பிரதிக்கு முந்துங்கள். மேலதிக விவரங்களுக்கு:

**வணிக மேலாளர்**. வெளியீட்டுப்பிரிவு, ‘A’ WING இராஜாஜி பவன் பெசன்ட் நகர், சென்னை 600 090 என்ற முகவரியில் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண்: 044-24917673.
மின்னஞ்சல் முகவரி: bsme.chennai@yahoo.in

**INDIA 2018**

**Annual Reference Book**

# மத்திய பட்ஜெட் : இந்தியப்பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் கருவியாக குறு, சிறு,நடுத்தரத்தொழில் நிறுவனங்கள்

- அனில் பரத்வாஜ்

நிதிநிலை அறிக்கை 2018-19, மத்திய நிதி அமைச்சரால் பிப்ரவரி முதல் நாள் அன்று நான்கு பகுதிகளுக்கு முக்கியத்துவம் தரும் நோக்கத்தோடு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது: வேளாண்மையும் ஊரகமும், உள்கட்டமைப்பு, உடல் நலம் பேணல், குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகிய நான்கும் இந்தப்பகுதிகளாகும்..

இந்தக்கட்டுரை குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் மூலம் வேலைவாய்ப்பு உருவாக்கம் என்பதைப் பற்றியது. பட்ஜெட்டை சமர்ப்பித்தபிறகு, அடுத்தநாள் CriSidex எனப்படும் MSME Sentiment Indexஐ வெளியிட்டபோது, இந்தியப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கு உதவும் எந்திரங்கள் போன்றவை குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள் என்று நிதி அமைச்சர் பறைசாற்றினார். ஒரு வழியாக கடைசியிலேனும் ஒரு சிறு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் 10 முதல் 12 மில்லியன் மக்கள் வேலைச்சந்தைக்கு வந்துகொண்டிருக்கும் நிலையில் இந்தியப்பொருளாதாரம் போதுமான வேலைகளை உருவாக்கத் தவறிவருவதால் நெருக்கடி மிகுந்த ஒரு சூழ்நிலை உருவாகிவருகிறது என்பதில் ஐயமில்லை. உற்பத்தித்துறையின் பங்களிப்பு 25% இருப்பதாக அரசுகள் கூறிக்கொள்ளும் போதிலும், ஒட்டுமொத்த உள்நாட்டு வளர்ச்சியில் இது 15 முதல் 16% அளவைத்தாண்ட மறுக்கிறது. ஆனால், சீர்திருத்தங்கள் இல்லாத நிலையிலும் கூட குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களுக்கு அபாயநேர்வு வெகுமதி விகிதம் தொடர்ந்து சரிந்துகொண்டு வருகிறது. இதுவரை இருந்துவரும் நிலையில் இருந்து ஒரு மாற்றத்திற்கான சமிக்ஞயை மத்திய பட்ஜெட் 2018-19 அளித்திருக்கிறது.



முதலாவதாக, இதுவரை ஆடைத்தொழிலில் மட்டும் இருந்துவந்த குறிப்பிட்ட காலத்திற்கு வேலைவாய்ப்பு என்பதை அனைத்துத் துறைகளுக்கும் விரிவுபடுத்துவது பற்றிய அறிவிப்பு ஒரு மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய சீர்திருத்தம். இது வேலைவாய்ப்புகளை உருவாக்கும். பல பிரிவுகளில் வணிகம், சில பருவங்களில் மட்டுமே நடக்கக்கூடிய சுழற்சித்தன்மை கொண்டது. இந்தத்துறைகளில் இருக்கும் வேலைதருவோர் வேலைகளுக்கு யாரையும் எடுப்பதில்லை அல்லது குறுகிய காலத்திற்கு வேலைக்கு அமர்த்துவது சட்ட விரோதம் என்பதால், வேலைக்கு அமர்த்தியது பற்றிய தகவல்களைத் தருவதில்லை.

தொழில் அமைப்புகள் பணியாளர்களை குறிப்பிட்ட காலத்திற்கு பணி அமர்த்திக்கொள்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, கூடுதல் பணியாளர்களுக்கு ஆகும் செலவில் 130%ஐ கழித்துக்கொள்வதற்கு பட்ஜெட் அனுமதிக்கிறது. புதிய தொழிலாளர்களுக்கான சேமநல நிதிச் செலவை மூன்று ஆண்டுகளுக்கு ஏற்றுக்கொள்வதற்கும் முன்வருகிறது.

பட்ஜெட் தந்திருக்கும் இன்னொரு வலிமையான சமிக்ஞை பணியாளர்கள் அதிகமாகத் தேவைப்படும் 40க்கும் மேற்பட்ட உற்பத்தித்தொழில்களில் சுங்கவரியில் 5 முதல்15% வரை அதிகரித்து உந்துதல் அளித்திருப்பதாகும். உற்பத்திப் பொருள்களுக்கு உள்நாட்டில் மதிப்புக்கூட்டுவதை இது ஊக்குவிக்கிறது. இறக்குமதியிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கும் பொருள்களின் வகைகளாவன:

- பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருள்கள்
- வாசனைப்பொருள்கள் ஆடை அலங்காரப் பொருள்கள்
- வாகனங்கள், உதிரி பாகங்கள்
- காலணிகள்
- வைரம், மதிப்புமிக்க கற்கள், நகைகள்
- மின்னணுப்பொருள்கள், வன்பொருள்கள்
- LCD/LED/OLED பேனல்கள், பிற பாகங்கள்
- நாற்காலிகள், தளவாடச்சாமான்கள்
- கடிகாரங்கள்
- பொம்மைகள், மூன்று சக்கர மிதிவண்டிகள், ஸ்கூட்டர்கள், மிதிவண்டி போல மிதித்து

ஒட்டப்படும் கார்கள், விளையாட்டு உபகரணங்கள்

- மேல் ஓட்டுடன் கூடிய முந்திரி
- தாவரசமையல் எண்ணெய்கள்
- பயனற்ற பொருள்கள்
- பிறவகைப் பொருள்கள் (மெழுகுவர்த்திகள், கருப்புக்கண்ணாடிகள் போன்றவை)

மேலும், சூரிய மின்கலன்கள் தயாரிக்கப் பயன்படும் உறுதிப்படுத்தப்பட்ட சூரியக்கண்ணாடிகள், பேனல்கள், தொகுதிகள், பிற மூலப்பொருள்கள், c-implantகளில் பயன்படும் பாகங்கள் உதிரிகள் ஆகியவற்றிற்கு சுங்கவரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

1991 முதற்கொண்டு கடைபிடிக்கப்பட்ட சுங்கவரியின் கீழ்நோக்கிய போக்கு பற்றி உணர்ந்துகொள்வது முக்கியமானது ஆகும். உள்நாட்டு உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் மறுசீரமைப்பு செய்யவேண்டும். மிக நுட்பமான அணுகுமுறை தேவை என்பதை இது காட்டுகிறது. சுங்கவரி உயர்த்தப்பட்ட பிறகும், உலக வர்த்தக நிறுவனம் குறிப்பிடும் 25 முதல் 40% வரையறைக்குள்ளேயே இது இருந்து வருகிறது.

சில வல்லுநர்கள் இதனை பிற்போக்கானது என்று வர்ணிக்கிறார்கள். இந்தியத்தொழில் துறை உலகளாவிய போட்டியை விடவும், பாதுகாப்பில் கவனம் செலுத்துவதை இது காட்டுகிறதா? அனைத்திற்கும் மேலாக, இத்தகைய சுங்கவரிக் குறைப்புகள் ஆதரவு கோருபவர்களுக்காக செய்யப்படுவை. எ.கா: ஸ்டீல், அலுமினிய போன்ற அடிப்படை பொருள்கள்.

மேலும், உள்ளூர் உற்பத்தி நிறுவனங்களுக்கு மேம்பட்ட பாதுகாப்பை அளிப்பது நீண்ட நாள்களுக்குக் கிடைக்கக்கூடியதல்ல. விரிவான மண்டல பொருளாதாரக் கூட்டுப்பங்காண்மைக்கு (Regional Comprehensive Economic Partnership (RCEP)- இந்தியா ஏற்கனவே பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. 10 ஆசியான் (ASEAN), ஆஸ்திரேலியா, சீனா, இந்தியா, ஜப்பான், தென்கொரியா, நியூசிலாந்து ஆகிய ஆறு நாடுகள் இவற்றுக்கிடையேயான வெளிபடையான வணிக ஒப்பந்தமாகும் இது.

மூன்றாவதாக, Trade Electronic Receivable Discounting System (TReDS) என்ற அமைப்பின் குழுவுடன் GST பதிவு எண்ணுடன் கூடிய இணையவழி ரசீது தள்ளுபடி மேடையில் இணைவது என்ற பொதுத்துறை வங்கிகள், பெருநிறுவனங்களின் அறிவிப்பு MSME க்கும், அதிகமாகக் கொள்முதல் செய்வோருக்கும் இடையிலான பரிமாற்றங்கள்



தாமாகவே சரிபார்க்கப்படுவதற்கு உதவிசெய்து MSME க்களின் கெஞ்சுதல்களைக்குறைக்கும்.

நான்காவதாக, இந்த பட்ஜெட்டில் MSME பிரிவுக்கு ரூ. 3794 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது கடன் உதவி, மூலதன உதவி, வட்டி மானியம், புதுமைகள் படைத்தல் ஆகியவற்றிற்கு உதவிடும். MSME பிரிவு பெரும்பகுதி இதனை வரவேற்றுள்ள போதிலும், போதிய விவரங்கள் இல்லாததால் இதனைப்பற்றி மேலும் கருத்து கூற இயலவில்லை.

முன்பு ரூ.50 கோடி விற்றுமுதல் உள்ள நிறுவனங்களுக்கு மட்டிலும் தரப்பட்டு வந்த 25% வரியை, ரூ.250 கோடி விற்றுமுதல் உள்ள நிறுவனங்களுக்கும் விரிவாக்குவது குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்களின் ஒரு பகுதிக்கு உதவிகரமாக இருக்கும். இது கம்பனிகளுக்கே பொருந்தும் என்பதால், MSMEக்கள் கூட்டுப்பங்காண்மை அமைப்புகளாகவும், தனி முதலீட்டாளர்களாகவும் இருப்பதால் அவற்றிற்கு இதன் பலன் குறைவாகவே கிடைக்கிறது.

இந்த பட்ஜெட்டில் முன்மொழியப்பட்டிருக்கும் இன்னொரு சிறப்பான அம்சம் ஓரளவு குறைவான மதிப்பீடு கொண்டிருக்கும் நிறுவனங்களும் கூட ஒப்பந்தப்பத்திரச் சந்தைக்கு தகுதியானதாக அறிவிக்கப்பட்டிருப்பதாகும். இதனால், MSME க்களுக்கு அதிகமான வங்கி நிதி உதவி கிடைக்கும்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, பட்ஜெட்டின் போக்கு நேர்மறை நிலையில் உள்ளது. வேளாண்மைக்கும், உள்கட்டமைப்பிற்குமான பெருமளவு நிதிஒதுக்கீடு உள்நாட்டு ஒட்டு மொத்த உற்பத்திக்குத் தேவையான உந்துதலைத்தருவதற்கு உதவிடும். MSME க்களில் வேலைவாய்ப்பு பெருக்கம் சிறந்த ஒரு அம்சமாக இருக்கிறது. கள அளவில் முதலீடுகள் பெருகி எதிர்பார்க்கும் விளைவுகளை ஏற்படுத்தும் என்று நம்பலாம்.

---

- **அனில் பரத்வாஜ்,** இந்திய குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் கூட்டமைப்பின் (FISME) தலைமைச் செயலர்

●

# மத்திய பட்ஜெட் 2018-19 வாழ்வாதாரத்தை உருவாக்குதல்

- டாக்டர் ரஞ்சித் மேத்தா

இன்றைய உலகில் அரசு எடுக்கக்கூடிய ஒரு சிறிய முடிவுகூட பலமடங்கு விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். இரண்டாம்நிலை, புறநிலை மற்றும் அதற்கும் கீழ்நிலைகளில் ஏற்படக்கூடிய விளைவுகளை கவனமாகப் பரிசீலனை செய்தே வாய்ப்புகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும். இதற்கு பட்ஜெட் பல வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிறது. இவை சரியாக நடைமுறைப்படுத்தப்பட்டால் இந்தியாவின் பொருளாதாராக் கொள்கையில் மிகப்பெரிய மடைமாற்றம் ஏற்படும்.

2018-19ஆம் ஆண்டிற்கான பட்ஜெட்டை நமது நிதி அமைச்சர் பிப்ரவரி 1, 2018 அன்று தாக்கல் செய்தார். 2017 ஜுலை மாதம் ஜி.எஸ்.டியை நடைமுறைப்படுத்திய பிறகு தாக்கல் செய்யப்படும் முதல் பட்ஜெட் இது என்பதால் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. பொருளாதாரவளர்ச்சி பிரகாசமாக இல்லாத நிலை, நிதி நிலைமையானது சவாலாக இருக்கும் நிலை, விவசாயம் சரியாக நடைபெறாத நிலை என பிரச்சனைகள் பல இருந்தபோதிலும் பொருளாதார சீர்திருத்தங்களின் நெடிய பயணத்துக்குப்பிறகு இந்த பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த பட்ஜெட்டானது வறுமை, கிராமப்பொருளாதாரம், ஆரோக்கியபராமரிப்பு, கல்வி, உள்கட்டமைப்பு வசதிகள், நவீனமான, வலிமையான மற்றும் நம்பகமான இந்தியாவை உருவாக்குவதற்கான மின்னணுமயமாதல் ஆகியவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்துகிறது. இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க கொள்கை மற்றும் அமைப்பு சார்ந்த சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இந்தியாவின் வங்கித்துறையிலும், கடன் நிலவரத்திலும் உள்ள குறைபாடுகளை எதிர்கொள்ளும் விதமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பொதுத்துறை வங்கிகளுக்கு மறுமூலதனம் வழங்குதல் குறித்த அறிவிப்பு, வாராக்கடன்களைத் தீர்த்து வைப்பதற்காக தாமாகவே முன்வந்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியன முக்கியமான சில ஆரம்ப நடவடிக்கைகள் ஆகும். பல்வேறு சீர்திருத்தங்கள் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றின் பின்னணியில் சர்வதேசக்கடன் தரமதிப்பு நிறுவனமான மூடிஸ் சுமார் 13 ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு இந்தியாவின் கடன் தரமதிப்பை Baa3ல் இருந்து Baa2க்கு உயர்த்தி உள்ளது.

இந்தியப்பொருளாதார வளர்ச்சியை மீண்டும் அடைவோம் என்ற இலக்கை கொண்டிருக்கும் நேர்மையான, ஊழலற்ற மற்றும் வெளிப்படையான அரசு நிர்வாகத்தை வழங்குவோம் என்ற அரசின் உறுதியை நிதியமைச்சர் தனது பட்ஜெட் உரையில் சுட்டிக்காட்டியுள்ளார். பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் இந்த உறுதிமொழிக்கு வலுசேர்ப்பவையாக உள்ளன. 2018-19 பட்ஜெட்டில் அறிவித்துள்ளபடி பொருளாதார வளர்ச்சி 8 சதவிகிதத்துக்கு மேல் எழுச்சிபெறும் என அரசு எதிர்பார்க்கிறது. இந்த பட்ஜெட் 2022ஆம் ஆண்டுக்குள் ஊரக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதையும் விவசாயிகளின் வருமானத்தை இரண்டு மடங்காக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. வளர்ச்சி, வேலை மற்றும் தனியார் முதலீடு ஆகியவற்றில் பட்ஜெட் கவனம் செலுத்தினாலும் அதன் பிரதான கவனம் விவசாயிகளுக்கு ஆதரவு அளித்தல், ஊரகப்பகுதிகளின் வளர்ச்சி ஆகியவற்றின் மேல்தான் உள்ளது. வரிசெலுத்துவோரின் எண்ணிக்கையை அதிகரித்தல், விவசாயிகளின் வருமானம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு உத்வேகம் அளித்தல், பொருளாதாரத்தை முறைமைக்கு உட்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் அரசு முன்பே கூறியுள்ள முன்னுரிமைகள் மற்றும் நீண்டகால செயல்திட்டங்களைப் பிரதிபலிப்பதாகவே உள்ளன.

உள்கட்டமைப்பு வசதிகளுக்கு உந்துதல் அளித்தல், ஆயுஷ்மன் என்ற அனைவருக்குமான சுகாதாரப்பராமரிப்பு, அனைவருக்கும் வீட்டுவசதி, கல்வியில் சீர்திருத்தங்கள், மீன்வளம், உணவுபதப் படுத்துதல், ஜவுளி போன்ற துணைத் தொழில்பிரிவுகளுக்கு ஆதரவு ஆகியன பொருளாதார நிலைமையை வலுப்படுத்தக் கூடியவையாக உள்ளன. தனது பட்ஜெட்டில் கொள்கை உருவாக்கலில் அடிநாதமாக வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் என்பது இருக்கும் என நிதியமைச்சர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். நாட்டில் நிலவும்

விவசாயத்துறையின் தேக்கத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு ஊரகப் பகுதிகளுக்கான வாழ்வாதாரம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.14.24 இலட்சம் கோடி செலவிடுதல் என்பது இந்தத்திசையில் மிகப்பெரும் நடவடிக்கையாக இருக்கிறது. அதே போன்று விவசாயத்துக்கான மொத்தக்கடன் ரூ.11 இலட்சம் கோடி என நிர்ணயிக்கப்பட்டு உள்ளதும் குறிப்பிடவேண்டிய ஒன்றாகும்.

100 மில்லியன் குடும்பங்கள் பயன்பெறும் வகையில் தேசிய சுகாதாரக்காப்பீட்டுத் திட்டம் என்ற முன்னோடித்திட்டம் தொடங்கப்படுகிறது. ஒரு ஆண்டுக்கு ஒருவருக்கு ரூ.5இலட்சம் வரை என 500 மில்லியன் பயனாளிகள் இந்தத் திட்டத்தால் பயன் அடைவார்கள். உலகின் மிகப்பெரிய பொதுமக்கள் சுகாதாரக் காப்பீட்டுத்திட்டமான இது இந்தியாவில் துணைநிலை மற்றும் புறநிலை சுகாதாரச் சேவைகள் கிடைப்பதை வலுப்படுத்தும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்கு பெருமளவில் ஊக்கம் அளிக்கும் வகையில் நிதிஅமைச்சர் ஆண்டு தொழில் தொகை ரூ.250 கோடி வரை உள்ள நிறுவனங்களுக்கு வரிவிகிதத்தை 25 சதவிகிதமாகக் குறைத்துள்ளார். வருமானவரி தாக்கல் செய்யும் 99 சதவிகித நிறுவனங்கள் இதில் அடங்குவார்கள். சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு இந்த நடவடிக்கை பலன் அளிப்பதோடு அந்த நிறுவனங்கள் தங்களது நிறுவுதிறனை விரிவாக்கிக் கொள்ளவும் உதவும்.

நிறுவனக்கடன் பத்திரச்சந்தையைப் புதுப்பிக்க வேண்டும் என்ற தேவையானது நீண்ட காலமாகவே இருந்துவருகிறது. இதற்காக பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. பெரிய நிறுவனங்கள் தங்களது நிதித்தேவைகளில் 25 சதவிகிதத்தை கடன் பத்திரச் சந்தையில் இருந்து ஈட்டியாக வேண்டும் என்பதை அரசு இப்போது கட்டாயமாக்கி உள்ளது. வெளியீடு என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும்போது இந்த நடவடிக்கையானது கடன் பத்திரங்களை அதிக அளவில் சந்தையில் விநியோகிக்க வழிவகுக்கும். அதிகத்தேவைக்கான உந்துதலுக்காக குறைந்த தரமதிப்புள்ள கடன் பத்திரங்களின் வர்த்தகம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இது இந்திய நிறுவனக் கடன் சந்தையில் கடன்பத்திரம் மற்றும் பணமாக மாற்றுவதில் எளிமை ஆகியவற்றை மேம்படுத்தக்கூடிய சிறப்பான வாய்ப்பை முதலீட்டாளர்களுக்கு வழங்குகிறது.

கிஃப்ட் சிட்டியில் ஐ.எஃப்.எஸ்.சி-யை உருவாக்க வழிமுறைகள் தரப்பட்டுள்ளன. இதனால் அயல்நாட்டில் வசிக்கும் இந்தியர்கள் தங்களின் வருவிக்கப்பட்ட சொத்துகள் மற்றும் குறிப்பிட்ட பங்குப்பத்திரங்களைப் பரிமாற்றம் செய்யும் போது மூலதன ஈட்டு வரியில் இருந்து விலக்கு பெறலாம். கடல் கடந்த வர்த்தக நடவடிக்கைகளை மேற் கொள்ளக்கூடிய நம்பிக்கையும், இந்தியாவில் விலை நிர்ணயம் செய்யும் வாய்ப்பு மீண்டும் ஏற்படும் என்பதாலும் இது வரவேற்கக் கூடிய ஒரு செயலாக உள்ளது. மேலும் இது சிங்கப்பூர், ஹாங்காங், துபாய் முதலான நாடுகளுக்கு எதிரான போட்டியைச் சமாளிக்கவும் வழிஏற்படுத்தும். கிஃப்ட் சிட்டி ஒருங்கிணைந்த ஒழுங்குமுறைமையானது அனைத்து ஒழுங்குமுறைசார் தேவைகளுக்கும் ஒற்றைச்சாளரத் தீர்வாக அமையும். பல கொள்கைகள் குறித்து விரைவாக முடிவுகள் எடுக்கவும் இது உதவியாக இருக்கும்.

முதலீடுகளை பத்திரமாக விற்பதற்கான இலக்குகளில் அரசு உச்சநிலையை அடைந்துள்ள நிலையில், அரசு நிறுவனங்களைப் பணவிகிதமாக்கலுக்கு உட்படுத்த உள்கட்டமைப்பு முதலீட்டு அறக்கட்டளைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இது ஒரு சாதகமான அபிவிருத்தி ஆகும். இரண்டு காப்பீட்டு நிறுவனங்கள் உட்பட 14 மத்திய அரசு பொது நிறுவனங்களைப் பங்குச்சந்தைகளில் பட்டியலிட அரசு அனுமதி அளித்துள்ளது. 24 மத்திய அரசு பொதுநிறுவனங்களில் உத்திமுறை சார்ந்த பங்குப்பத்திர விற்பனைக்கான நடைமுறைகள் தொடங்கப்பட்டுள்ளன. இதில் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாமல் இருக்கும் ஏர் இந்தியாவை தனியார் மயமாக்கும் செயலும் உள்ளடங்கும். இத்தகைய பூர்வாங்க நடவடிக்கைகள் இந்த நிறுவனங்கள் தங்களின் நிர்வாகத்தை மேம்படுத்த உதவும்.

## பட்ஜெட் 2018-19இல் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் தொடர்பான முக்கிய அபிவிருத்தி அம்சங்கள்:-

வேலைவாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் வேலைவாய்ப்புகள் கிடைக்க உதவுதல் என்பது அரசாங்கத்தின் கொள்கை உருவாக்கலில் முக்கியமான அடிநாதமாக உள்ளது என நிதிஅமைச்சர் கூறியுள்ளார். வேலைவாய்ப்புகளை அதிகரிக்க ஊழியர்கள் அதிகம் உள்ள தொழில்துறைகளில் அரசு கவனம் செலுத்தும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதில்

ஜவுளித்தொழில், தோல்தொழில், குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் நிறுவனங்களும் (MSME) அடங்கும்.

இந்தியாவில் வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை 18 மில்லியனுக்கும் அதிகமாக இருக்கிறது. அண்மையில் வெளியிடப்பட்ட உலக வங்கியின் அறிக்கையும் இதனை உறுதிப்படுத்துகிறது. இந்த அறிக்கையின்படி இந்தியாவில் 15 முதல் 29 வயதிற்குட்பட்ட மக்கள்தொகையில் 30 சதவிகிதத்துக்கும் மேற்பட்டோர் பள்ளிக்கூடத்தில் படிக்காமல், வேலைசெய்யாமல் அல்லது தொழில் பயிற்சியில் ஈடுபடாமல் இருக்கின்றனர். இவை எல்லாம் சேர்ந்து நாட்டின் வளர்ச்சிக்கு வேலைவாய்ப்பு இன்மை என்பது மிகப்பெரிய பிரச்சினையாக இருப்பதைக் காட்டுகின்றன. இந்தியாவில் ஒட்டுமொத்த வேலை வாய்ப்பின்மை விகிதம் சுமாராக 3.5 சதவிகிதமாக உள்ளது. இதில் 15 முதல் 24 வயதிற்குட்பட்ட பிரிவில் உள்ள வேலை வாய்ப்பின்மையானது மிகப்பெரும் கவலை அளிக்கும் விஷயமாக உள்ளது. இந்த வயதுப்பிரிவினர்தான் முதன் முதலாக பணியில் சேர இருப்பவர்கள். அண்மையில் வெளியிடப்பட்ட சர்வதேசத் தொழிலாளர் அமைப்பின் அறிக்கையின்படி 15-24 வயதிற்குட்பட்டவர்களின் வேலை வாய்ப்பின்மை விகிதமானது 2014இல் 10 சதவிகிதம் என்பதில் இருந்து 2017இல் 10.5 சதவிகிதம் என அதிகரித்துள்ளது.

நாட்டில் ஒவ்வொரு மாதமும் ஒரு மில்லியன் நபர்கள் புதியதாக வேலை தேடும் தொழிலாளர்களாக சேர்கிறார்கள். ஆனால் இந்தத்தேவைக்கு ஏற்ப புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கமுடிவதில்லை. 2016ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட பணியாளர்களின் சேம நிதித்தொகையை அரசாங்கமே செலுத்தும் பிரதம மந்திரி ரோஜ்கர் புரோத்சாகன் திட்டத்தில் (Pradhan Mantri Rojgar Protsahan Yojana (PMRPY) 30,475 நிறுவனங்களில் இருந்து 2,164,575 ஊழியர்கள் பதிவு செய்துள்ளனர். இந்தத் திட்டத்தின் கீழ் எவ்வளவு பேர் பணியில் அமர்த்தப்படுவார்கள் என்பது தெளிவாகத் தெரியவில்லை.

1. இந்தியாவில் விவசாயத்துக்கு அடுத்த நிலையில் மிகப்பெரிய அளவில் வேலை நடக்கும், குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே வேலை வாய்ப்பு தரக்கூடிய தொழில் பிரிவாக கட்டுமானத்துறை விளங்குகிறது. நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்தத்துறையானது 45 மில்லியனுக்கு மேல் வேலைவாய்ப்பை உருவாக்குகின்றது. உள்கட்டமைப்பைப் பொறுத்த அளவில் 2018-19 பட்ஜெட்டானது விவசாயிகள் பிரச்சினைகளையும் புதிய வேலைவாய்ப்பு உருவாக்குவதையும் கவனத்தில் எடுத்துக் கொண்டுள்ளது. இந்த இரண்டு பிரச்சினைகளையும் பட்ஜெட் தீர்த்து வைக்க முயல்கிறது. விவசாயிகள் பிரச்சினைக்கு பட்ஜெட்டானது இணைப்புச் சாலைகள், கிராமப் புறச்சந்தைகள், வேளாண் விளைபொருட்களைப் பதப்படுத்தும் மையங்கள், உணவுப்பூங்காக்கள், நுண் நீர்ப்பாசனம், வைஃபி ஹாட்ஸ்பாட்டுகள், கழிவறைகள், சிக்கனமான செலவில் வீட்டுவசதி, சுகாதாரம் மற்றும் நலவாழ்வு மையங்கள், மாவட்ட மருத்துவ மனைகளைத் தரம் உயர்த்துதல், மாவட்ட அளவிலான தொழில்திறன் பயிற்சி மையங்கள், ஆகியவற்றை உள்ளடக்கிய ஊரகத் திட்டங்களை முன் வைத்துள்ளது. தெளிவாகச் சொல்வதானால் வேறு எந்த பட்ஜெட்டை விடவும் இந்த பட்ஜெட் மட்டும்தான் இந்த அளவு ஆழமாகவும் விரிவாகவும் ஊரகத்திட்டங்களுக்கு உந்துதல் கொடுத்துள்ளது. 2018-19 பட்ஜெட்டில் ஊரகப்பகுதிகளில் வாழ்வாதாரம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க பல்வேறு அமைச்சகங்களும் ஒன்றாகச் சேர்ந்து செலவழிக்கவேண்டிய தொகையாக ரூ.14.34 இலட்சம் கோடியை நிதி அமைச்சர் அறிவித்துள்ளார். இதில் கூடுதல் பட்ஜெட் மற்றும் பட்ஜெட் சாராத தொகை ரூ.11.98 இலட்சம் கோடியும் உள்ளடங்கும். உண்மையில் இது மிகப்பெரிய தொகை ஆகும். விவசாய நடவடிக்கைகள் மற்றும் சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்தித்தரும் வேலைவாய்ப்புகளையும் தாண்டி 321 கோடி மனித வேலை நாட்களை இந்தச் செலவு ஒதுக்கீட்டின் மூலம் உருவாக்க முடியும் என நிதி அமைச்சர் தெரிவித்து உள்ளார்.
2. ஆடை உற்பத்தியில் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கு ஊழியர்களை ஒப்பந்த அடிப்படையில் நியமித்தல் என்பது விரைவான வேலைகளை உருவாக்கும் வகையில் அனைத்துத்துறைகளுக்கும் விரிவுபடுத்தப்படுகிறது. இது வேலை வாய்ப்பை அளிப்பவர்கள் குறிப்பிட்ட திட்டங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்களை வேலைக்கு நியமித்துக்கொள்ள வழி செய்கிறது. திட்டங்கள் முழுமை அடைந்துவிட்டால் அவர்களை நீக்கி விட முடியும். துறைகளுக்கு இடையில் நிர்ணயிக்கப்பட்ட காலத்துக்கு ஊழியர்களை நியமித்தல் என்ற திட்டம் அந்தத்துறையில்

குறிப்பிட்ட காலத்துக்கு மட்டுமே வேலைதரும் என்ற நிலைமை இருந்தாலும் கூட புதிய வேலை உருவாக்கலுக்கு உந்துதல் தரும். பயிரிடுதல் மற்றும் சுரங்கவேலை போல துறைகளின் தேவைக்கேற்ப வேலைகளை உருவாக்கமுடியும்.

3. உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித்தரும் தொழிலுக்கு உந்துதல் அளிக்கப்பட்டுள்ளது. இதுதான் மிகப்பெரிய வேலை வாய்ப்பை உருவாக்கும் தொழிலாக உள்ளது. வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையிலும் வளர்ச்சிக்கு உதவும் வகையிலும் உள்கட்டமைப்பு வசதிகளுக்கு பட்ஜெட் மற்றும் கூடுதல் பட்ஜெட் சார்ந்த ஒதுக்கீடு 2018-19 பட்ஜெட்டில் ரூ.5.97 இலட்சம் கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கான மதிப்பீட்டுச் செலவு 2017-18ஆம் ஆண்டில்ரூ.4.94 இலட்சம் கோடியாக மட்டுமே இருந்தது.

4. ஆண்டுத்தொழில் தொகை ரூ.250 கோடி அளவிற்கு உள்ள கம்பெனிகளுக்கான நிறுவன வரிவிகிதம் 25 சதவிகிதம் என குறைக்கப்பட்டுள்ளது. இந்த 25 சதவிகித வரிவிகிதம் என்பது கடந்த ஆண்டு பட்ஜெட்டில் ஆண்டுத்தொழில்தொகை ரூ.50 கோடி என்பதற்குக் கீழ் உள்ள நிறுவனங்களுக்கே விதிக்கப்பட்டு இருந்தது. நிதி அமைச்சரின் கூற்றுப்படி, இந்த ஆண்டின் வளர்ச்சியானது வருமானவரி தாக்கல் செய்யும் 99 சதவிகித நிறுவனங்களுக்குப் பலன் அளிக்கும். அவற்றின் மூலதனம் அதிகஅளவில் உபரியாக இருக்கும். பிரதிபலனாக இது அதிக அளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்கும்.

5. தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிச்சட்டத்தில் திருத்தங்கள் செய்ய பட்ஜெட்டில் முன் மொழியப்பட்டுள்ளது. நிறுவனத்தில் மகளிர் பணியாற்றும் போது முதல் மூன்று வருடங்களுக்கு அந்தப்பெண் ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி பங்களிப்பை 8 சதவிகிதம் எனக் குறைக்கவும் அதே சமயம் வேலை அளிப்பவர்கள் செலுத்தவேண்டிய பங்களிப்பை 12 சதவிகிதம் என அதே அளவில் தொடரும் வகையிலும் திருத்தம் செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நிறைய பெண்கள் நிறுவன ஊழியர்களாகப் பணியாற்ற முன்வருவார்கள்.

6. பிரதமமந்திரி கௌஷல் கேந்திரத்திட்டத்தின் கீழ் நாட்டில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் திறன் பயிற்சி மையங்களை அரசு உருவாக்கும் என்று நிதி அமைச்சர் தனது பட்ஜட்டில் அறிவித்துள்ளார்.

7. அறிவிக்கப்பட்டுள்ள புதிய திட்டமான ஆயுஷ்மன் பாரத் திட்டமானது சுகாதாரத்தை முழுமையான அம்சமாகக் கருதுகிறது. இந்தத்திட்டம் இலட்சக் கணக்கான வேலைகளையும் உருவாக்கும். அதிலும் குறிப்பாக பெண்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தும்.

8. பிரதமமந்திரி ரோஜ்கர் புரோத்சாகான் திட்டத்துக்கான ஒதுக்கீடு 2018-19இல் ரூ.1,652 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 2017-18ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட மதிப்பீடு ரூ.500 கோடியாக மட்டுமே இருக்கிறது. தொழிலாளர்கள் அதிகம் ஈடுபட்டுள்ள தொழிலாக தோல்தொழில் உள்ளது. மேலும் இத்தொழிலில் நல்ல வளர்ச்சிக்கான வாய்ப்புகளும் உள்ளன. அரசின் பல்வேறு திட்டங்களின் கீழ் ஆயிரக்கணக்கான வேலையற்ற இளைஞர்கள் பயிற்சிபெற்று தோல்தொழிலில் பணியாற்றுகின்றனர். PMRPY திட்டமானது தோல் மற்றும் காலணி தயாரிப்புத்தொழிலில் மேலும் கூடுதலான வேலைவாய்ப்புகளை உருவாக்கும். ஆடை மற்றும் உபயோகிக்கத் தயார்நிலையில் இருக்கும் பொருட்களை உற்பத்தி செய்யும் பிரிவுகளுக்கு உந்துதல் கொடுக்க அரசு 2016இல் ஒரு விரிவான ஜவுளித்துறை திட்டத்தை ரூ.6,000 கோடியில் அனுமதித்தது. 2018-19ஆம் ஆண்டுக்கு ஜவுளித்துறைக்கு ரூ.7,148 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

9. MSME தொழில்பிரிவானது இந்தியாவில் வளர்ச்சியை விரைவுபடுத்தக்கூடிய, வேலை வாய்ப்பை உருவாக்கக்கூடிய மிகப்பெரிய பிரிவாக உள்ளது. அதிக அளவு வேலைகளை உருவாக்கும் வகையில் MSME பிரிவுக்கு ரூ.3,794 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தத் தொகையானது கடன் உதவி, மூலதனம், வட்டி மானியம் ஆகியவற்றுக்காகவும் ''புத்தாக்கங்களை உருவாக்க உதவுதல்'' என்ற அம்சத்துக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

10. புதிதாக வேலையில் சேரும் பெண்கள் ஊழியர் வருங்கால வைப்புநிதிக்கு செலுத்தவேண்டிய தொகையான 12 சதவிகிதத்தில் இருந்து 8 சதவிகிதம் எனக் குறைக்கப்படுவதாக பட்ஜெட்டில் அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்த அறிவிப்பானது தொழிலாளர்களாக பெண்கள் பங்கேற்பதை

ஊக்கப்படுத்தி அவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ளது. இது பெண் தொழிலாளர்கள் பிடித்தம் போக வீட்டுக்கு கொண்டு செல்லும் சம்பளத்தின் அளவை அதிகப்படுத்தும். உலக அளவில் பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு விகிதம் 40 சதவிகிதமாக உள்ளது. ஆனால் இந்தியாவில் பெண் தொழிலாளர்களின் பங்கேற்பு விகிதம் 25 சதவிகிமாக மட்டுமே உள்ளது. நிபுணர்களும் தொழில்துறைசார் வல்லுநர்களும் பெண்களின் பங்கேற்பை அதிகப்படுத்தினால் அது பொருளாதார உந்துதலுக்கு உதவியாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டுகின்றனர்.

11. "விவசாயம் சார்ந்த தொழில் பிரிவில் ஆக்கப்பூர்வமான வேலைகள்'' என்பது குறித்தும் நிதி அமைச்சர் பேசியுள்ளார். ''விவசாயிகளுக்கும் நிலமற்ற குடும்பத்தாருக்கும் விவசாயம் சார்ந்த மற்றும் விவசாயம் சாராத ஆக்கப்பூர்வமான, இலாபம் தரும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கு நாம் முக்கியத்துவம் தருகின்றோம் என்றும் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். சுயவேலை வாய்ப்பும், தொழில்முனைவும் கூடுதலான வேலைகளை உருவாக்குவதற்கான வழிமுறையாக உள்ளது என்று பட்ஜெட் குறிப்பிடுகிறது. ஏப்ரல் 2015இல் அறிவிக்கப்பட்ட முத்ரா திட்டத்தின்படி 103 மில்லியன் முத்ரா திட்ட கடன்களுக்காக ரூ.4.6 டிரில்லியன் தொகை அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டத்தில் கொடுக்கப்படும் கடன் எண்ணிக்கையில் முக்கால் பங்கு எண்ணிக்கைக்கு மேல் கடன்களைப் பெண்களே பெற்றுள்ளனர். அதே போன்று பாதிக்கும் மேலான கடன்கள் முன்னுரிமை அல்லாத பிரிவினருக்கு வழங்கப் பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் வெற்றிகரமாகத் தாண்டப்பட்டுள்ளன. 2018-19ஆம் ஆண்டுக்கு முத்ரா திட்டத்தின் கீழ் கடன் அளிக்க ரூ.3 டிரில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. சிறுதொழில் முனைவோர் வேலைகளை உருவாக்க இந்தக்கடன்கள் உதவியாக இருக்கும்.

12. 2018-19இல் வெளியிடப்பட்டு உள்ள பட்ஜெட் வேளாண்பிரிவுக்கு தெளிவான வழிகாட்டுதலைத் தருகிறது. விவசாயம் என்பதைப் பயிர்செய்யும் தொழில் எனத் தனித்துப்பார்க்காமல் ஒரு தொழில் அமைப்பாக முழுமையானதாகப் பார்க்கவேண்டிய தேவை உள்ளது. உற்பத்தியை மட்டுமே மையமாகக் கொண்டு விவசாயக் கொள்கைகளை உருவாக்கக்கூடாது. ஒட்டுமொத்த விவசாய மதிப்பீட்டு அமைப்பை மேம்படுத்துவதாக கொள்கைகள் இருக்கவேண்டும் - அதாவது அறுவடைக்கு முன்பு முதல் அறுவடைக்கு பின்பு வரை என முழுமையான விநியோகச் சங்கிலித்தொடராகப் பார்க்கப்படவேண்டும். அதே போன்று சந்தைத்தேவைகளும் பார்க்கப்படவேண்டும். அதாவது கொள்கையை உருவாக்குபவர்கள் இந்த அம்சங்களில் கவனம் செலுத்தவேண்டும். அதே போன்று அரசு செயல்படுத்தும் செயல் திட்டங்களும் இவற்றின் மீது கவனம் செலுத்தவேண்டும். விவசாயத்தில் பலவீனமாக உள்ள பிரிவுகளில் சமநிலையை ஏற்படுத்தவும் சீர்செய்யவும் இந்த பட்ஜெட்டில் வேளாண் தளவாடங்கள், பதப்படுத்துதல் மற்றும் சந்தை உள்கட்டமைப்பு வசதி ஆகியவற்றின் மீது சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்த அனைத்துக்கூறுகளும் சேர்ந்து வேலைவாய்ப்பு, அறுவடைக்குப் பின்பான அறிவியல்பூர்வமான மேலாண்மை, குளிர்சாதன சேமிப்புக் கிடங்குகள் தொடர் மற்றும் அறுவடைக்குப் பின்பு தேவைப்படும் உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றுக்கு உந்துதலாக இருக்கும் குறிப்பிடத்தக்க சில நடவடிக்கைகள் கீழே தரப்படுகின்றன:

- ஆண்டுத் தொழில்தொகை ரூ.100 கோடிக்குக் குறைவாக உள்ள வேளாண் உற்பத்தி அமைப்புகளுக்கு (FPO) முதல் ஐந்து ஆண்டுகளுக்கு வருமான வரி விலக்கு - அறுவடைக்குப் பின்பு மதிப்புக்கூட்டலை ஊக்குவிக்கும் வகையில் இந்த வரிவிலக்கு அளிக்கப்படுகிறது. FPOs/VPOs ஆகியவற்றின் மூலமாக தோட்டக்கலைப் பயிர் விநியோகச் சங்கிலித் தொடரில் பொருளாதார வளர்ச்சியை அடைய, தொகுப்பாகப்பயிரிடுதல் மற்றும் வளர்ச்சி முறை தேவைப்படுகிறது.
- வேளாண் தளவாடங்கள் மற்றும் பதப்படுத்துதல் மீது கவனம் செலுத்தும் பசுமை நடவடிக்கைகள்: அதாவது வெள்ள அபாயத் தடுப்பு நடவடிக்கைகள் போன்று இது இருக்கும். இதற்கான ஒதுக்கீடு ரூ.500 கோடி ஆகும். இது ஊரகப்பகுதிகளில் வேலை வாய்ப்பை உருவாக்கும். GrAMs (ஊரக அளவில் சந்தைகள் மற்றும் பல சந்தைகள் சேர்ந்த மையங்கள்) நிர்மாணிக்க ரூ.2,000 கோடியில்

வேளாண்சந்தை உள்கட்டமைப்பு நிதியம் தொடங்கப்பட்டுள்ளது. இது வேளாண் சந்தைகளின் தரநிலையை உயர்த்தும்.

- காரீஃப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதாரவிலை உற்பத்திச் செலவைக் காட்டிலும் 1.5 மடங்கு கூடுதலாகவே இருக்கும்.
- “கிரீன்-கோல்டு” என்ற மறுசீரமைக்கப்பட்ட மூங்கில் உற்பத்தி இயக்கமானது ரூ.1290 கோடி ஒதுக்கீட்டில் தொடங்கப்படுகிறது. இது மூங்கில் பிரிவை ஒட்டுமொத்தமாகக் கணக்கில் எடுத்துக்கொண்டு மேம்படுத்தும்.
- நீர்ப்பாசன அபிவிருத்திக்கு (PMSY) ஒதுக்கீடு ரூ.2,600 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் உறுதியான நீர்ப்பாசனம் பெறும் விவசாய நிலத்தின் பங்கு 30 சதவிகிதத்துக்கும் குறைவாக உள்ள 96 மாவட்டங்கள் கவனம் பெறுகின்றன.
- மீன்பிடித்தொழில் மற்றும் மீன் வளர்ப்புத் தொழில் உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டு நிதியம் மற்றும் கால்நடை வளர்ப்பு உள்கட்டமைப்பு வசதி மேம்பாட்டுநிதியம் ஆகியவற்றுக்கு மொத்தமாக ரூ.10,000 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.
- உணவு பதப்படுத்துதல் தொழில் அமைச்சகத்துக்கான ஒதுக்கீடு ரூ.1,400 கோடி என இரண்டு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயம் சார்ந்த பதப்படுத்துதல் நிறுவனங்கள் மேம்பாடு அடையும்.

இறுதியாகச் சொல்லவேண்டுமென்றால், எதிர்பார்த்தபடி இந்த பட்ஜெட்டானது வேலைவாய்ப்பை உருவாக்குதல், ஊரகவிவசாயம் மற்றும் குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில் ஆகியவற்றில் கவனம் செலுத்திள்ளது. விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல், விரிவான சுகாதாரக்காப்பீடு வழங்குதல், எம்.எஸ்.எம்.இக்களுக்கு தடையில்லாமல் கடன் வழங்கும் வசதி, முத்ரா திட்டத்தின் கீழ் கடன் வழங்கும் இலக்குகளை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்தல் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு ஏற்ற கொள்கை சார்ந்த அறிவிப்புகள் பட்ஜெட்டில் வெளியிடப்பட்டுள்ளன. அதே போன்று உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பிரிவுகளுக்கான ஒதுக்கீடும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

‘‘வெற்றிடத்தில் நீங்களாகவே அமிழ்ந்து கரைந்து கலந்துவிடுங்கள். உங்கள் இடத்தில் புதிய இந்தியா உருவாகட்டும். அவளைத் தோன்றவிடுங்கள் - உழவர்களின் குடிசைகளில் இருந்து, கலப்பையில் இருந்து, மீனவர்களின் குடிசைகளில் இருந்து அவள் தோன்றட்டும். மளிகைக்கடையில் இருந்து அவள் எழட்டும், ரொட்டித்துண்டு விற்பனையாளர்களின் அடுப்புகளில் இருந்து அவள் எழட்டும். தொழிற்சாலையில் இருந்து, கடைகளில் இருந்து, சந்தைகளில் இருந்து அவள் தோன்றட்டும். தோப்புகள் மற்றும் காடுகளில் இருந்து அவள் தோன்றட்டும். குன்றுகள் மற்றும் கலைகளில் இருந்து அவள் எழட்டும்’’ என்ற சுவாமி விவேகானந்தரின் மேற்கோளைச் சுட்டிக்காட்டி நாம் விரும்பும் புதிய இந்தியா இப்போது இவற்றில் இருந்து உருவாகும் என நான் உறுதி அளிக்கிறேன் என நிதிஅமைச்சர் கூறியுள்ளார்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், நிதிஅமைச்சர் மிக அருமையான ஒரு பட்ஜெட்டைத் தாக்கல் செய்துள்ளார். விவசாயம், சுகாதாரப்பராமரிப்பு, கல்வி, உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஊரகமேம்பாடு ஆகிய அடிப்படைப்பிரிவுகளின் மீது முக்கியத்துவம் செலுத்தும் பட்ஜெட்டைத் தாக்கல் செய்துள்ளார். விவேகமான நிதிப்பயன்பாடு, உற்பத்தித்துறைக்கு தேவையான ஊக்கம், குறு, சிறு மற்றும் நடுத்தரத்தொழில்களுக்கு உத்வேகம், சுகாதாரப்பராமரிப்பு மேம்பாடு, தொழில்திறன் மேம்பாடு ஆகியவற்றின் மீது தொடர்ச்சியாக கவனம் செலுத்தப்படுகிறது. இவையே இந்த பட்ஜெட்டின் மிக முக்கியமான அம்சங்கள் ஆகும். சுருக்கமாகச் சொல்வதென்றால், புதிய மற்றும் புத்தெழுச்சி பெறும் இந்தியாவின் வளர்ச்சி மீது அதிக கவனம் செலுத்தும் பட்ஜெட்டாக இது இருக்கிறது. இந்தியப் பொருளாதாரத்திற்கு வலிமையும் வளமும் சேர்ப்பதாகவும் உள்ளது. இலட்சக்கணக்கான வேலைகளை உருவாக்கவும் எட்டு சதவிகித வளர்ச்சி என்ற இலக்கை அடையவும் உதவக் கூடிய பட்ஜெட் இது எனத் தெளிவாகக் கூறலாம்.

---

- **டாக்டர் ரஞ்சித் மேத்தா,** பல்வேறு துறைகளில் தலைமைப்பொறுப்புகளில் 30 ஆண்டுகால அனுபவம் பெற்றவர். இவர் புதுதில்லியில் உள்ள பி.எச்.டி.தொழில் வர்த்தகசபையில் முதன்மை இயக்குநராக உள்ளார்.

•

# உடல்நலத்திற்கான ஊதுகுழலை பட்ஜெட் ஊதுகிறது

- கே.ஸ்ரீநாத் ரெட்டி

பொதுசுகாதாரம் தொடர்பான பட்ஜெட் எதிர்பார்ப்புகள் பற்றி ஊடகங்களில் வெளியாகும் கருத்துகள், பொது சுகாதாரத்திற்காக வாதாடுபவர்களின் பட்ஜெட்டிற்கு பிந்தைய எதிர்வினைகள் ஆகியவை ஒரேவிதமான வார்த்தைகளைப்பயன்படுத்தியே கடந்த பத்தாண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் எழுதப்பட்டு வந்திருக்கின்றன. பொதுசுகாதாரத்திற்கு ஒதுக்கப்படும் நிதி கணிசமாக அதிகரிக்கும் என்று நம்பிக்கை வெளிப்படுத்தப்படுவதும், அவ்வாறு ஒதுக்கப்படாததற்கு பட்ஜெட்டிற்கு பிந்தையவிவாதங்களில் ஆட்சேபனை தெரிவிப்பதும் வழக்கமாக இருந்து வந்தது. கடந்த பட்ஜெட்டில் தேசிய ஊரக சுகாதாரத்திட்டம் (NRHM) அறிவிக்கப்பட்டபோது சற்று சந்தோஷம் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து, தொழிலாளர் அமைச்சகத்தின் கீழ் ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீம யோஜனா (RSBY) அறிவிக்கப்பட்டது. மற்றபடி, பட்ஜெட் அறிவிப்புகளில் சுகாதாரம் விளிம்பு நிலையிலேயே இருந்துவந்தது. 2018 பட்ஜெட் வித்தியாசமான நிரூபணமாக இருக்கிறது. பட்ஜெட்டில் சொல்லப்பட்ட மிகப்பெரிய முன்முயற்சி அறிவிப்புகள் சுகாதாரத்துறை சார்ந்த விற்பன்னர்கள், ஊடகம், பொதுமக்கள் ஆகியோர் மத்தியில் வெகுவான உற்சாகத்தினை வரவழைத்தன. இலட்சிய தாகத்துடன் கூடிய இத்தகைய முன்மொழிவுகள் மூலம் நலம் பேணல் எந்த அளவுக்கு ஆதாயம் பெறும் என்பது பற்றிய விவாதங்கள் எழுந்துள்ளன.

இவற்றில் இரண்டு முன்முயற்சிகள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஆயுஷ்மான் பாரத் திட்டம் என்ற உணர்ச்சியைத் தூண்டும் பெயரைப் பெற்றுள்ளது. ஒருங்கிணைந்த ஆரம்ப சுகாதார மையங்களை (Comprehensive Primary Health Centre CPHC) மேம்படுத்துவதற்கான ஒரு திட்டமாக இது உள்ளது. 1,50,000 துணை சுகாதார மையங்களை சுகாதாரம் மற்றும் நல மையங்களாக - Health and Wellness Centres (HWCs) மாற்றுவதற்கான திட்டம் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. 10கோடி ஏழைக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு மருத்துவ செலவுகளுக்கு ரூ.5இலட்சம் வரை உத்திரவாதம் அளிக்கும் தேசிய சுகாதாரப்பாதுகாப்புத்திட்டமும் (National Health Protection Scheme - NHPS) அறிவிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப சுகாதார சேவைகளை வலுப்படுத்தும் நோக்கத்தோடு, தேசிய ஊரக சுகாதாரத்திட்டம் என்ற அடித்தளத்தின் மீது ஒன்றிணைந்த ஆரம்ப சுகாதார மையங்கள் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ளன. தேசிய ஊரக சுகாதாரத்திட்டம் தாய் சேய் நலத்தில் கவனம் செலுத்தும் வேளையில், தொடர்ச்சியான, ஒன்றிணைந்த ஆரம்ப சுகாதாரத் தேவைகளுக்கான ஒரு வாகனமாக தேசிய சுகாதாரத்திட்டம் இருக்கவேண்டுமென்று தேசிய சுகாதாரக்கொள்கை 2017 தெரிவித்திருந்தது. இதுவரை கவனம் பெறாதிருக்கும் தொற்றாநோய்கள், மனநலக்கோளாறுகள் போன்றவற்றை கவனிப்பதற்கான சேவைகளை விரிவுபடுத்த வேண்டியிருக்கிறது. சமூகத்தில் சுகாதார மேம்பாட்டு முயற்சிகளை மேற்கொள்வதுடன் கூடவே, தாய் சேய் நலம், தொற்றுநோய்கள், தொற்றாத நோய்கள், ஆகியவற்றை ஒன்றிணைக்கும் தளமாக தேசிய சுகாதாரத்திட்டம் இறுதியில் மாறவேண்டி இருக்கிறது.

நாள்பட்டு நீடித்திருக்கக்கூடிய நோய்களுக்கு தொடர் மருத்துவ கவனம் தேவைப்படுவதால் ஆரம்ப சுகாதார மையங்கள் மூலம் இத்தகைய கவனத்தைத்தரமுடியும். மேல் சிகிச்சை தேவைப்படும்போது குறிப்புதந்து உரிய சிகிச்சைக்கு அனுப்பிவைக்கவும் இயலும். மகப்பேறு கால தொடர்கவனிப்பு, காசநோய், எய்ட்ஸ் ஆகியவற்றிற்கான தொடர் கண்காணிப்பு ஆகியவற்றையும் இவை செய்யமுடியும் என்றாலும், இவை பெரும்பாலும் கடுமையான, உபநோய்க ளுக்காகவே கட்டமைக்கப்பட்டுள்ளன. உயர் இரத்த அழுத்தம், மனநலக்கோளாறுகள் போன்ற நீடித்திருக்கும் நோய்களுக்கு நீண்டகால கவனத்திற்கான தேவை அதிகரித்துவரும் இந்த சமயத்தில் தொடர் கவன மையமாக இவற்றைக் கட்டமைக்கவேண்டிய தேவை எழுந்திருக்கிறது. சமூகஅளவிலான சுகாதாரக்கல்வி, தனிநபர்



ஆலோசனை ஆகியவற்றின் மூலம் சுகாதார மேம்பாட்டை செய்யவேண்டியது ஒரு முக்கியமான செயலாகும். ஆரம்ப சுகாதார மையங்களில் இதுகாறும் இவை புறக்கணிக்கப்பட்டே வந்திருக்கின்றன. சத்தான உணவு, தொடர்ச்சியான உடலியல் செயல்பாடுகள் போன்றவற்றை பரிந்துரைப்பதைப் போலவே புகையிலைப் பொருள்களின் பயன்பாட்டை நிறுத்துவதற்கான முயற்சிகளையும் இவை செய்யவேண்டும்.

துணை சுகாதார மையங்களை சுகாதார, நல மையங்களாக மாற்றும் கருத்து, சுகாதாரத்திற்கான ஒருங்கிணைந்த அடிப்படை கவனத்தோடு, தொடர்கவனத்தையும் வழங்குவதற்கு வகைசெய்யும். அடிப்படை சுகாதார சேவைகளை கிராம மக்களுக்கு வெகு நெருக்கமாக இவை கொண்டுவரும். ஏராளமான மக்களை நேரடியாக அணுகுவதன் மூலமாக நோய்தவிர்ப்பும், சுகாதார மேம்பாடும் சாத்தியப்படும். மருத்துவர் அல்லாத, சுகாதார சேவைபுரியும் செவிலியர் போன்ற பணியாளர்களைக் கொண்டிருப்பதால் இங்கு அடிப்படையான சில நோய்களைக் கண்டறிதல், தேவைப்படும் மருந்துகளை இலவசமாக வழங்குதல் ஆகியவற்றை சுகாதார, நல மையங்கள் மேற்கொள்ளும். பலவிதமான நோய்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் மையமாகவும் இவை அமையும். தகவல் தொழில்நுட்பங்களைப் பொருத்தமாக பயன்படுத்துவதன் மூலம், சுகாதாரம் குறித்த நிகழ்நேரத் தகவல்களையும், தரவுகளையும் பெறுவதற்கும், பல்வேறு சுகாதார குறிகாட்டிகளை கண்காணிப்பதற்கும் இந்த மையங்கள் உதவும். தொலைதூரத்தில் உள்ள மருத்துவர்களைத் தொடர்புகொண்டு தொலைமருத்துவமளித்தல், கைபேசி தொழில்நுட்பங்களை சரியான அளவில் பயன்படுத்துதல் போன்றவை சுகாதார நல மையங்களில் சேவை வழங்கலை மேம்படுத்த உதவமுடியும்.

சுகாதார நலமையங்களை உருவாக்குவது வரவேற்கத்தக்கதுதான் என்றாலும், ஆரம்ப சுகாதார சேவைகளை வலுப்படுத்துவதற்கு ஆரம்ப சுகாதார மையங்களையும், சமுதாய சுகாதார மையங்களையும் விரிவாக்குவதும் கட்டாயமாகும். தேசிய சுகாதாரத் திட்டத்திற்கான பட்ஜெட் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் அறிவிப்புக்குப் பொருத்தமானதாக இல்லை. இந்த ஒதுக்கீடு முந்தைய ஆண்டின் திருத்தப்பட்ட மதிப்பீட்டை விடவும் 2.1% குறைந்துள்ளது. இது ஏமாற்றம் அளிப்பதாக இருக்கிறது. நகர்ப்புற ஆரம்ப சுகாதாரம் புறக்கணிக்கப்பட்ட ஒன்றாகவே இருந்துவருகிறது. கிராமப்புறங்களில் இருந்து நகரங்களுக்கு மக்கள் இடம்பெயர்வது அதிகரித்துவரும் நிலையிலும், நகர்ப்புற குடிசைப்பகுதிகள், குறைந்த வருமானம் உடையவர்கள் கூடிக்கொண்டேவரும் நிலையிலும் நகரங்களிலும், பெருநகரங்களிலும் ஆரம்பசுகாதாரத்திற்கான அவசரத்தேவை அதிகம் இருக்கிறது. எனவே, நகர மக்களுக்கும் சுகாதார, நல மையங்கள் தேவைப்படுகின்றன. ரூ.1200 கோடி என்ற நிதிஒதுக்கீடு மேலும் அதிகரிக்கப்பட்டு முயற்சிகள் மிகுவிக்கப்படவேண்டும்.

மனிதவளம் குறைவாக உள்ள நிலையில் முழுவதுமாக செயல்படக்கூடிய சுகாதார, நலமையங்களை உருவாக்குவது மிகப்பெரிய ஒரு சவாலாகும். ஆரம்ப சுகாதார மையங்களில் போதிய மருத்துவர்கள் இல்லாத நிலையில், சுகாதார நலமையங்களில் மருத்துவர் அல்லாத சுகாதாரப் பணியாளர்கள் மட்டுமே நியமிக்கப்பட இருக்கின்றனர். ஆகவே, ஆரம்ப சுகாதார சேவைகளை வழங்கும் அளவிற்கு பயிற்சி பெற்றுள்ள செவிலியர்கள், மூன்று ஆண்டுகள் பயின்று பட்டம் பெற்றுள்ள சமுதாய சுகாதார உதவியாளர்கள் போன்ற ஆரம்ப சுகாதாரப்பணிகளுக்குப் பொருத்தமானவர்களை உருவாக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. ஆயுஷ் பட்டதாரிகளை (பாரம்பரிய மருத்துவத்தில் பயிற்சி பெற்றவர்கள்) ஆங்கில மருத்துவத்தில் இணைப்புப் பயிற்சி அளித்து இந்த மையங்களுக்கு அனுப்பி

வைப்பது என்ற புதுக்கருத்து சர்ச்சைக்குரியது. ஆயுஷ் மருத்துவர்கள் அவர்கள் பயிற்சி பெற்றுள்ள பாரம்பரிய மருத்துவத்தின் மூலம் சுகாதார மேம்பாட்டிற்கு பங்களிப்பதுதான் பொருத்தமானதாக இருக்கும். இரண்டு துணை பேறுகால மருத்துவச்சிகளுடன் ஒரு ஆண் பல்நோக்குப் பணியாளரும் மையத்திற்குத் தேவைப்படுகிறார். மருந்து வழங்குதலையும் செய்யக்கூடிய, பரிசோதனைக்கூட தொழில்நுட்ப உதவியாளர் ஒருவரும் தேவை. சுகாதார நலமையங்களுக்கான மனிதவளத்திற்கு பெருமுயற்சி தேவை. இது பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கக்கூடியதாகும். ஏழைகளுக்கு மருத்துவ அட்டைகள் வழங்கும் திட்டமான தேசிய சுகாதாரக்காப்புறுதித் திட்டம் (Rashtriya Swasthya Bima Yojna - NHPS) மூலம் கிடைத்துள்ள அனுபவம், பாடங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தத்திட்டம் கட்டமைக்கப்பட்டுள்ளது. காப்புறுதித்திட்டத்தின் மூலம் பயன்பெறும் ஏழைகளுக்கு ஒரு குடும்பத்திற்கு ரூ.30000/- அதிகபட்சப் பயனாகும். சில மாநிலங்களில் அரசாங்கத் திட்டங்கள் ஒரு குடும்பத்திற்கு ரூ.1 இலட்சம் முதல் ரூ.3இலட்சம் வரையிலான சுகாதாரக்காப்பீட்டுத்திட்டங்களைச்செயல்படுத்திவருகின்றன. கைப்பணத்திலிருந்து செய்யப்படும் மருத்துவச் செலவுகள், பெருங்கேடுவிளைக்கும் நோய்களுக்கான செலவுகள், மருத்துவ செலவுகளால் ஏற்படும் வறுமை நிலை அகியவற்றிற்கு இத்தகைய காப்பீடுகள் உதவுவதில்லை. பொதுத்துறை, தனியார் துறை சேவைகளும், வலுவான தகவல் தொழில்நுட்ப வசதிகளும் சுகாதாரக்காப்பீடு அனுபவத்தின் மூலம் பெறப்பட்டவை. ஆரம்ப சுகாதாரத்துடன் தொடர்பில்லாமல் போனதால் மத்திய, மாநில அரசுகளின் சுகாதாரக் காப்பீட்டுத்திட்டங்களின் நன்மைகள் குறைந்துவிட்டன.

தேசிய மருத்துவக் காப்பீட்டுத்திட்டம் (NHPS) 10கோடி ஏழைக்குடும்பங்களுக்கு மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறுவதற்கு ஆண்டுக்கு ரூ. 5,00,000 காப்பீடு அளிக்கிறது. கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ள இந்தக் காப்பீட்டுத்தொகை வரம்பு, கடும் பாதிப்புகளை ஏற்படுத்தும் உடல்நலக்கோளாறுகளுக்கு ஆகக்கூடிய செலவைக் குறைக்கும். ஆனால், புறநோயாளியாக இருந்து சிகிச்சை பெறுவதற்கான செலவுகளை வழங்காது. சுகாதார நலமையங்கள், மற்றுமுள்ள பிற ஆரம்ப சுகாதார மையங்கள் ஆகிவற்றை வலுப்படுத்துவது இதற்கு ஒரு நிவாரணத்தை வழங்கும். திறமையான ஆரம்ப சுகாதார சேவைகள் வாயில் காப்போனைப்போல செயல்பட்டு இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மருத்துவ தேவைகளுக்கான அவசியத்தைக் குறைத்துவிடும். இப்படி ஒரு வசதி இல்லாமல் எல்லோரும் தேசிய சுகாதாரக் காப்புறுதிதிட்டம் ஒன்றை மட்டுமே நாடி வரும்போது, இதற்கான ஒதுக்கீடு அனைத்தும் விரைவாகத் தீர்ந்துவிடும்.

அக்டோபர் 2018 முதற்கொண்டு செயல்படவிருக்கும் தேசிய சுகாதாரக் காப்புறுதித்திட்டத்திற்கு இந்த ஆண்டிற்கு ரூ.2000 கோடி மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கும் போதிலும், இந்தத்திட்டம் முழுமையாக செயல்படுவதற்கு இதைபோல ஐந்து முதல் ஆறு மடங்கு நிதி அதிகமாகத் தேவைப்படும். மாநில அரசுகள் 40% நிதியைத் தரும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய சுகாதாரக் காப்பீட்டுத்திட்டதில் இணைந்துகொள்ள மாநில அரசுகளுக்கு உற்சாகம் அளிக்கப்படும். இப்படி செய்வது மாநிலம் விட்டு மாநிலம் செல்லக் கூடியவர்களுக்கு உதவிகரமாக இருக்கும். ஆயினும், இதற்கு ஆளும் அரசுகளிடையே ஒருமித்தக்கருத்து உருவாகவேண்டும்.

பட்டியலில் இடம்பெற்றுள்ள அரசு, தனியார் மருத்துவமனைகளின் சேவைகள் தேசிய சுகாதாரக்காப்பீட்டுத் திட்டத்தில் தேவையான அளவிற்குப் பெற்றுக்கொள்ளப்படலாம். எந்தெந்த நோய்களுக்கு, எந்தெந்த பரிசோதனைகளுக்கு இத்தகைய சேவைகளை அளிப்பது என்பது பற்றி கவனமாக முடிவு செய்யவேண்டும். மோசடிகளைத் தடுக்கும் முறைகளும், குறைதீர்க்கும் முறைகளும் உருவாக்கப்படவேண்டும். இந்தத் திட்டத்தின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்கவேண்டும். இல்லையெனில் செலவுகள் அதிகரித்துவிடும்.

தேசிய சுகாதாரக்காப்பீட்டுத்திட்டத்தை நிர்வகிக்கும் பொறுப்பு ஒரு அறக்கட்டளைக்கோ அல்லது, காப்பீட்டு நிறுவனத்திடமோ தரப்படவேண்டும். இடையில் இருக்கவேண்டிய பொதுநபர் யார் என்பதை அரசுகள் முடிவுசெய்ய

வேண்டும். தேசிய சுகாதாரக்காப்பீட்டுத்திட்டம் அரசின் வரி வருமானத்திலிருந்து செலவழிக்கக்கூடிய, ஏழைகளுக்கும் எளிதில் பாதிக்கப்படக் கூடியோருக்குமான திட்டம் என்றாலும், ஏழைகள் அல்லாதோரும் காப்பீட்டுத்தொகை செலுத்தி இத்தகைய காப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு தரப்படவேண்டும்.

மருத்துவர்கள், சிறப்பு மருத்துவர்கள் அதிகமாக தேவைப்படுகின்றனர். மாவட்ட மருத்துவனைகளில் இவர்கள் இருக்கவேண்டும். 24 புதிய மருத்துவக்கல்லூரிகளை ஆரம்பித்து, தரம் உயர்த்தப்பட்ட மாவட்ட மருத்துவமனைகளுடன் அவற்றை இணைக்கும் கருத்தை இந்த பட்ஜெட் முன் வைத்துள்ளது. ஒவ்வொரு மூன்று நாடாளுமன்றத் தொகுதிக்கும் ஒரு மருத்துவக்கல்லூரி அமைக்கப்படும். இதற்கு அதிக அளவிலான பொதுநிதி தேவைப்படும். புதிய மருத்துவக் கல்லூரிகளுக்கான ஒதுக்கீடு 12.5% குறைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் கணிசமான அதிகரிப்பு இருந்தால் ஒழிய 2015ஆம் ஆண்டில் உள்நாட்டு ஒட்டுமொத்த உற்பத்தியில் 2.5% பொதுநிதியை சுகாதரத்திற்கு தருவது என்பது எட்ட்முடியாததாகிவிடும்.

காசநோயினால் பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு மாதம் ரூ.500 வீதம் நிதி உதவி தருவதற்கு பட்ஜெட்டில் ரூ.600 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. காசநோயாளிகளின் ஊட்டச்சத்து அதிகரித்து நோய் எதிர்ப்பு சக்தி பெருகுவதற்கு இது உதவும். தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் கழிப்பறை கட்டுதல், திறந்த வெளியில் மலஜலம் கழித்தலை ஒழித்தல் ஆகிய துப்புரவுப்பணிகளுக்கு ஒதுக்கீடு அதிகரித்துள்ளது. காற்றுமாசு, நோய்கள் வருவதற்கான இரண்டாவது மிக முக்கியமான காரணியாகும். தில்லிக்கும், அதன் அருகில் இருக்கும் மாநிலங்களுக்கும் பயிர்க்கழிவுகளை எரிக்காமல் நீக்குவதற்கு நிதிஉதவி அளிக்கப்படும். உஜ்வாலா திட்டத்தின் கீழ் இன்னும் அதிகமான ஏழைப்பெண்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு தரப்படும். இதனால் அடுப்புப்புகையில் இருந்து குழந்தைகள் தப்பிக்கமுடியும். காற்று மாசினைக் குறைப்பதன் மூலம் சுவாசக்கோளாறுகள், இதய நோய்கள், புற்றுநோய், குழந்தைப்பருவ ஆஸ்த்மா, சுவாசத்தொற்றுக்கள், நீரிழிவு நோய் போன்றவற்றைக் குறைக்கலாம்.



2018 மத்திய பட்ஜெட் சுகாதாரத்தை மையப்புள்ளியாகக் கொண்டிருக்கிறது. எனினும் பேரார்வத்துடன் முன்மொழியப்பட்டுள்ள முன்முயற்சிகளின் வெற்றி தொடர்ச்சியாக அதிகரிக்கும் மத்திய மாநில அரசுகளின் நிதி ஒதுக்கீட்டைப்பொறுத்தே அமையும். தங்களின் ஒட்டுமொத்த பட்ஜெட்டில் 8% தொகையை 2020 வாக்கில் மாநிலங்கள் ஒதுக்கித்தரவேண்டும் என்று தேசிய சுகாதாரத்திட்டம் அழைப்புவிடுத்துள்ளது. வலிமைமிக்க ஒழுங்காற்று அமைப்புகள் உருவாக்கப்பட்டு கண்காணிப்பு செய்யப்பட்டால்தான் உரிய காலத்தில் பயன்கிடைக்கும். அனைவருக்கும் சுகாதாரம் என்ற இலக்கை அப்போதுதான் இந்தியா வெற்றிகரமாக எட்டமுடியும். இதற்கான ஊதுகுழல் இப்போது ஊதப்பட்டிருக்கிறது. அணிவகுப்பு இனி தான் தொடங்கவேண்டும்.

- **கே.ஸ்ரீநாத் ரெட்டி**, தலைவர், இந்திய பொதுசுகாதார அமைப்பு. (PHFI)

**ஏப்ரல் மாத இதழில்**

**"வடகிழக்கு மாநிலங்கள்"**

**பற்றிய சிறப்புக் கட்டுரைகள் இடம்பெறும்.**

# பட்ஜெட் மூலமாக உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதில் உள்ள சவால்கள்

- ஜி. ரகுராம்

**முன்னுரை:**

2018-19ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டானது உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.5.97 ட்ரில்லியன் தொகையை மொத்தமாக ஒதுக்கியுள்ளது. ஆனால் உள்கட்டமைப்பு வசதிகளுக்காக 2017-18ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட செலவினத்தின் மதிப்பு ரூ.4.94 ட்ரில்லியன் மட்டுமே என்பதோடு புதிய பட்ஜெட்டின் ஒதுக்கீட்டையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அடிப்படையில் உள்கட்டமைப்பு வசதிகளுக்கான ஒதுக்கீட்டுத் தொகையானது அதிகரித்திருப்பதோடு மொத்த பட்ஜெட் ஒதுக்கீட்டில் அதன் பங்கும் அதிகரித்திருக்கிறது. ரெயில்வே துறை, சாலைகள், கப்பல் போக்குவரத்து முதலான உள்கட்டமைப்பின் துணைப்பிரிவுகள் அனைத்துக்குமே நிதி ஒதுக்கீடுகள் அதிகரித்துள்ளன.

அதிக அளவில் நிதி செலவிடப்படக்கூடிய ஒரு துறையாக இந்திய ரெயில்வே துறையானது உள்ளது. ரெயில் பாதையை இரட்டிப்பாக்குதல், மூன்றாம் மற்றும் நான்காம் பாதைக்கான வேலைகள் உள்ளிட்ட நிறுவுதிறன்களை உருவாக்குதல்; 5,000 கி.மீ தூர ரெயில் பாதைகளை அகல ரெயில் பாதையாக மாற்றுதல் 600 நவீன ரெயில் பணிமனைகளை அறிமுகப்படுத்துதல் ஆகிய அம்சங்கள் மீது நடப்பு பட்ஜெட் கவனம் செலுத்துகிறது. மும்பை மற்றும் பெங்களூரு உள்ளிட்ட புறநகர் ரெயில்வே சேவை மீதும் பட்ஜெட் சிறப்பு கவனம் செலுத்துகிறது. மும்பைக்கான செலவினம் என்பது ரூ.0.55 டிரில்லியன் மதிப்பிலான மும்பை நகரப்போக்குவரத்துத் திட்டத்தின் (M.V.T.P) நிலை 3அவின் பகுதியாக இருக்கும்.

மத்திய பட்ஜெட்டில் சாலை உள்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ 1.21 ட்ரில்லியன் தொகை மொத்த ஒதுக்கீடாக சேர்க்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினம் ரூ.5.35 ட்ரில்லியன் மதிப்பில் அனுமதிக்கப்பட்டுள்ள பரத்மாலா செயல் திட்டத்தின் ஒரு பாகமாக இருக்கும். பொருளாதாரப்பெருவழிகளை உருவாக்குதல், முக்கியமான தேசியப்பெருவழிகளில் திறன் அபிவிருத்தி செய்தல், எல்லைப்பகுதிகள், கடற்கரைப்பகுதிகள் மற்றும் துறைமுகங்களை இணைக்கும் சாலைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக பாரத்மாலா செயல்திட்டம் உள்ளது.

ரெயில்வே துறை மற்றும் இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் (NHAI) இரண்டும் துறைக்குள் ஏற்படும் உபரி வருமானம் மற்றும் பட்ஜெட் மூலமான நிதி ஒதுக்கீடு ஆகியவற்றைத் தாண்டி இதர நிதி ஆதாரங்களைப் பெருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வழக்கமான கடன் பத்திரங்கள் மூலமாக நிதி திரட்டுவதைத் தாண்டி ரெயில்வே துறையானது அரசுதனியார் பங்கேற்பு மூலமும் (PPP) PPGF திரட்டும். அதிலும் குறிப்பாக ரெயில் நிலையங்களை மறுஅபிவிருத்தி செய்தல், ரெயில் பெட்டிகள் உற்பத்தி ஆகியவற்றில் இத்தகைய அரசு தனியார் பங்கேற்பு எதிர்பார்க்கப்படுகிறது. நுழைவுக்கட்டணம் பயன்படுத்துதல் திரும்ப ஒப்படைத்தல் (TOT) போன்ற திட்டங்கள் மூலமும் முந்தைய காலகட்டத்தில் நடைமுறையில் இருந்த கட்டுதல் பயன்படுத்துதல் திரும்ப ஒப்படைத்தல் (BOT) திட்டத்தின் ஒப்படைப்புக்காலம் முடிந்த சாலை சொத்துக்கள் மீது சந்தையில் பெறப்படும் ஈவுப்பங்கு மூலமும் இந்திய தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் வருவாய் ஈட்டலாம்.

கப்பல் போக்குவரத்துத்துறையில் செலவினமானது சாகர்மாலா செயல்திட்டத்தின் ஒரு பாகமாக இருக்கும். விமானப் போக்குவரத்தைப் பொறுத்த வரையில் விமான நிலைய கொள்திறன், புதிய விமான நிலையங்களை உருவாக்குதல், பயன்பாட்டில் இல்லாத விமானநிலையங்கள் மற்றும் ஹெலிபேட்களில் போக்குவரத்தை அதிகரித்தல் ஆகிய அம்சங்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது.

உள்கட்டமைப்பு வசதிகளுக்கான இதர செலவினத்துறைகளில் 99 பொலிவுறு நகரங்களும் அடங்கும். மேலும் கிராமச்சாலைகள், வீடுகள், மின்சாரவசதி, துப்புரவு, நீர்ப்பாசனம், குடிநீர் விநியோகம் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம்

ஊரகக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதும் இதில் அடங்கும்.

## நிதியை செலவிடுவதில் திறன் போதாமை

நிதிஒதுக்கீடுகள் அதிகரித்திருப்பதில் உள்ள முக்கியமான சவால்களில் ஒன்றாக ஒதுக்கப்பட்ட நிதியைத் திறம்படச்செலவழிப்பது என்பது இருக்கிறது. உதாரணமாகச் சொல்லவேண்டும் என்றால் 2017-18ஆம் ஆண்டில் ரெயில்வே துறைக்கான நிதிஒதுக்கீடு மொத்த பட்ஜெட் ஆதரவில் (GBS) இருந்து ரூ.0.55 டிரில்லியன் என நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால் எதிர்பார்க்கப்படும் உண்மையான செலவு ஒதுக்கப்பட்ட நிதியை விட குறைவாக அதாவது ரூ.0.42 டிரில்லியன் என்ற அளவிலேயே உள்ளது. இதன் விளைவாக, அதாவது ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாகச் செலவு செய்யாததால், 2018-19ஆம் ஆண்டில் GBS ஒதுக்கீடு எந்தவித அதிகரிப்பும் இல்லாமல் முந்தைய ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டதைப் போன்றே 0.55 டிரில்லியன் என்ற அளவிலேயே நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை செலவு செய்யாமல் இருப்பது என்பது அரசாங்கத்தின் திறன் போதைமையை எடுத்துக்காட்டும் செயலாக உள்ளது. அதாவது மிகச்சிறப்பாக செயல்திட்ட ஆவணங்கள் தயாரிக்கப்படவில்லை என்பதையும், அனுமதி கேட்டு சமர்ப்பிக்கப்படும் மனுக்கள் விரைவாகப் பரிசீலிக்கப்படவில்லை என்பதையும் இந்தத்திறன் போதாமை வெளிப்படுத்துகிறது. சட்டரீதியான மற்றும் நீதித்துறை சார்ந்த திறன் போதாமையும் இதன் மூலம் வெளிப்படுகிறது. இலாபம் ஈட்டாமல் உள்ள குறிப்பிடத்தக்க உள்கட்டமைப்பு சொத்துக்கள், கடனுக்கு நிதி அளிக்கும் செயலில் கட்டுப்பாடுகளை ஏற்படுத்துகின்றன. தாமதமான அனுமதிகள் மற்றும் / அல்லது சட்டப்பிரச்சனைகள் பல செயல்திட்டங்களைப் பாதியிலேயே முடங்கச் செய்துள்ளன. அத்தகைய சொத்துகளைப் பாதுகாக்கவும் விடுவிக்கவும் தொடர்ச்சியான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பல செயல்திட்டங்களில் ஏற்பட்டுள்ள சட்டப்பிரச்சனைகளைத் தீர்த்துவைக்க சாலைப்போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சகம் எடுத்த முயற்சிகள் மிகவும் பாராட்டுக்கு உரியவை ஆகும்.

பட்ஜெட் என்பது ஆண்டுதோறும் அதிகபட்சமான கவனத்தைப் பெறும் நிகழ்வாக இருந்தபோதிலும் பட்ஜெட் செயல்திறனை பரிசீலனை செய்வதற்கு எந்த ஒரு வழி முறையும் இல்லை என்பது துரதிருஷ்டவசமானது ஆகும். அதாவது நிதி சார்ந்து மட்டும் பரிசீலிக்காமல் காரண காரிய பகுப்பாய்வுடன் உண்மையான விளைவுகளைப் பரிசீலிப்பது இல்லை. வருடாந்திர பொருளாதார அறிக்கையானது செயல்திறனை ஒரு தொகுப்பாக எடுத்துக்கொண்டு மதிப்பிடும் ஒரு சிறந்த ஆவணமாக உள்ளது. ஆனால் இது வேறுபட்ட துணைத் தலைப்புகளின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. பட்ஜெட்டானது அரசியல் சொல் அலங்காரங்களில் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது. அதே நடவடிக்கைகளைத் திரும்பத் திரும்பச் சொல்கிறது. உதாரணமாக ரெயில் நிலைய மேம்பாடு மற்றும் புதிய விமான நிலையங்கள் அபிவிருத்தி ஆகியன தொடர்ச்சியாகப் பல பட்ஜெட்டுகளில் கூறப்பட்டு வந்துள்ளன. முந்தைய பட்ஜெட்டுகளில் சேதுபாரதம் (தேசிய நெடுஞ்சாலைகளில் இருப்புப்பாதை குறுக்கிடுவதை நீக்குதல்), போக்குவரத்து ஆராய்ச்சி மற்றும் ஆராய்ச்சிக்கான சிறப்புப்பிரிவு (SUTRA), உத்திசார் தொழில்நுட்பம் மற்றும் ஒருங்கிணைந்த முன்னேற்றத்திற்கான சிறப்பு ரெயில்வே பிரிவு (SRESHTA) போன்ற திட்டங்கள் குறிப்பிடப்பட்டு இருந்தாலும் இந்த நடவடிக்கைகள் எந்த அளவிற்கு வளர்ச்சியை அடைந்துள்ளன என்று கண்டறிவதும் இவற்றின் உண்மையான அடிப்படை நோக்கம் என்னவாக இருக்கும் எனக் கண்டறிவதும் கடினமாகவே இருக்கும்.


## செலவினத்தை வழி நடத்தும் முறையாக திட்டமிடுதல் இருத்தல்

கடன் வழங்குவதற்காக பல்வேறு துறைகளில் கடந்த சில ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடுகள் பலவகையான செயல்பாடுகளையும் உள்ளடக்கிய நீண்டகால செயல்திட்டங்களின் கருத்தாக்கத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதாவது பிரதம மந்திரி கிராமச்சாலைகள் திட்டம் (PMGSY), சாகர்மாலா, அதிவிரைவு ரெயில் (HSR) மற்றும் பரத்மாலா திட்டங்களின் கீழ் கடன் வழங்குவதற்காக ஒதுக்கீடுகள் செய்யப்பட்டது போன்று தெரிகிறது. HSR திட்டம் செப்டம்பர் 2017லும் பரத்மாலா திட்டம் அக்டோபர் 2017லும் அறிவிக்கப்பட்டன (புதிய திட்டமாக தொடங்கப்பட்டாலும் பரத்மாலா என்பது பல வகைகளிலும் முன்னர் நடைமுறையில் இருந்த தேசிய நெடுஞ்சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் திருத்தப்பட்ட வடிவமாகவே இருக்கிறது). இத்தகைய திட்டக்கருத்தாக்கங்கள் நிலையான செயல்

தன்மையையும் மேற்செல்ல வேண்டிய திசையையும் தெளிவாக வழங்குகின்றன. வருடாந்திரத் தேவைக்கான கோரிக்கைகள் அவ்வப்போது மாறுபட்டு இருப்பதால் அவை திறம்பட வழிகாட்டுதலைத் தருவதில்லை.

செயல் திட்டமாக்குதல் இருந்தாலும் கூட சில துறைகளில் நாம் தவறு செய்து விடுகிறோம். உதாரணமாக பாரத் நெட் திட்டத்தைக் (முன்பு இது தேசிய ஒளியிழை நெட்வொர்க் என்ற பெயரில் இருந்தது) கூறலாம். இந்தத் திட்டம் ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்துக்கும் அகண்ட அலைவரிசை இணைப்பைத் தரும் நோக்கம் கொண்டதாகும். ஆனால் இதை நடைமுறைப்படுத்துவதில் பல பிரச்சினைகள் இருந்ததால் குறிப்பிடத்தக்க அளவில் காலதாமதம் ஏற்பட்டது. அதாவது திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு பொதுத்துறை நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆனால் அவர்களுக்கு இந்தத்திட்டமானது முன்னுரிமை திட்டமாக இல்லாததால் காலதாமதம் ஏற்படுகிறது.

ஊரகக்கட்டமைப்பு வசதிகளின் பின்னணியில் பார்த்தால் உள்கட்டமைப்பு வசதிக்கான வெற்றி பெற்ற திட்டங்களில் ஒன்றாக PMGSY திட்டம் இருந்தது. இந்தத் திட்டம் இரண்டாம் பத்தாண்டு காலகட்டத்தில் 2019ஆம் ஆண்டுக்குள் (2021ஆம் ஆண்டுக்குப் பதிலாக) அதாவது முன்கூட்டியே முழுமை பெற உள்ளது. எனவே மூன்றாம் காலகட்டத்திட்டம் அப்பொழுதே தொடங்கப்படலாம். பரவலாக, தொலைதூரங்களுக்கும் ஊரகச்சாலை பின்னலமைப்பு விரிவடைந்துள்ளது. மேம்படுத்தப்பட்ட பராமரிப்பை இது கவனத்தில் எடுத்துக்கொள்வதோடு இரு முனைய இணைப்புக்கும் உந்துதல் தருகிறது. இடரீதியான இணைப்பை ஏற்படுத்துவது மட்டுமல்லாமல் அதனுடன் போக்குவரத்து சேவைகளையும் இது உண்டாக்குகிறது. ஊரக மின்சாரம் என்ற பின்னணியில் இதுவரை கிராம நிலையிலான இணைப்புக்கு முக்கியத்துவம் தரப்பட்டு வந்தது. இப்போது தனிவீடு என்ற நிலையான இணைப்புக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. துப்புரவைப் பொறுத்த அளவில் கட்டப்பட்ட கழிப்பறைகள் மீது மட்டுமே கவனம் இருந்தது. கழிப்பறைகளை முழுமையாகத் திறம்படப் பயன்படுத்த நடத்தை மாற்றத்தால் மட்டுமே முடியும் என்பது இப்போது உணரப்பட்டுள்ளது. இத்தகைய நடத்தை மாற்றம் பயன்பாட்டை அதிகரிக்கும். இதற்கு "மார்க்கெட்டிங்" போன்ற முயற்சிகள் தேவைப்படுகின்றன.



## பல்துறைகளுக்கு இடையிலான உறவு சார்ந்த பிரச்சனைகள்

எவ்வாறாயினும், இவற்றோடு தொடர்புடைய சவால் எதுவெனில் பல்துறைகளுக்கு இடையிலான உறவு சார்ந்த விளைவுகளை ஆராய்ந்து பார்ப்பதாகும். உதாரணமாக விமான நிலையங்களைக்கட்டுவது மற்றும் அவற்றை இணைக்கும் செயலானது சாலை இணைப்பு மேம்பட வழிவகுக்கிறது. அதிக அளவிலான விமான நிலையங்களை ஏற்படுத்துவது என்பது ஒவ்வொரு விமான நிலையத்திற்கும் வந்துசெல்லும் பயணிகளின் எண்ணிக்கையைக் குறைக்கும்; விமானச் சேவைகளின் எண்ணிக்கையையும் குறைக்கும். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் அதிக விமானங்கள் தேவைதானா என்ற கேள்வியானது எழும். உதாரணமாக ஹுப்ளி மற்றும் பெலகாவி ஆகிய இரண்டு நகரங்களும் 100கி.மீட்டர் தூர இடைவெளிக்குள்தான் உள்ளன. இரண்டுக்கும் இடையில் சிறப்பான சாலை வசதி உள்ளது. ஆனால் இந்த இரண்டு நகரங்களும் நவீன விமான நிலையங்கள் வேண்டும் என விரும்புகின்றன ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று விமானங்கள் மட்டுமே வந்து செல்லும் விமான நிலையங்களை விரும்புகின்றன. இந்த இரண்டில் எந்த ஒரு விமான நிலையம் செல்வதாக இருந்தாலும் பயணிகளின் வசிப்பிடங்களில் இருந்து செல்வதற்கு சுமார் இரண்டு மணி நேரம் ஆகும். இதைப் பெங்களூருடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். பெங்களூரில் பல பகுதிகளில் இருந்து விமான நிலையத்தைச் சென்று அடைய இரண்டு மணி நேரங்களுக்கும் அதிகமாகும். சாலைகளை ஒருங்கிணைத்தல், தூரத்தை கணக்கிடுவதைவிட சென்று சேர்வதற்கு ஆகும் நேரத்தைக் கணக்கிடுதல் ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு விமான போக்குவரத்து இணைப்பை பார்க்கும் ஒட்டுமொத்தமான அணுகுமுறைதான் இனி மேற்கொள்ளப்பட வேண்டிய அணுகுமுறை ஆகும். ஆனால் மலைப்பகுதிகளில் அருகருகே விமான நிலையங்கள் அமைந்தாலும் அது ஏற்புடையதுவே ஆகும்.

பல்துறைகளுக்கு இடையிலான உறவு சார்ந்த பிரிவுக்கு மற்றொரு உதாரணமாக பல வாகனப்பயண இணைப்பைக் கூறலாம். அதாவது மெட்ரோ மற்றும் ரெயில்வேக்கு இடையே இணைப்பைச் சொல்லலாம். பெங்களூரு மற்றும் தில்லி நகரங்களை உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் இங்கே மெட்ரோ ரெயில்வே இணைப்பு பல விட்டுக்கொடுத்தல்களுக்குப் பிறகு உருவாக்கப்பட்டது. இது வாடிக்கையாளர் பயணத்தில் தரமற்ற சேவை வழங்குவதில் போய் முடிந்துள்ளது. இதன் விளைவாக தேவை குறைந்துவிட்டது. ‘‘பொலிவுறு‘‘ நகரங்கள் என்பதன் மூலம் வெளிப்படுத்தப்படும் அர்த்தம் முக்கியம் அல்ல. அடிப்படையான பொலிவுறு தன்மையே தேவைப்படுகிறது.

எரிபொருள் மற்றும் போக்குவரத்துக்கு இடையில் பல்துறை சார்ந்த பிரச்சனைகள் உள்ளன. இந்த அம்சம் குறித்து அரசு குறிப்பிடத்தக்க விழிப்புணர்வை வெளிப்படுத்தியுள்ளது. ரெயில்வேயில் மின்சாரப்பாதை அமைப்பு ஊக்குவிக்கப்படுகிறது. இதற்கு குறிப்பிடத்தக்க அளவு நிதிஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன. அதே போன்று 2030ஆம் ஆண்டுக்குள் சாலையில் ஓடும் அனைத்து வாகனங்களும் மின்சார வாகனங்களாக மாற்றப்படும் என்ற கொள்கையை அரசாங்கம் அறிவித்துள்ளது. சாலைப்போக்குவரத்து விஷயத்தில் அரசாங்கத்துடன் வாகனத்தொழிற்சாலையினர் இணைந்து போகவில்லை. எனவே அறிவிக்கப்பட்டுள்ள காலக்கெடுவையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஒன்றுக்கு மேற்பட்ட எரிபொருளால் மாற்றி மாற்றி வாகனங்களை இயக்குவதை விட்டுவிட்டு மின்சார வாகனங்கள் மீது கவனம் செலுத்துவதையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

## முடிவுரை:

திரு.ஜெட்லி தனது பட்ஜெட் உரையின் தொடக்கத்தில் உள்கட்டமைப்பு வசதிகளில் முதலீடுகள் செய்வதற்கு இந்தியாவுக்கு 50 டிரில்லியன் ரூபாய் தேவைப்படுகிறது எனக் குறிப்பிட்டார். ‘‘உள்நாட்டு ஒட்டுமொத்த உற்பத்தியின் வளர்ச்சியை அதிகப்படுத்தவும் சாலைகள், விமானநிலையங்கள், ரெயில்வே, துறைமுகங்கள் மற்றும் உள்நாட்டு நீர்வழிகள் ஆகியவை இணைந்த வலைப்பின்னலின் மூலம் தேசத்திற்கு இடையே இணைப்பை ஏற்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் இதன் மூலம் சிறப்பான தரமான சேவைகளை வழங்கவும் இந்த அளவிற்கு முதலீடு தேவைப்படுகிறது’’ என்று குறிப்பிட்டுள்ளார். இதை நிறைவேற்ற அரசு உறுதி கொண்டுள்ளது என்றும் இந்த முதலீடுகளை அரசு பெறும் என்றும் அவர் பிரகடனம் செய்துள்ளார். சவால் என்பது பெரும்பாலும் நிதி ஒதுக்கீட்டில் இல்லை. பொருத்தமாக திட்டமிடுவதும் குறிப்பிட்ட காலத்திற்குள் நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதிலும்தான் சவால் அடங்கி உள்ளது.

---

- **ஜி.ரகுராம்**, பெங்களூருவில் உள்ள இந்திய மேலாண்மைககழக (IIM) இயக்குநர்.

# கரும் பலகையிலிருந்து கணினிப்பலகை வரை - பட்ஜெட்டில் கல்வித்துறைக்கான செயல்திட்டங்கள்

- கிரண்பட்டி

ஒவ்வொரு ஆண்டும் பட்ஜெட் சமர்பிக்கபபடும் போது என்ன நிகழுமோ என்ற கவலையும் எதிர்பார்ப்பும் நமக்கு ஏற்படும். பட்ஜெட்டில் பெரிய கொள்கை அறிவிப்பு ஏதும் இருக்காது என்ற நிலையில் நாம் எதிர்பார்ப்பது சில சமிக்கைகளே. இது அடுத்த பொதுத் தேர்தலுக்கு முந்தைய கடைசி பட்ஜெட் என்பதால் சமீப காலமாக பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு சலுகைகள் கிடைக்காதா என்று நினைக்கும் நிலையில் மக்களுக்கு உற்சாகமளிக்கக்கூடிய அறிவிப்புகளை அரசு அளிக்கும். ஆகவே, இந்த ஆண்டு பட்ஜெட்டில் விவசாயத்திற்கும் கிராமப்புற பகுதிகளுக்கும் முக்கியத்துவம் அளித்திருப்பதில் வியப்பேதுமில்லை.

கடந்த கால நிகழ்வுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, நிதி அமைச்சரின் உரையில் கல்வியும் முக்கியமாக குறிப்பிடப்பட்டது வியப்பை அளித்தது. ஏனெனில் கடந்த ஆண்டு உரையில் கல்வி அவ்வளவாக குறிப்பிடப்படவில்லை. கடந்த பல ஆண்டுகளாகவே பல அரசுகள் கல்வியை தேர்தலுக்கான சலுகைத் திட்டமாக அணுகி அறிவிப்புகளை வெளியிடவில்லை. ஆகவே, கிராமப்புற பொருளாதார வலுப்படுத்துதல், உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் மற்றும் மூத்த குடிமக்களுக்கான ஆதரவு திட்டங்களோடு கல்வியைப் பற்றியும் குறிப்பிட்டது மகிழ்ச்சி அளித்தது. உண்மையில் முன்பு போல் அல்லாமல் கல்விக்கொள்கை செல்லும் பாதை தெளிவாக காட்டப்பட்டுள்ளது.

கல்வியின் தர மேம்பாடு மற்றும் அதற்கு தேவையான நடவடிக்கைகள் விளக்கப்பட்டுள்ளன. இது சார்ந்த இரண்டு முக்கிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. கல்வியை மேம்படுத்த தொழில்நுட்பம் பெரிதளவு பயன்படுத்தப்படும். அதுவே கரும்பலகையிலிருந்து கணினிப் பலகைக்கான மாற்றமாகும். இரண்டாவதாக கல்வி சார் கொள்கை ஒருங்கிணைக்கப்பட்டு ஆரம்பக் கல்வியும் உயர்நிலைக் கல்வியும் ஒன்றாக இணைத்துப் பார்க்கப்படும். இந்த இரண்டு கொள்கைகளுமே பட்ஜெட்டுக்கு முன்பே கருதப்பட்டு வந்தவைதான். கடந்த மத்திய கல்வி ஆலோசனை வாரியக் கூட்டத்தில் கணினிப்பலகை திட்டம் அறிவிக்கப்பட்டது. அப்போது ஒரு கொள்கை அறிவிப்பு வெளியிடப்பட்டு மாணவர் கல்வி திட்டங்கள் ஆசிரியர் கல்வி திட்டங்கள் ஆகியவைகள் இணைக்கப்பட்டன. இது அல்லாமல் தேசிய அளவிலான சாதனைசார் ஆய்வுகளின் அடிப்படையில் மாவட்ட ரீதியான அணுகுமுறை வடிவமைக்கப்பட்டு, கல்வியின் தரத்தை உயர்த்த ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சியை மேம்படுத்த முடிவு செய்யப்பட்டது. நவோதயா வித்யாலயா போன்று பழங்குடி மக்கள் வாழும் இடங்களில் மாணவர்கள் தங்கிப்படிக்கும் பள்ளிகளை அமைப்பது மற்றும் அடுத்த நான்கு ஆண்டுகளில் ஒரு இலட்சம் கோடி ரூபாய் முதலீடு செய்து கல்வித்துறையில் புதியன கண்டுபிடிப்பபதற்கும் ஆய்வுப் பணிகளுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்வது ஆகியவை மற்ற பிற முக்கிய அறிவிப்புகளாகும்.

இந்த ஒவ்வொரு அறிவிப்பும் உண்மையில் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும். இயன்ற இடங்களிலெல்லாம் கல்வித்துறையை மேம்படுத்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டும். கல்வியை முழுமையாக அணுகும் போது பல மட்டங்களில் பல பிரிவுகளிலிருந்து பலன்கள் கிடைக்கும். அரசு செயல்பாடும் பட்ஜெட்டும் சீரமைக்கப்படும். ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி சிறப்பாக வடிவமைக்கப்பட்டு முதலீடு செய்யப்பட்டால் வகுப்பறையில் கல்வியின் தரம் உயரும். மாவட்ட அளவில் மாணவர்களின் சாதனைகள் சோதிக்கப்பட்டு அதன்பிறகு அவர்களின் கல்வி கற்கும் திறன் கண்காணிக்கப்பட வேண்டும். தரத்தை உயர்த்த புதியனவற்றை கண்டுபிடிப்பதற்கும் ஆராய்ச்சிக்கும் ஊக்கமளிக்கவேண்டும். தரமான கல்வியை பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளுக்கும் எடுத்துச் செல்வது அவசியமென்று பல காலங்களாகவே கருதப்பட்டு வருகிறது. ஆனால், திட்ட அறிவிப்பு மற்றும் கொள்கைக்கு ஏற்ற அளவில் நிதி ஒதுக்கப்படவில்லை. இந்தத் திட்டங்களுக்கு எப்படி நிதி செலவிடப்படும் என்ற விளக்கம் படஜெட்டில் இல்லை.

தேசிய கல்வி இயக்கத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.3000 கோடி அதிகரித்து ரூ.28255 கோடியிலிருந்து

இவ்வாண்டு ரூ.31212 கோடியாக உயர்த்தப்பட்டாலும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட பல திட்டங்களுக்கு இது போதுமானதாக இல்லை. உதாரணமாக, வகுப்பறையில் கணினிசார்ந்த மின்னணு பலகை அமைக்க உள் கட்டமைப்பு வசதிகளில் பெரும் மாறுதல்களை செய்ய வேண்டியுள்ளது. ஏனெனில் தற்போதுள்ள எல்லா பள்ளிகளில் 62 சதவிகிதத்தில் மட்டும் மின்சார இணைப்பு உள்ளது. 24 சதவிகித பள்ளிகளில் மட்டும் செயல்படும் கணினிகள் உள்ளன. 9 சதவிகித பள்ளிகளில் மட்டும் செயல்படும் கணினியும் மின்சார இணைப்பும் உள்ளது. இது அல்லாமல், பல இலட்சம் குழந்தைகள் பள்ளிக்கு செல்லாமலேயே இருக்கிறார்கள். (மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சகத்தின்படி 60 இலட்சம் மற்றும் தேசிய மாதிரி ஆய்வின்படி 2 கோடி) ஆகவே, அவர்களையும் பள்ளிக்குக் கொண்டுவர உள்கட்டமைப்பு வசதிக்கு மிகப்பெரிய முதலீடு தேவை. மேலும், இதுவரை கிராமப்புற மின் இணைப்பு இயக்கத்தின்கீழ் பள்ளிகள் இணைக்கப்படவில்லை. அது நடக்கும்வரை, வகுப்பறையில் மின்னணு பலகை என்பது செயல்படாத திட்டமாகவே இருக்கும். பள்ளிக் கல்விக்கான பட்ஜெட்டில் இந்தத் திட்டத்திற்கு எந்த வகையான நிதி ஒதுக்கீடு உள்ளது என்பது தெரிவிக்கப்பட வேண்டும். மேலும், மின்னணுசார்



கணினிவழி கல்விக்குமான ஒதுக்கீடு சென்ற ஆண்டு, ரூ.518 கோடியிலிருந்து இந்த ஆண்டு ரூ.456 கோடியாக குறைக்கப்பட்டுள்ளது.

இதுபோலவே, ஆசிரியர் பயிற்சி பற்றி குறிப்பிடப்பட்டிருந்தாலும், மதன்மோகன் மாளவியா தேசிய ஆசிரியர் பயிற்சி திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு சென்ற ஆண்டின் ரூ.120 கோடி அளவிலேயே உள்ளது. ஆனால், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளை வலுப்படுத்த ரூ.70 கோடி அதிகம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மொழிசார் ஆசிரியர்களை நியமிப்பதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.40 கோடி அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளது (எண்.20, பக்கம் 188). இதனால், பொதுவாக ஆசிரியர்களின் பற்றாக்குறையை தீர்க்க முடியாத நிலையில் பழங்குடி மக்கள் வாழும் பகுதியில் தேவைப்படும் மொழி சார்ந்த ஆசிரியர் நியமனமும் பாதிக்கப்படும். ஆசிரியர் பயிற்சி அவசியம்தான். ஆனால், ஆசிரியர்கள் நியமனத்தை குறைத்து இதை செயல்படுத்த முடியாது. ஏற்கனவே மிக அதிக அளவிலான பற்றாக்குறையினால் கல்வியின் தரம் பாதிக்கப்பட்டுள்ளது. 11.5 சதவிகித ஆரம்ப பள்ளிகளும், மொத்த பள்ளிகளில் 7.5 சதவிகிதத்தில் ஒரு ஆசிரியர் பள்ளிகளே இருப்பதாலும் அரசு நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை சராசரியாக 4.3 மட்டுமே உள்ள நிலையில் இந்தப் பள்ளிகளில் ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியராவது என்ற இருக்க வேண்டும் என்ற நிலையில் இது மிகவும் குறைவாகும். ஆகவே நாம் கல்வியின் தரம் என்பதை எதை வைத்துக் கூறுகிறோம் என்று பார்க்கவேண்டும். போதிய ஆசிரியர்கள் இல்லாமல் கல்வியின் தரத்தை உயர்த்த முடியுமா? ஆசிரியர்கள் இல்லாத வகுப்பறையில் மின்னணு பலகை செயல்படுமா?

நவோதயா வித்யாலயா போல் பழங்குடி மக்கள் வாழும் பகுதியில் பள்ளிகள் அமைக்கப்படும் என்று நிதி அமைச்சர் கூறியிருந்தாலும் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டில் அதற்கான தொகை தெரிவிக்கப்படவில்லை. ஆனால், பழங்குடி மக்களுக்கான நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஏகலைவா பள்ளிகளின் ஒதுக்கீடு சற்று அதிகப்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே, கல்வியை முழுமையான முறையில் அணுகுகிறோம் என்று அரசு எப்படி கூறுகிறது என்று தெரியவில்லை. ஆகவே, மத்திய மனிதவள மேம்பாடுத் துறை அமைச்சகம், மாநில கல்வித்துறைகள் மற்றும் சமூக நீதி மற்றும் பழங்குடிவாழ் மக்கள் நலன் துறைகளுக்கு தனித்தனியாக ஒதுக்கப்பட்டிருக்கும் பொறுப்புகளும் குற்றச்சாட்டுக்கு ஆளாகி வந்துள்ளது இரட்டை வடிவிலான நிர்வாகம். பழங்குடி வாழ் மக்கள் துறைக்கு கல்விசார்ந்த நிபுணத்துவம் கிடையாது. கல்வித்துறைதான் இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். ஆகவே, இந்த இருதரப்பட்ட அமைப்பினால், பழங்குடி மக்கள் நலத் துறையால் கல்வியை சிறப்பாக செயல்படுத்த முடியவில்லை. ஆகவே, கல்வித் திட்டங்களையெல்லாம்

ஒருங்கிணைப்பதாக அமைச்சர் கூறியிருப்பது எல்லா பள்ளிகளுக்குமானதாக இருக்க வேண்டும். அப்போதுதான், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் கல்வியின் பயன் சென்றடையும். பழங்குடி மக்கள் நலத்துறை நடத்தும் ஆரம்பப் பள்ளிகள் இரண்டாம் தரமாக நடத்தப்படுவது, தொடரக்கூடாது. இது போன்ற நிலைமை ஏகலைவா பள்ளிகளுக்கும் இருக்கக்கூடாது. ஆகவே, எல்லா கல்வித் திட்டங்களையும் ஒருங்கிணைக்கும் போது, அவை மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சகம் மற்றும் மாநில கல்வித் துறைகளிடம் மட்டுமே இருக்க வேண்டும்.

துரதிஷ்டவசமாக கல்விக்கான முழுமையான அணுகுமுறை பட்ஜெட் அறிக்கையில் தெளிவாக்கப்படவில்லை. உதாரணமாக, பலதரப்பட்ட மாணவர் கல்வித் திட்டங்களுக்கும், ஆசிரியர் பயிற்சித் திட்டங்களுக்கும் ஒதுக்கீடு தனித்தனியாக உள்ளது. எல்லோருக்குமான கல்விக்கான ஒதுக்கீடு சென்ற ஆண்டு இருந்த ரூ.23500 கோடியிலிருந்து சற்று உயர்த்தப்பட்டு ரூ.26128 கோடியாக அறிவிக்கப்பட்டுள்ளது. தேசிய நடுநிலைப் பள்ளி இயக்கத்திற்கான ஒதுக்கீடு 3915 கோடியிலிருந்து ரூபாய் 4213 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மாநில அளவில், இந்த இரண்டு ஒதுக்கீடும் ஒருங்கிணைக்கப்பட்டு செயல்படுத்தப்படுமா? இந்த நிதி ஒதுக்கீடு பலவகையான திட்டங்களுக்கு எப்படி செயல்படுத்தப்படும்? இந்த இரண்டு கல்வித் திட்டங்களுக்குமான கட்டமைப்பு மாற்றங்கள் ஏற்படுமா? என்பனவையெல்லாம் விடை கிடைக்காத கேள்விகளாகவே உள்ளன. ஆகவே, ஒட்டுமொத்த அளவில் தரம் எப்படி உயர்த்தப்படும் என்று தெரியவில்லை. ஆகவே ஒருங்கிணைக்கப்பட்ட திட்டத்தை பார்த்தால்தான் விளக்கம் கிடைக்கும்.

அடுத்த நான்கு ஆண்டுகளில் ஆராய்ச்சிக்காகவும், புதியனவற்றை உருவாக்குவதற்காகவும் ரூ.1,00,000 கோடி வரை செலவிடப்படும் என்று அறிவிக்கப் பட்டிருப்பது வரவேற்கத்தக்கது என்றாலும் இது, மிகைப்படுத்தப்பட்டதாகவே தெரிகிறது. ஏனெனில், இந்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கீட்டில் குறிப்பு எதுவும் இல்லை. இந்த ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு சென்ற ஆண்டின் ரூ.319 கோடியைவிட ரூ.45 கோடி உயர்ந்து, வெறும் ரூ.350 கோடி மட்டுமே. ஆகவே, இந்தத் திட்டத்தை செயல்படுத்த அடுத்த மூன்று ஆண்டுகளில் நிதி ஒதுக்கீடு மிக அதிக அளவில் உயர்த்தப்பட வேண்டும்.

பட்ஜெட்டில் கல்வி தரம் உயர்த்துவது பற்றி குறிப்பிடப்பட்டுள்ள தேசிய சாதனை ஆய்வு சார்ந்த கல்வி கற்கும் முறையில் மாற்றங்கள் என்பதற்கு நிதி ஒதுக்கீடு ஆதாரம் இல்லை என்பதால் நிதிநிலை அறிக்கையில் இல்லாதது பற்றி நாம் சந்தேகிக்க தேவையில்லை. ஆனாலும், மாவட்ட அளவில், மாணவர்கள் கற்கும் திறமையை வளர்ப்பதற்கும் அதனை கண்காணிப்பதற்கும் நிலைமையை சீரமைப்பதற்கும் வேண்டிய உள் கட்டமைப்பு வசதிகளுக்கு நிச்சயம் நிதி ஒதுக்கீடு தேவை. ஆகவே, மாவட்ட மற்றும் மாவட்டத்திற்குள்ளான பகுதிகளில் இந்த திட்டத்தை மேற்கொள்ள நிர்வாகம் எப்படி முடுக்கிவிடப்படப் போகிறது என்பதை நாம் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். இதற்காகக் கூட, நிதி ஒதுக்கீடு தேவை. அது அடுத்த வருட பட்ஜெட்டில் ஒதுக்கப்படலாம்.

ஆகவே இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது கல்விக்கான கொள்கை அறிவிப்பே. இந்த சமிக்கை முக்கியமானது என்றாலும் நிதி ஒதுக்கீடு இல்லாத நிலையில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக எப்படி கருத முடியும். கொள்கைகள் விளக்கப்பட்டிருந்தாலும், நிதி ஒதுக்கப்படாத நிலையில் இதற்கான பணம் எங்கிருந்து வரும் என்று தெரியவில்லை. ஆகவே, இந்த திட்டங்களை செயல்படுத்த பட்ஜெட்டிற்கு அப்பாற்பட்ட முயற்சிகளையோ, தனியாரிடமிருந்து வளங்களை பெறுவதோ அரசின் கவனத்தில் உள்ளதா என்ற கேள்வி எழுகிறது. இது, பொதுக்கல்விக் கொள்கையில் பெருமாற்றம் ஏற்படுத்தக் கூடியதாகையால், பொதுமக்களிடையே இது பற்றிய விவாதங்கள் நடைபெற வேண்டும்.

கல்வித்துறையில் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த நினைப்பதும் மிகப்பெரிய மாற்றமாகும். ஆனால், அதற்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகள் எப்படி உருவாக்கப்படும், கல்வி கற்பிக்கும் முறையில் என்ன மாற்றங்கள் ஏற்படும் என்பது பற்றிய விளக்கங்களுக்குத் தெளிவு வேண்டும். கல்வித்துறையிலுள்ள பல பிரச்சினைகளை திசை திருப்ப தொழில்நுட்பம் என்ற கொள்கை பயன்படுத்தப்படுகிறதா? கல்வித்தரம் மிகவும் குறைந்து இருப்பதற்கு அரசின் செயல்பாட்டு முறைகளே காரணம் என்ற பிரச்சினையை முழுமையாக அணுகாமல், சில சிறிய தீர்வுகளை அளிப்பதே அரசின் நோக்கமா?

---

- **கிரண்பட்டி**, கொள்கை ஆராய்ச்சி மையத்தில் (CPR) முதுநிலை ஆய்வாளர்.

•

# இந்தியாவில் மூத்த குடிமக்கள் : மத்திய பட்ஜெட் 2018-19 அவர்களுக்கு எந்த அளவுக்கு பயனுள்ளதாக இருக்கும்?

- சுமதி குல்கர்னி

ஆண்டுதோறும் மத்திய நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வது என்பது நலிவடைந்த மக்களின் முன்னேற்றத்திற்கான மிக உயர்ந்த இலட்சியங்களையும், கடுமையான யதார்த்தங்களையும் சமாளிக்கவேண்டிய கடினமான பணி என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். பல்வேறு தரப்பு மக்களின் கோரிக்கைகள், அரசியல் கட்டாயங்கள், நிதி நெருக்கடிகள், முதலீடு மீதான நேரடி வரிகளின் தாக்கம், அதிகமாக செலவு செய்வதால் பணவீக்கம் ஏற்பட்டுவிடுமோ என்பது குறித்த அச்சம் ஆகியவைதான் இந்த விஷயத்தில் மிகப்பெரிய சவால்களாக விளங்குகின்றன. குழந்தைகள், இளைஞர்கள் ஆகியோர் தான் நாட்டின் எதிர்காலம் என்பதாலும், மனிதமூலதனத்தில் முதலீடு செய்யாமல், இந்தியாவின் இளவயது மக்கள் தொகையால் கிடைக்கக்கூடிய பயன்களை அறுவடை செய்யமுடியாது என்பதாலும் அவர்களுக்கான திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும். அதேநேரத்தில் எந்தத்திட்டமிடலாக இருந்தாலும், இந்தியமக்கள் தொகையில் கணிசமாக (9%) உள்ளவர்களும், நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நலிவடைந்த பிரிவினருமான 60 வயதைக் கடந்த மக்களின் நலன்களுக்காகவும் போதிய நிதிஒதுக்கீடு செய்யப்படவேண்டும். 2001ஆம் ஆண்டில் 7.06 கோடியாக இருந்த 60 வயதுக்குக் கூடுதலான மூத்தகுடிமக்களின் எண்ணிக்கை 2011ஆம் ஆண்டில் 10.40 கோடியாக அதிகரித்தது. இது 2026ஆம் ஆண்டில் 17.30 கோடியைத் தாண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தியாவின் மூத்த குடிமக்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கை யிலானவர்கள் பல்வேறு சமூக/பொருளாதார நிலைகளில் உள்ள (45 விழுக்காட்டினர் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ளவர்கள்/ பரம ஏழைகள் ஆவர், 23 விழுக்காட்டினருக்கு எந்த சொத்துகளும் இல்லை, 43 விழுக்காட்டினருக்கு எந்த வருமானமும் இல்லை, 50 விழுக்காட்டினர் நிதி ரீதியாக பிறரை சார்ந்திருக்கின்றனர், 27 விழுக்காட்டினர் பட்டியலின/ பழங்குடியினர் ஆவர், மூன்றில் ஒரு பங்கினரின் மாதாந்திர செலவு 1000 ரூபாய்க்கும் குறைவு ஆகும்) நலிவடைந்த பிரிவினர் ஆவர் (ஆதாரம்: ஐக்கியநாடுகள் மக்கள்தொகை நிதியம்). இத்தகைய சூழலில் 2018-19 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் எந்தெந்த அம்சங்கள் மூத்தகுடிமக்கள் நலனுடன் சம்பந்தப்பட்டவை, அவற்றால் மூத்த குடிமக்களுக்கு எந்த அளவுக்கு நன்மை கிடைக்கும் என்பது குறித்து ஆராய வேண்டியது மிகவும் முக்கியம் ஆகும்.

## வரிசெலுத்தும் மூத்த குடிமக்களுக்கான பயன்கள்

மூத்த குடிமக்களுக்கான வருமானவரி அடுக்குகள் அல்லது வருமானவரி விகிதங்களில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால், கீழ்க்கண்ட பிரிவுகளின் கீழ் அவர்கள் பயனடைவார்கள்:

- 2018-19ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், 80TTA பிரிவின் கீழ் வரிவிலக்கு பெறுவதற்கான வட்டி வருவாயின் அளவு பத்தாயிரம் ரூபாயிலிருந்து ரூ.50,000 ஆக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இந்தச்சலுகை வங்கிகள் மற்றும் அஞ்சல் நிலையங்களின் சேமிப்புக் கணக்குகளுக்கு மட்டுமின்றி நிரந்தரவைப்பீடுகள் மற்றும் தொடர்வைப்பீடுகள் ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் வட்டி வருவாய்க்கும் பொருந்தும். எனவே, பெரும்பாலான மூத்த குடிமக்களுக்கு அவர்களின் வட்டிவருவாய்க்கு வருவாய் மூலத்தில் இருந்து வரி பிடித்தம் செய்யப்படாது. அண்மையில் நடத்தப்பட்ட இந்திய மூத்த குடிமக்கள் சார்ந்த தகவல் தொகுப்பை உருவாக்குவதற்கான கணக்கெடுப்பில் கிராமப்புற மூத்த குடிமக்களில் 21 விழுக்காட்டினரும், நகர்ப்புற மூத்தகுடிமக்களில் 28 விழுக்காட்டினரும் வங்கி அல்லது அஞ்சல் நிலையங்களில் சேமிப்புக்கணக்குகளை வைத்திருப்பதாகவும், ஒரு சிலர் மட்டுமே பங்குகள், பத்திரங்கள் ஆகியவற்றை வைத்திருப்பதாகவும் தெரியவந்திருக்கிறது.
- வருமானவரிச்சட்டத்தின் 80D பிரிவின் கீழ் மருத்துவக்காப்பீட்டு பிரிமியம் மீதான கழிவு



தேவையில்லை. மற்றவர்களுக்கு வருமானவரி சேமிப்பு அதிகரிக்கும்.

மேற்கண்ட சலுகைகள் அதிக மதிப்பிலான மருத்துவக்காப்பீடு பெறுவதையும் வங்கிகளில் அதிக அளவில் நிரந்தரவைப்பீடு செய்வதையும் ஊக்குவிப்பதாக அமையும்.

இப்போதுள்ள ரூ. 30 ஆயிரத்திலிருந்து ரூ.50,000 ஆக அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

- கடுமையான நோயால் பாதிக்கப்பட்டுள்ள மூத்த குடிமக்களுக்கும் நிதிநிலை அறிக்கையில் சில நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. சில கடுமையான நோய்களுக்காக சிகிச்சை பெறும் மூத்த குடிமக்கள் வருமானவரிவிலக்கு பெறுவதற்கான மருத்துவச்செலவு வரம்பு இப்போதுள்ள ரூ.60 ஆயிரத்திலிருந்து ரூ. 1 இலட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. 80 வயதுக்கும் கூடுதலான மூத்த குடிமக்களுக்கு இந்த வரம்பு இப்போதுள்ள ரூ.80 ஆயிரத்திலிருந்து ரூ. 1 இலட்சமாக உயர்த்தப்படுகிறது.
- சம்பளம் மூலமான வருவாயில் ரூ.40,000 நிரந்தரக்கழிவு பெறும்முறை (ஊதியம் பெறுபவர்கள் பயணம் மற்றும் மருத்துவப் படிகளுக்கான செலவுகளை கணக்குகாட்டி கழிக்கும் முறை இப்போது நடைமுறையில் உள்ளது. அதற்கு பதிலாக இப்புதிய முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது) மீண்டும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. வருமானவரிக் கணக்கில் ஓய்வூதியமும் வருவாய் கணக்கில் வருவதால், இந்த புதியமுறையால் மூத்த குடிமக்களும் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேற்கண்ட சலுகைகளின் காரணமாக வருமான வரி விகிதங்களின் கடைசி அடுக்கில் உள்ள சில மூத்த குடிமக்கள் வருமானவரி செலுத்தத்

## பிரதம மந்திரியின் மூத்த குடிமக்களுக்கான ஓய்வூதிய திட்டத்தால் கிடைக்கும் பயன்கள்:

பிரதம மந்திரியின் மூத்த குடிமக்களுக்கான ஓய்வூதியத்திட்டம் கடந்த 2017ஆம் ஆண்டு மே மாதம் தொடங்கப்பட்டது. ஓராண்டுக்கு மட்டும் இத்திட்டத்தை செயல்படுத்த திட்டமிடப்பட்டது. ஆனால் இந்தத்திட்டத்தை 2020ஆம் ஆண்டு மே மாதம் வரை நீட்டித்து நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, இத்திட்டத்தின்கீழ் செய்யப்படும் முதலீட்டிற்கான உச்சவரம்பு இப்போதுள்ள ஏழரை இலட்சம் ரூபாயிலிருந்து 15 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம் (எல்ஐசி) மூலம் செயல்படுத்தப்படும் இந்தத்திட்டத்தில் 10 ஆண்டு பாலிசி எடுத்த 60 வயதுக்கு மேற்பட்டோருக்கு அவர்கள் தேர்வு செய்த காலவரம்புக்கு ஏற்ற வகையில் ஓய்வூதியம் வழங்கப்படும். 10 ஆண்டு பாலிசி காலத்தில் அவர்கள் உயிரிழந்தால் அவர்கள் செய்த முதலீடு அவர்களின் குடும்பத்தினருக்கு திரும்ப வழங்கப்படும். பாலிசி காலத்திற்குப்பிறகு உயிருடன் இருக்கும் மூத்த குடிமக்களுக்கு கடைசி தவணை ஓய்வூதியத்துடன் அவர்கள் செய்த முதலீட்டுத் தொகையும் திருப்பிவழங்கப்படும்.


இத்திட்டத்தின்படி, முதலீடு செய்யப்படும் தொகைக்கு முதலீட்டுக்காலத்தின் முடிவில் பெறப்படும் இலாபத்திற்கு வட்டி விதிக்கப்படும் என்ற போதிலும், இத்திட்டத்தில் 10 ஆண்டுகளுக்கு ஆண்டுக்கு 8 விழுக்காடு வீதம் வட்டி கிடைக்கும் என்பதால் இது கவர்ச்சிகரமான முதலீடு ஆகும்.

## ஒட்டுமொத்த தாக்கம் - குறைந்த அளவு பயன்கள்

நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள இந்தச்சலுகைகள் மூத்த குடிமக்களின் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு மிகவும் முக்கியம் என்ற போதிலும், இத்திட்டங்களின் ஒட்டுமொத்த தாக்கம் என்பது மூத்த குடிமக்களின் மிகக்குறைந்த அளவிலானவர்களுக்கே பயனளிக்கக்கூடியவை ஆகும். ஊரகப்பகுதிகளைச் சேர்ந்த மூத்த குடிமக்களின் பெரும்பான்மையினர் விவசாயத்தைத் தொழிலாகக்கொண்டவர்கள் என்பதால் அவர்களில் பலருக்கு வருமான வரிச் சலுகைகளால் எந்தப்பயனும் கிடையாது. இந்திய மூத்த குடிமக்கள் சார்ந்த தகவல் தொகுப்பை உருவாக்குவதற்கான கணக்கெடுப்பில் ஊரகப் பகுதிகளைச் சேர்ந்த மூத்த குடிமக்கள் 10 விழுக்காட்டினரும், நகர்ப்புறப் பகுதிகளைச் சேர்ந்த மூத்த குடிமக்களில் 16 விழுக்காட்டினரும் மட்டுமே தாங்கள் பணியாற்றிய நிறுவனங்களிடமிருந்து ஓய்வூதியம் பெறுகின்றனர் என்று தெரியவந்துள்ளது. ஊரக மூத்த குடிமக்களில் சுமார் 42 விழுக்காட்டினருக்கும், நகர்ப்புற மூத்த குடிமக்களில் 47 விழுக்காட்டினருக்கும் வருமானம் என்பதே முற்றிலுமாக இல்லை. ஊரக மூத்த குடிமக்களில் 12.5 விழுக்காட்டினரும், நகர்ப்புற மூத்த குடிமக்களில் 17 விழுக்காட்டினரும் மட்டுமே ஆண்டுக்கு ரூ.50,000 மற்றும் அதற்கும் கூடுதலாக வருமானம் ஈட்டுகின்றனர் என்றும் அந்தக் கணக்கெடுப்பில் கூறுகின்றனர். எனவே, நிதிநிலை அறிக்கையில் வழங்கப்பட்டுள்ள சலுகைகள் இத்தகைய வருமானப்பிரிவின் உயர்நிலையில் உள்ள சிலருக்கு மட்டுமே பயனளிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தேசிய சுகாதாரப் பாதுகாப்புத் திட்டத்தின் முக்கியப் பயன்கள்

பெரும்பான்மையான மூத்த குடிமக்களுக்கு உண்மையிலேயே பயனளிக்கும் திட்டம் என்னவென்றால், அரசுநிதியில் செயல்படுத்தப்படும் தேசிய சுகாதார பாதுகாப்புத்திட்டம்தான். அடிப்படையில் இது மூத்த குடிமக்களுக்கு மட்டுமான திட்டம் அல்ல. வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் ஒட்டுமொத்த மக்களுக்குமான திட்டம் ஆகும். எனினும் இத்திட்டம் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டால் அது மூத்த குடிமக்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும். பொருளாதாரச் சார்புநிலையைத்தாண்டி மூத்த குடிமக்களின் பலவீனம் என்னவென்றால், மோசமான உடல்நலபாதிப்பு மற்றும் ஓரளவோ அல்லது முழுமையாகவோ ஊனம் ஏற்படுவதால் உடல்ரீதியான இயக்கங்களுக்கு பிறரை சார்ந்திருப்பது ஆகியவை ஆகும். இந்திய மூத்த குடிமக்கள் சார்ந்த தகவல் தொகுப்பை உருவாக்குவதற்கான கணக்கெடுப்பின்படி, இந்திய மூத்த குடிமக்களின் 50 விழுக்காட்டிற்கும் மேற்பட்டோர் நல்ல



உடல்நிலையில் இல்லை என அவர்களே தெரிவித்திருக்கின்றனர். கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பகுதியினர் மோசமான உடல்நிலையில் உள்ளனர். சுமார் 13 விழுக்காட்டினர் நகர முடியாத சூழலில் உள்ளனர். சுமார் 8 விழுக்காட்டினர் அவர்களது அன்றாட வாழ்க்கையில் ஒரு செயலுக்காவது மற்றவர்களின் உதவி தேவைப்படுவதாக தெரிவித்துள்ளனர். சுமார் 60 விழுக்காட்டினர் ஓரளவோ அல்லது முழுமையாகவோ பார்வைக்குறைபாடு கொண்டவர்களாக உள்ளனர். நான்கில் ஒரு பங்கினர் ஓரளவோ, அல்லது முழுமையாகவோ நினைவாற்றல் குறைபாடு கொண்டவர்களாகவும், நடந்துசெல்ல முடியாதவர்களாகவும் உள்ளனர்.

ஏழைக்குடும்பங்களின் 5 இலட்சம் வரையிலான மருத்துவச்செலவுகளை அரசே ஏற்றுக்கொள்ளும் வகையிலும், 10 கோடி குடும்பங்களைச் சேர்ந்த 50 கோடி பேருக்கு பயனளிக்கும் வகையிலும் இந்தத் திட்டம் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருப்பது மனதிற்கு மிகவும் இதமளிக்கிறது. இந்தத்திட்டம் இப்போது நடைமுறையில் உள்ள தேசிய மருத்துவக் காப்பீட்டுத்திட்டத்திற்கு மாற்றாக செயல்படுத்தப்படும். தேசிய மருத்துவக்காப்பீட்டுத் திட்டத்தின்படி 3.6 கோடி ஏழைக்குடும்பங்களைச் சேர்ந்த 18 கோடி மக்களுக்கு மருத்துவக்காப்பீடு அளிப்பதற்காக ஆண்டுக்கு ரூ.1000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுவந்தது. ஆனால், தேசிய சுகாதார பாதுகாப்புத்திட்டத்திற்கு நிதிநிலை அறிக்கையில் முதல் கட்டமாக ரூ.2,000 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆண்டு இறுதியில் இது 12,000 கோடி ரூபாயாக அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. இதற்கான நிதி வருமானவரி மீது கூடுதலாக வசூலிக்கப்படும் 1 விழுக்காடு தீர்வை மூலம் (வருமான வரி மீது இதற்கு முன் கல்விக்கான கூடுதல் தீர்வையாக 3 விழுக்காடு வசூலிக்கப்பட்டு வந்தது. இப்போது அது கல்வி மற்றும் மருத்துவத்திற்கான 4 விழுக்காடு தீர்வையாக அதிகரிக்கப்பட்டிருக்கிறது) கிடைக்கும். இத்திட்டத்திற்கான செலவில் 40 விழுக்காட்டை அதாவது 8,000 கோடி ரூபாயை மாநில அரசுகள் வழங்கும். இதன் மூலம் இத்திட்டத்திற்கான மொத்த செலவு ரூ.20,000 கோடியாக அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## தடைகளும் வரம்புகளும்

தேசிய சுகாதார பாதுகாப்புத்திட்டம் மத்திய நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவுடன் அதுதொடர்பாக பல்வேறு தரப்பினரும் கருத்து தெரிவித்தனர். மிகச்சிறப்பாக செயல்படுத்தக்கூடிய திட்டம் என்பது தொடங்கி, உலகின் மிகப்பெரிய குழப்பம் என்பது வரை பல்வேறு வகையான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டம் குறித்த விமர்சனங்களின் முக்கிய அம்சங்கள் வருமாறு:

- போதிய நிதிஒதுக்கீடு இல்லை. தேசிய மருத்துவக்காப்பீட்டுத்திட்டத்திற்கான நிதிஒதுக்கீடு ரூ.470 கோடியிலிருந்து 2019ஆம் நிதியாண்டில் ரூ.2000 கோடியாக அதிகரிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் பார்க்கும்போது, தேசிய சுகாதார பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் அதிகம்பேர் பயன்பெறக்கூடும் என்பதால், அதற்கான செலவு ரூ.30,000 கோடி அளவுக்கு இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- மாநிலங்களின் நிதிஆதாரம் மிகவும் குறைவாக இருக்கும் நிலையில் இத்திட்டத்திற்குத் தேவைப்படும் நிதியில் 40 விழுக்காட்டை மாநில அரசுகளால் வழங்க முடியுமா? என்பது ஐயமாகவே உள்ளது.
- இந்தத்திட்டத்தின் செயல்பாட்டு முறை குறித்து தெளிவாக எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனால், இத்திட்டத்தை மாநிலஅரசுகள் காப்பீட்டு நிறுவனங்களின் மூலமாகவோ அல்லது தன்னாட்சி அமைப்புகளுக்கு நிதியுதவி வழங்குவதன் மூலமாகவோ இத்திட்டத்தை செயல்படுத்திக் கொள்ள மத்தியஅரசு அனுமதிக்கும் என்று கூறப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பதிவு செய்துகொண்ட மக்களுக்கு ஆண்டுக்கு ரூ.1082 பிரிமியத்தவணை செலுத்துவது இத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டுள்ள சலுகைகளை வழங்குவதற்கு போதுமானதா? என்பது குறித்து ஐயங்கள் எழுப்பப்படுகின்றன. இத்திட்டத்திற்கான பிரிமியத் தவணைத் தொகையை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது, இத்திட்டம் காப்பீட்டு நிறுவனங்களைக் கவராது என்று கூறப்படுகிறது.
- தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு புள்ளி விவரங்களை வைத்துப்பார்க்கும்போது, தேசிய சுகாதார காப்பீட்டுத்திட்டத்தின் மூலம் கிடைத்த அனுபவம் சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை. ஊரகப்பகுதி குடும்பங்களில் 1.2 விழுக்காட்டினரும், நகர்ப்புறப்பகுதிகளில் 6.2 விழுக்காடு குடும்பங்களும் மட்டுமே இத்திட்டத்தால் பயனடைந்துள்ளனர் என்றும், மருத்துவத்திற்காக

பொதுமக்கள் செலவழிக்கும் தொகையை இத்திட்டம் எந்த வகையிலும் குறைக்கவில்லை என்றும் தேசிய மாதிரி கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

- புதிய திட்டத்தின்படி மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட பிறகு ஏற்படும் செலவுகளை மட்டுமே அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆனால், மருத்துவச்செலவில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் கூடுதலான செலவு மருத்துவமனைக்கு வெளியில்தான் ஏற்படுகிறது.

இந்திய மூத்த குடிமக்கள் சார்ந்த தகவல் தொகுப்பை உருவாக்குவதற்கான கணக்கெடுப்பின்படி, அண்மையில் இத்தகைய கணக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு முந்தைய ஓராண்டில் 10 விழுக்காடு மூத்த குடிமக்கள் மட்டுமே மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரியவந்துள்ளது. மூத்த குடிமக்கள் நோய்வாய்ப்படும்போது, கடைசிகட்டமாகவே மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். மூத்த குடிமக்களை சரியான நேரத்தில் மருத்துவமனையில் சேர்ப்பதற்கான ஊக்குவிப்பாக இத்திட்டம் செயல்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய சுகாதார பாதுகாப்புத்திட்டம் மருத்துவமனை செலவுகளை மட்டுமே ஏற்றுக்கொள்கிறது. பெரும்பான்மையான மூத்த குடிமக்கள் ஆர்த்ரைட்டிஸ் போன்ற வயது சார்ந்த நோய்களாலும், நீரிழிவு, இரத்தக்கொதிப்பு போன்ற நோய்களாலும் முறையான காலத்தில் நோய் கண்டறிதல், மருத்துவம் அளித்தல் மற்றும் கண்காணிப்பு தேவைப்படும் பலவகையான காய்ச்சல்களாலும் அவதிபடுகிறார்கள். இத்தகைய மூத்த குடிமக்களுக்கு மருத்துவம் அளிப்பதற்காக தொலைதூரப்பகுதிகளில் மருத்துவக் கட்டமைப்புகளை வலுப்படுத்தவேண்டியது மிகவும் அவசியமாகும். தொலைதூரப்பகுதிகளில் மருத்துவ மனிதவளம் மிகவும் குறைவாக இருப்பது இத்திட்டத்தை செயல்படுத்துவதில் உள்ள மிகப்பெரிய குறை ஆகும். நலமையங்கள், புதிய மருத்துவக்கல்லூரிகள் மற்றும் காசநோயாளிகளுக்கான நுண்ணூட்டச்சத்து திட்டத்திற்காக இந்த நிதிநிலை அறிக்கையில் அதிக நிதி ஒதுக்கப்பட்டிருப்பது மிகவும் முக்கியமான நடவடிக்கையாகும். இது மூத்த குடிமக்களுக்கு மறைமுகமாக உதவிசெய்யும். ஒட்டுமொத்தமாக பார்த்தால் இத்திட்டம் வெற்றிகரமாக அமைவதற்கு சுகாதாரத் துறைக்கான அரசின் செலவுகளை அதிகரிப்பதும், மிகச் சிறப்பான பொதுத்துறை, தனியார்துறை கூட்டமைப்பை உருவாக்குவதும் மிகவும் முக்கியமாகும்.



இவ்வளவு தடைகள் இருந்தாலும்கூட, சமூகத் துறைகளை குறிப்பாக சுகாதாரத்துறையை முக்கிய இடத்திற்கு கொண்டுவருவதற்காக சுதந்திர இந்தியாவில் இதுவரை செய்யப்படாத அளவுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தியாவில் வாழும் மூத்த குடிமக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்கு இந்த அணுகுமுறை மிகப்பெரிய அளவில் உதவி செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதியத்தின் கீழ் செயல்படுத்தப்பட்ட இந்திய மூத்த குடிமக்கள் சார்ந்த தகவல்தொகுப்பை உருவாக்குவதற்கான கணக்கெடுப்பு கடந்த 2011ஆம் ஆண்டு இமாச்சலப்பிரதேசம், கேரளம், மராட்டியம், ஒடிசா, பஞ்சாப், தமிழ்நாடு ஆகிய 7 மாநிலங்களில் 8,329 குடும்பங்களில் உள்ள 9,852 பேரிடம் நடத்தப்பட்டது. இந்தக் கணக்கெடுப்புத்திட்டத்தை பெங்களூரில் உள்ள சமூக மற்றும் பொருளாதார மாற்றத்திற்கான நிறுவனத்தில் உள்ள மக்கள் தொகை ஆராய்ச்சி மையம், டெல்லியில் உள்ள பொருளாதார வளர்ச்சி நிறுவனம், மும்பையில் உள்ள டாடா சமூக அறிவியல் நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் மக்கள்தொகை நிதியம் நடத்தியது.

---

- **சுமதி குல்கர்னி,** மும்பையிலுள்ள மக்கள் தொகை அறிவியல் பன்னாட்டு நிறுவனத்தில் வளர்ச்சிக்கல்வித் துறையின் தலைவர்.

●

# பெண்களுக்கு அதிகாரம் அளித்தலும், 2018-19 நிதிநிலை அறிக்கையும்

- ஷாஹின் ரசி

இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கைக்கான உத்தேசங்களைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்த போது, வேளாண்மை, உடல்நலம், கல்வி, வேலைவாய்ப்பு, பெண்கள், குறு, சிறு, நடுத்தர தொழில்கள், உள்கட்டமைப்பு ஆகிய இந்தியப் பொருளாதாரத்துறைகளை வலுப்படுத்த வேண்டும் திட்டமே குறிப்பாக எங்களை வழிநடத்தியது. நாம் உருவாக்க விழையும் புதிய இந்தியா இப்போது தோன்றும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**- அருண் ஜெட்லி**

2018-19 நிதிநிலை அறிக்கை வரலாற்றுச் சிறப்புமிக்கது, புரட்சிகரமானது. நிதி அமைச்சர் அருண் ஜெட்லி ஜனரஞ்சகம் இல்லாத ஒரு பட்ஜெட்டை வழங்கியுள்ளார். புதிய வேலைகளுக்கு கணிசமான ஊக்கம், ரூ.250கோடி வரை விற்பனை உள்ள கம்பெனிகளுக்கான பெருநிறுவன வரிகள் 25% ஆக குறைப்பு, எல்லாத்துறைகளிலும் ஒப்பந்த அடிப்படையிலான பணியாளர்களை அனுமதிப்பதன் மூலம் தொழிலாளர் நெகிழ்வு நிலையை உருவாக்குதல், வேளாண்மை மேம்பாடு, பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், 100 மில்லியன் ஏழைக்குடும்பங்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கும் உலகின் மிகப்பெரிய திட்டம் ஆகியவை இந்த பட்ஜெட்டில் இடம் பெற்றுள்ளன.

பிரதமர் நரேந்திர மோதியின் கடைசி முழு பட்ஜெட்-ஏழைகள், விவசாயிகள், பெண்கள், விளிம்புநிலை மக்கள் ஆகியோருக்கான பாரத பட்ஜெட் ஆக இருக்கிறது. எளிதாகத் தொழில் செய்தல் என்பதிலிருந்து ஏழைகள், விளிம்புநிலை மக்களின் வாழ்க்கையை எளிதாக்குவது என்பதை நோக்கி அரசாங்கம் நகர்வினை செய்திருக்கிறது. எழுச்சிபெற்ற, வலிமையான இந்தியாவைப் பிரதிபலிக்கும் சீர்திருத்தத்திற்கு ஆதரவான முற்போக்கு பட்ஜெட்டாகும் இது.

சுதந்திரம் அடைந்தது முதல், அதிலும் குறிப்பாக 1990கள் முதற்கொண்டு, பெண்கள் அதிகாரம் பெறுவதற்காக இந்தியா பணியாற்றி வருகிறது. பெண்கல்வி, பெண் சுகாதாரம், வாழ்வாதாரம், வீட்டிலும், சமூகத்திலும் முடிவுகள் எடுப்பதில் பெண்களின் பங்கேற்பு, ஆகியவற்றிற்கான பல்வேறு திட்டங்களை அரசும், அரசு சாராத நிறுவனங்களும் செயல்படுத்திவருகின்றன. பெண் குழந்தைகள் உயிர் பிழைத்திருக்கவும், நிறைவான வாழ்க்கை வாழ்வதற்கான வாய்ப்புகளை அவர்களுக்கு வழங்கவும் சிறப்பான கவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

1993இல் கொண்டுவரப்பட்ட 73வது அரசியல் சட்டத்திருத்தம் இந்த திசையில் ஒரு முக்கியமான மைல்கல்லாகும். பஞ்சாயத்துப்பகுதிகளில் வசிக்கும் தாழ்த்தப்பட்டவர்கள், மலைவாழ்மக்கள் ஆகியோருக்கு அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ற அளவில் இடங்களை ஒதுக்கீடு செய்வதற்கு இந்தத்திருத்தம் வழிசெய்கிறது. பஞ்சாயத்ராஜ் அமைப்புகளில் மூன்றில் ஒரு பங்கு இடங்களை பெண்களுக்கு ஒதுக்கீடு செய்ததினால் ஏற்பட்டிருக்கும் தாக்கம் பயனுள்ளதாக இருந்து பெண்களை அரசியல் ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அதிகாரம் கொண்டவர்களாக ஆக்கியிருக்கிறது. தற்போது, இந்தியாவில் உள்ள ஏறத்தாழ 200,000 பஞ்சாயத் பிரதிநிதிகளில் ஏறத்தாழ 75,000 பெண்கள் இருக்கின்றனர். உலகிலேயே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான பெண் பிரதிநிதிகள் இந்தியாவில் இருக்கின்றனர்.

மக்களவையிலும், மாநில சட்டசபைகளிலும் உள்ள மொத்த இடங்களில் மூன்றில் ஒரு பகுதி இடங்களை பெண்களுக்கு ஒதுக்கீடு செய்வதற்கு பெண்கள் இடஒதுக்கீட்டு மசோதாவை கொண்டு வருவது பற்றி மோதியின் அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

பஞ்சாயத்துகள் அல்லது நாடாளுமன்றங்களில் இடஒதுக்கீடு முக்கியமானதுதான் என்றாலும், வீட்டிலும், சமூகத்திலும் முடிவுகள் எடுக்கும் வழிமுறைகளில் பெண்களுக்கு உரிய பங்கை உறுதிப்படுத்துவதுதான் உண்மையான சவால் ஆகும். பெண்கள் தங்களுடைய பங்களிப்பை சரியான முறையில் அளிப்பதற்கு ஏற்ற வகையில் உரிய திறன்களை வளர்த்தெடுப்பது சவால் மிகுந்ததாகும்.

ஆனால், சுதந்திரம் அடைந்து அரை நூற்றாண்டிற்கும் மேலாக பெண்களின் கால்கள் இறுக்கமாகக் கட்டிப்போடப்பட்டிருக்கின்றன.

பெண்கள் பிறக்கும் போதிருந்தே இது தொடங்கி விடுகிறது. பணக்கார மாநிலங்களான பஞ்சாப், ஹரியானா, தில்லி ஆகியவற்றில் நிகழும்

பெண்சிசுக்கொலைகளும், பாலின பேதங்களும் இதற்கு சான்றாகும். இதில் கிராமத்தவர்கள், வசதிமிக்க நகர்ப்புறமக்கள் என்ற பேதங்கள் எதுவும் இல்லை. அமங்கலமான இந்த தொடக்கத்தில் இருந்து ஆரம்பித்து பாலுறவுத்தாக்குதல்கள், வரதட்சணைத் துன்புறுத்தல்கள், சாவுகள், உடல்நலம், கல்வி, பணியிடங்கள் ஆகியவற்றில் பாகுபாடு காட்டும் போக்குகள், பெண்களை வீடுகளில் அடிமைப்படுத்திவைத்தல் - என்று இந்த படுமோசமான பட்டியல் நீண்டுகொண்டே போகும். இவற்றிலிருந்து பெண்கள் தப்பிபது மிகவும் கடினம்.

இந்தியப் பெண்களை அதிகாரம் மிக்கவர்களாக ஆக்குவதற்கு 2018-19 பட்ஜெட் பலவகையான திட்டங்களை வெளியிட்டிருக்கிறது:

- பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ் 50 மில்லியன் மக்களுக்கு இலவச எரிவாயு இணைப்பு தரப்பட்டுள்ளது. தற்போது 80 மில்லியன் ஏழை மக்களுக்கு இலவச எரிவாயு வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

  ஏழை குடும்பப்பெண்களின் பெயர்களில் எரிவாயு இணைப்பு வழங்குவது என்ற சிறப்புத்திட்டம் பற்றிய அறிவிப்பு, பெண்களுக்கு ஆதரவான பட்ஜெட்டின் கண்ணோட்டத்தைக் காட்டுகிறது.

  இந்த முன்முயற்சியின் மூலம் நெருக்கடியான இரண்டு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் முனைந்துள்ளது. முதலில், பெண்களின் உடல்நலம், குறிப்பாக கிராமப்புறங்களில் அன்றாடம் சமையல் செய்வதற்கு பாரம்பரியமாக சாணம், விறகு, விவசாயக்கழிவுகள் ஆகியவற்றைப் பயன்படுத்திவருவதால் ஏற்படும் பெண்களின் உடல் நலப்பிரச்சினைகள் குறிப்பிட்டு கவனிக்கப்படவேண்டும். இரண்டாவதாக, தற்போது வீட்டின் உட்புறம் நிலவிவரும் உயர் அளவு மாசுபாடு கவனிக்கப்பட வேண்டியதாகும்.

  இத்தகைய முயற்சிகள் பெண்களின் ஆரோக்கியத் தைப்பாதுகாத்து அவர்களை அதிகாரம் கொண்டவர்களாக மாற்றும். சமையல் செய்வதில் உள்ள வேலைப்பளு, நேரவிரயம் ஆகியவற்றைக் குறைப்பதுடன் கிராமப்புற இளைஞர்களுக்கு சமையல் எரிவாயு விநியோகத்தில் வேலை வாய்ப்பையும் இது வழங்கும்.

  அரசாங்கம், ஆலோசனைகள் வழங்கும் குழுக்கள் ஆகியவை நடத்தியுள்ள பல ஆய்வுகள், இந்தியாவில் ஆண்டுதோறும் நிகழும் ஐந்து இலட்சம் மரணங்களுக்கு வீடுகளுக்குள் நிலவும் புகைமாசுதான் காரணம் என்று தெரிவிக்கின்றன. நடுத்தர மேல்தட்டு மக்களின் ஆடம்பரம் எனக் கருதப்பட்ட எரிவாயு உருளைகள் இப்போது அனைவருக்கும் கிடைப்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. ஆடம்பரமாக கருதப்பட்ட இது மெள்ள மெள்ள நடுத்தர மக்களைச் சென்று அடைந்திருக்கும் போதிலும், ஏழைகளுக்கு அது இன்னமும் எட்டவில்லை என்று நிதி அமைச்சர் கூறினார். எனினும், வறுமைக்கோட்டிற்கு கீழ் இருக்கும் குடும்பங்களும் சமையல் எரிவாயு இணைப்பை தற்போது பெற்றுவருகின்றன.

  இதுவரை, பெருநிறுவனங்களின் சமூகப்பொறுப்பு நிதியின் (CSR) மூலமாக இது நிறைவேற்றப்படுகிறது. வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களுக்கு புதிய இணைப்புகளை வழங்கும் போது அதிகம் பேர் பயன்பெறாதிருக்கும் மாநிலங்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

- பிரதமரின் சௌபாக்கியா யோஜனா திட்டம் மூலம் அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம் வழங்குவதற்கு அரசாங்கம் ரூ.160 மில்லியனை செலவிடுகிறது.
- பெண்களின் பாதுகாப்பிற்காக 19.75 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. எ.கா: நிர்பயா நிதி.
- பெண்கள் சுயஉதவிக் குழுக்களுக்கு 2019 மார்ச் வரையிலும் ரூ. 75,000 கோடி வழங்கப்பட்டுள்ளது.
- இயற்கை விவசாயம் செய்வதற்கு பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் தரப்படும்.
- பெண்கள் தங்களிடம் உள்ள தங்கநகைகளை வங்கிகளில் முதலீடாக வைத்து 2.25% முதல் 2.5% வரை வட்டிவருவாய் பெறலாம்.
- பணிபுரியும் பெண்களின் சேமநலநிதி (EPF) பங்களிப்பு மூன்று ஆண்டுகளுக்கு 12% லிருந்து 8% ஆக குறைக்கப்படும். வேலை தரும் நிறுவனம் தரவேண்டிய 12% பங்களிப்பில் மாற்றம் ஏதுமில்லை.
- பெண் பணியாளர்களுக்கு முழு சம்பளத்துடன் கூடிய ஆறு மாத கால பேறு கால விடுப்பு வழங்கப்படும். வாடகைத்தாய் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ளும் பெண்களுக்கும் பேறு கால விடுப்பு தரவேண்டும் என்ற உச்சநீதிமன்றத்தின் 2015ஆம் ஆண்டு ஆணையை அமலாக்கவேண்டும் என்று அனைத்து அமைச்சகங்களுக்கும், துறைகளுக்கும் பணியாளர் பயிற்சித்துறை அறிவுறுத்தியுள்ளது. இத்தகைய விடுமுறையை குழந்தை பிறப்பதற்கு முன்பும், பிறந்த பின்பும் எடுத்துக்கொள்ளலாம்.
- தேசிய பெண்கள் ஆணையத்திற்கு ரூ. 24 கோடி வழங்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

- 20 மில்லியன் புதிய கழிப்பிடங்கள் தூய்மை பாரதம் திட்டத்தின் ஆதரவின் கீழ் கட்டப்படும். பெண்களின் கௌரவத்தைக் காப்பதற்கும், பெண் குழந்தைகளின் கல்விக்கும், குடும்பத்தினரின் ஒட்டுமொத்த நலனுக்கும் இவை உதவிடும்.



செல்வ மகள் சேமிப்புத் திட்டம் (SSY)

- 'பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண்குழந்தைகளைப் படிக்கவைப்போம்' திட்டத்திற்கு ரூ. 280 கோடி வழங்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டம் பெண்களுக்கான சேவைகளின் திறனை மேம்படுத்துவதற்கான இந்திய அரசாங்கத்தின் இன்னொரு சமூகப்பிரசாரம் ஆகும். இந்தத்திட்டம் ரூ.100 கோடி ஆரம்ப நிதியுடன் தொடங்கப்பட்டுள்ளது. படிப்பறிவின்மை, சமத்துவம் இன்மை, பாலியல் தொல்லை, பெண் சிசுக்கொலைபோன்ற பிரச்சினைகள் சரியான முறையில் எதிர்கொள்ளப்படாத வரையிலும் பெண்களின் மேம்பாடு நிகழ்வதற்கான வாய்ப்பு இல்லை.
- 'பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண்குழந்தைகளைப் படிக்கவைப்போம்' (Beti Bachao Beti Padhao) எனும் திட்டம் மத்திய பெண்கள், குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், மனிதவள மேம்பட்டு அமைச்சகம், சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகம் ஆகியவற்றின் கூட்டு முன் முயற்சியாகும். இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்கள், யூனியன்பிரதேசங்களிலும் இந்தத்திட்டம் செயல்படுகிறது. இந்த முன்னோடித் திட்டமானது 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்தத்திட்டம் மூன்று அடிப்படை நோக்கங்களைக் கொண்டது:
- பெண் சிசுக்கொலையைத்தடுப்பது
- ஒவ்வொரு பெண் குழந்தையும் போற்றிப் பாதுகாக்கப்படுவதற்கு உரிய புதிய திட்டங்களை உருவாக்கி அவற்றை நிறைவேற்றுவதற்கென ஒத்திசைந்து உழைப்பது.
- ஒவ்வொரு குழந்தையும் தரமான கல்வியைப் பெறுவதை உறுதிசெய்வது.
- சுகன்ய சம்ரிதி யோஜனா (SUKANYA SAMRIDHI YOJANA) என்பது பெண் குழந்தைகளுக்கான சிறு முதலீட்டுத்திட்டமாகும். இந்திய அரசின் 'பெண் குழந்தைகளைப் பாதுகாப்போம், பெண் குழந்தைகளைப் படிக்கவைப்போம்' (Beti Bachao, Beti Padhao) என்ற பிரசாரத்தின் ஒரு பகுதியாகும் இது. பெண் குழந்தைகளின் கல்வி, திருமண செலவுகளுக்கு பணம் கிடைத்திடும் வகையில் பிரத்யேகமாக உருவாக்கப்பட்டது. இந்தத்திட்டம் 9.1% ஆண்டு கூட்டு வட்டி வழங்குகிறது. இந்த சேமிப்பு மூலம் கிடைக்கும் வருவாய்க்கு வரி கிடையாது. பெண் குழந்தைகளின் சட்டப்பூர்வமான பாதுகாவலரோ, இயற்கையான பாதுகாவலரோ பெண் குழந்தையின் பெயரில் இந்தக்கணக்கை ஆரம்பிக்கலாம். பெண் குழந்தைக்கு 21 வயது நிரம்பியதும் இந்தக்கணக்கை முடித்துக் கொள்ளலாம். திருமணம் ஆகிவிட்டால் முன் கூட்டியே 18 வயதிற்குள் கணக்கை முடித்துக் கொள்ளலாம்.

மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுவதற்கு, முதலில் பெண்கள் விழித்தாகவேண்டும். பெண் இயங்க ஆரம்பித்தால் குடும்பம் இயங்கும். கிராமங்களும், தேசமும் முன்னேறும். பிரதமர் நரேந்திர மோதி அவர்களின் முன் முயற்சியால் உருவாகியுள்ள பெண்கள் மேம்பாட்டுத்திட்டங்கள் கல்வியின் மூலம் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் ஒரு முக்கியமான படியாகும்.

பட்ஜெட் 2018 இந்தியாவின் முன்னேற்றத்திற்கான நிலைமாற்ற வழித்தடமாகும். சமூகத்தை ஆதாரப்புள்ளியாகக் கொண்டு சுதந்திர இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் பட்ஜெட் இதுவாகும். இந்தியப்பொருளாதாரம் சந்தித்துவரும் முக்கியமான சில சவால்களை எதிர்கொள்வது பற்றி பட்ஜெட்டில் நிதி அமைச்சர் கவனத்தை செலுத்தியுள்ளார் - தரமான கல்வி, சுகாதாரச் சேவை, பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், விவசாய மேம்பாடு, வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவை அவை.

பட்ஜெட் 2018-19 விரைவான பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. பெண்களுக்கு அதிகாரம் அளிப்பது, பாலின சமத்துவத்தை கொணர்தல் ஆகியவற்றைத்தவிர வளர்ச்சிக்கு உதவக்கூடிய வேறு கருவி எதுவும் இல்லை.

---

- **டாக்டர்.ஷாஹின் ரசி,** பொருளியலாளர், கல்வியாளர், ஆராய்ச்சியாளர். அடித்தட்டு மக்களுக்கன சமூகப்பணியில் ஈடுபட்டிருப்பவர்.

# மத்திய பட்ஜெட் 2018&19: எளிதாகத் தொழில் செய்யும் முன்முயற்சிகளின் பொருளறிதல்

- டானிஷ் கி. ஹாசிம் வர்ஷா குமாரி

## 1. அறிமுகம்

எளிதாகத்தொழில் செய்தல் என்பது மத்திய அரசாங்கத்திடம் இதுவரை இல்லாத முக்கியத்துவத்தை கடந்த சில ஆண்டுகளாகப் பெற்றுள்ளது. இது பற்றிய பட்ஜெட் எதிர்பார்ப்பும் அதிகமாக இருந்தது. முதலீடு, வேலைவாய்ப்பு அளிக்கும் திறன் தொடர்பான தளைகளை உடைப்பது அரசாங்கத்தின் இந்தத்திட்டத்தின் நோக்கமாகும். தொழில் தொடங்குவது முதற்கொண்டு வெளியேறுவது வரையான பல்வேறு படிநிலைகளில் உள்ள தடைகளை நீக்குவதற்கு தொடர்சியான பல சீர்திருத்த நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்துள்ளது. கம்பெனி இணைப்பை ஒரே நாளில் செய்துகொள்ளமுடியும் என்பது சாதகமான முன்னேற்றம் ஆகும். ஜிஎஸ்டி அறிமுகம், திவால் மற்றும் கடன் தீர்க்க இயலாத நிலை பற்றிய சட்டத்தொகுப்பு அறிமுகத்தால் உருவாகியுள்ள விரைவான திவால் தீர்வுகள் (IBC) இதற்குக் காரணம்.

தொழிலாளர், நிலம், மேற்பார்வை, சர்ச்சைகளுக்குத்தீர்வு போன்ற தொழில் சீர்திருத்தங்களை கடுமையாக அறிமுகம் செய்வதற்கு மத்தியஅரசு அழுத்தம் கொடுத்து, போட்டியிடும் கூட்டாட்சி மனநிலையை மாநிலங்களுக்கிடையில் உருவாக்கிவருகிறது. இத்தகைய முன்முயற்சிகள் நல்ல விளைவுக்ளை உருவாக்கி வருகின்றன. அண்மையில் வெளியிடப்பட்ட தொழில் செய்தல் தொடர்பான உலகவங்கியின் அறிக்கை 2018இல் இந்தியா 30 உலக நாடுகளை முந்திக்கொண்டு கடந்த ஆண்டு இருந்த 130 என்ற நிலையில் (மொத்தம் 190 நாடுகளில்) இருந்து சிறப்பானதொரு தாவலைச் செய்துள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் தொழில் செய்வதில் உச்சத்தில் உள்ள 50 நாடுகளில் ஒன்றாக இந்தியாவைக் கொணர்வதற்கு பிரதமர் விருப்பம் கொண்டுள்ளார். அண்மையில் அறிவிக்கப்பட்ட பட்ஜெட் இந்த திசையில் அழுத்தமான தடங்களைப் பதித்து நகர்வதற்கு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. எளிதாகத்தொழில் செய்தலுக்கு தீர்மானமான கொள்கை வழிகாட்டுதலை மத்திய பட்ஜெட் வழங்கும் என்ற நம்பிக்கையும், எதிர்பார்ப்புகளும் உருவாகியுள்ளன.

எதிர்பார்த்ததைப்போலவே, எளிதாகத்தொழில் செய்வதற்கான முன்முயற்சிகள் பலவற்றை பட்ஜெட் அறிவித்துள்ளது. குறு, சிறு, நடுத்தரத்தொழில் நிறுவனங்கள், வேலைவாய்ப்பை அதிகரித்தல், முதலீட்டை ஊக்குவித்தல் ஆகியவற்றின் மீது பட்ஜெட் சிறப்பு கவனத்தை செலுத்தியுள்ளது. பெருநிறுவனங்களுக்கான முக்கியமான சில முன்முயற்சிகள் கீழே விவரிக்கப்பட்டுள்ளன.

## 2. பெருநிறுவனங்கள் எளிதாகத்தொழில் செய்வதற்கான முக்கியமான முன் முயற்சிகள்

- MSMEக்களுக்கு அதிகமான கடன் உதவி: குறு, சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கு கடன் உதவி, மூலதனம், வட்டி மானியம் ஆகியவற்றை வழங்குவதற்காக 3இலட்சம் கோடியை அரசாங்கம் ஒதுக்கியுள்ளது. அதிகரிக்கப்பட்ட இந்த ஒதுக்கீடு எளிதில் கடன் பெறுவதற்கான நடவடிக்கைகளின் ஆதரவைப்பெற்றுள்ளது. MSMEக்கள் வங்கிக்கடன்களை விரைவாகப் பெறுவதற்கு ஏதுவாக MSMEக்களின் நிதி பற்றிய தகவல் தரவுகளை உருவாக்குவது, அவை இதுவரை பெற்றுள்ள கடன்கள் பற்றிய விவரங்கள், மூலதனத்தை எளிதில் பெறுவதற்கு Fintech வசதியைப் பயன்படுத்துவது என புதுமையான பல வழிமுறைகளை பட்ஜெட் முன்மொழிந்துள்ளது.
- MSMEக்களுக்கு கடனை அங்கீகரிப்பதை எளிமைப்படுத்துதல்: MSME கடன்களை எளிதில் அங்கீகரிப்பதற்கு அரசாங்கம் Trade Receivable Discounting System (TReDS) எனும் முறையை சீரமைக்க முடிவு செய்துள்ளது. மூலதனத்தை சிறப்பாக நிர்வகிக்க இது உதவும். மேலும், MSMEக்களின் பணப்புழக்கம் பற்றிய தகவல்கள் வங்கிகளுக்கு கிடைக்கும் என்பதால் வங்கிகள் தாமாகவே முன்வந்து கடன் வழங்கும். பொய்யான இரசீதுகளைக்காட்டி கடன் பெற முடியாது.
- வரி நிவாரணங்கள்: ரூ.250 கோடி வரை விற்றுமுதல் கொண்டுள்ள நிறுவனங்களுக்கு (முன்பு ரூ.50கோடி) பெருநிறுவன வரி 25% ஆக குறைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நாட்டில் உள்ள 99% நிறுவனங்கள் பயனடையும். இதன்

விளைவாக MSMEக்களிடம் மூலதனத்திற்கு தேவையான நிதி மிகையாகவே இருக்கும். இதனால் வேலைவாய்ப்பு பெருகும். வளர்ச்சி அதிகரிக்கும்.

- வருமானம் ஈட்டாத சொத்துக்களுக்கு நிவாரணம்: MSMEக்களின் வருமானம் ஈட்டாத சொத்துக்கள், கஷ்டத்தில் உள்ள சொத்துக்கள் ஆகியவற்றிற்கு நிவாரணம் அளிக்கும் வகையில் சில அறிவிப்புகள் பட்ஜெட்டில் செய்யப்பட்டுள்ளன., MSMEக்கள் பெற்றுள்ள கடன்களை 180 நாள்கள் வரை தாமதப்படுத்தி செலுத்தலாம் என்று இந்திய ரிசர்வ் வங்கி அறிவிக்கை வெளியிட்டுள்ளது. இது முன்பிருந்த கால அளவைக்கட்டிலும் இருமடங்காகும். MSMEக்களின் பணப்புழக்கப் பிரச்சினைகளிலும், கடனைத் திரும்பச்செலுத்தும் கடமையிலும் வங்கிகள் தங்களை இப்படி ஈடுபடுத்திக்கொள்ளும்.

- தனித்துவ அடையாளம்: இப்போது சொத்துக்களை பதிவு செய்தல், கம்பெனியைப் பதிவு செய்தல், மின் இணைப்பு பெறுதல் போன்ற பல்வேறுவிதமான பதிவுகளை MSMEக்கள் செய்துகொள்ளவேண்டியுள்ளது. இதனால் கால விரயமும், பணவிரயமும் ஏற்படுகிறது. குடிமக்களுக்குத் தரப்பட்டிருக்கும் ஆதார் எண்ணைப்போலவே, நிறுவனங்களுக்கும் தனிப்பட்ட அடையாளத்தை வழங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. பல்வேறு இடங்களில் பலவிதமான பதிவுகளை செய்துகொள்வதைத் தவிர்த்து, அனைத்து அனுமதிகளுக்கும், இசைவாணைகளுக்குமாக ஒரே ஒரு முறை பதிவுசெய்துகொள்ளும் வாய்ப்பை இது அளிக்கிறது.

- தேசிய தளவாட நுழைவாயில்: வணிகத்துறையின் கீழ் தளவாட கணிப்பியல் துறை ஒரு இணைய நுழைவாயிலை உருவாக்கி வருகிறது. தளவாட சேவைகள் வழங்குவோர், சுங்கத்துறை, பொருள்களை வாங்குவோர், இரயில்வே, வெளிநாட்டு வணிக இயக்குநரகம், துறைமுகங்கள், விமானநிலையங்கள், கடற்கரையை ஒட்டியுள்ள உள்ள நீர்வழிப்பகுதி, கடலோரக் கப்பல்வாணிபம் போன்றவற்றிற்கு இடையே உள்ள இடைவெளியை இந்த நுழைவாயில் இட்டுநிரப்பும். இந்த நுழைவாயில் வெற்றிகரமாக அறிமுகப்படுத்தப்படும்போது தொடர்புடைய அனைவரையும் ஒரே தளதில் கொண்டுவந்து நிறுத்தும். இதனால் தளவாட செலவுகள் 10% வரை குறையும்.



- எல்லாத்துறைகளிலும் குறிப்பிட்ட கால அளவிற்கான வேலைவாய்ப்பு: ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு மட்டுமே பணியாளர்களைப் பணிக்கு அமர்த்தும் முறை இதுவரை ஜவுளித்துறையில் மட்டுமே இருந்துவந்தது. இந்த முறை இனி எல்லாத்துறைகளுக்கும் விரிவாக்கப்படும். இது கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்க உதவுவதுடன் எளிதாகத் தொழில் செய்வதற்கு மிகப்பெரிய உந்துதலையும் அளித்திடும். நிறுவனங்கள் குறுகிய கால அளவிற்கு பணியாளர்களை அமர்த்திக்கொள்ள முடியும். தொழிலாளர் தேவை வேறுபடும் தோல், காலணிகள், உபரி பாகங்கள் போன்ற தொழில்பிரிவுகளுக்கு இது பலன் தரும். தொழிலாளர் பிரச்சினைகளில் மத்தியஸ்தம் செய்துகொண்டு இருப்பதைத் தவிர்க்கும் வகையில் குறிப்பிட்ட கால அளவிற்கு பணியாளர்களை நிறுவனங்கள் நேரடியாக தெரிவு செய்துகொள்ளமுடியும்.

- ஒரே மாதிரியான முத்திரைக்கட்டணம்: முத்திரைக்கட்டணத்தில் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு மாநில அரசுகளுடன் மத்திய அரசு ஒருங்கிணைந்து செயல்படும். முத்திரைக்கட்டணம் மாநிலங்களில் 4% முதல் 7% வரை வேறுபடுகிறது. இந்தியா முழுமைக்கும் ஒரே மாதிரியான முத்திரைக்கட்டணம் என்பது நிலம் சொத்து ஆகியவற்றின் விலைகளில் திரிபை உண்டாக்காது.

- தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான நிர்வாகம்: சர்ச்சைகளுக்கு தீர்வுகளை விரைவுபடுத்துவதற்கு ஏதுவாக அனைத்து மாவட்ட, துணைநிலை நீதிமன்றங்கள் அனைத்தையும் கணினிமயமாக்குவது அவசியம். தேசிய நீதித்துறைத் தரவுகள் கட்டமைப்பு இதற்கு உதவும். இந்தியா முழுவதிலும் உள்ள நீதிமன்றங்களில் நடைபெறும் நீதித்துறை நடைமுறைகள், அதன் முடிவுகள்

அடங்கிய இணைய மேடையை இது அளிக்கும். மேலும், மின்னணுமுறை மூலம் வழக்குப்பதிவு, மின்னணு முறையில் கட்டணம் செலுத்துதல் ஆகியவற்றை வலுப்படுத்தி மின்நீதிமன்றங்களை உருவாக்குவது பற்றிய கவனம் தேவை. ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்தும் நுட்பம் இதன் மூலம் வலுப்படும். இந்த வகையில் உலக அளவில் இந்தியா 164 என்ற மிகக்குறைவான தகுதி நிலையில் இருந்துவருகிறது.

- மின்னணு சுங்கக்கட்டணம்: சுங்கச்சாவடிகளில் நேரடியாகப் பணத்தைச் செலுத்தும் முறையை மாற்றி மின்னணு முறையில் கட்டணம் செலுத்துவதையும், ஒரு வசதியைப் பயன்படுத்திகொண்ட பிறகு பணம் செலுத்துவது ஆகிய முறைகளையும் கொண்டுவர முன்னோடி நிலையில் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இதன் மூலம் பொருள் போக்குவரத்தில் குறிப்பிடத்தக்க நிவாரணமும், பணம், நேர சேமிப்பும் கிட்டும்

- பாதுகாப்பு உற்பத்திக்கு உந்துதல்: பாதுகாப்புத்துறையில் தனியார் முதலீடு அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, அரசாங்கம் இரண்டு பாதுகாப்புத் தளவாடங்கள் உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைக்க முயற்சி மேற்கொண்டுவருகிறது. பாதுகாப்புப் பொருள்களை இறக்குமதி செய்வதைத்தவிர்க்கும் வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கிறது. வேலைவாய்ப்பும் அதிகரிக்கிறது. பாதுகாப்பு உற்பத்திக்கொள்கை 2018 உள்நாட்டு உற்பத்தியை MSME உள்ளிட்ட பொதுத்துறை, தனியார்துறைகள் மூலம் மேம்படுத்துவதற்கு முன்வருகிறது. நேரடி முதலீட்டுக்கொள்கைக்கும் பட்ஜெட் உயிர்ப்பு அளித்துள்ளது.

- தொழிலகக் கருத்தறிதல்: தொழில் சீர்திருத்தங்களின் தாக்கங்களைத் தீவிரப்படுத்துவதற்கு அரசாங்கம் தொழிலகக் கருத்தறிதல் ஏற்பாட்டை செய்துள்ளது. இதற்கு முன்பு மாநில அரசுகள், யூனியன் பிரதேசங்களிடம் இருந்து பெறப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாறு பெறப்படும் கருத்துக்கள் களநிலவரத்தைப் பிரதிபலிப்பதில்லை.

3. பெருந்தொழில் நிறுவனங்கள் எளிதாகத் தொழில் செய்வது தொடர்பான இத்தகைய நடவடிக்கைகளில் இருந்து ஒரு அடி முன் வைத்து நிதிஅமைச்சர் பெருந்தொழில் நிறுவனங்களுக்கு அப்பாற்பட்ட நிறுவனங்களும் எளிதாகத்தொழில் செய்ய வழிகளை அறிவித்தார். உதாரணமாக, வேளாண்மைப்பிரிவில் அரசாங்கம் பல முன்முயற்சிகளை அறிவித்துள்ளது. கிராம வேளாண் சந்தைகள் (GrAMs) அதிகரிப்பு, அவற்றை e-NAM உடன் இணைத்து உழவர்கள் நுகர்வோர் / மொத்த வியாபாரிகள் இடையே நேரடி பரிமாற்றத்தை உருவாக்குதல், நீண்டகால நீர்ப்பாசன நிதியம் (LITF) உருவாக்குதல், மீன்வளம் மற்றும் மீன் வளர்ப்பு நிதியம் (FAIDF), கால்நடை வளர்ப்பு கட்டமைப்பு நிதியம் (AHIDF), ஆகியவை இவற்றுள் சிலவாகும். இதைப் போலவே, உள்கட்டமைப்புத்துறையிலும் தேசிய நெடுஞ்சாலைகள், இரயில் பாதைகள் கட்டமைப்பை அதிகரிப்பதற்கும், அகன்ற அலைக்கற்றை சேவைகளை கிராமப்புற மக்கள் பயன் பெறும் வகையில் அதிகரிக்கவும் அரசாங்கம் கருதியுள்ளது.

## 4. முடிவுரை

மத்திய பட்ஜெட் 2018-19, எளிதாகத் தொழில் செய்வதற்கான சீர்திருத்தங்களின் உத்வேகத்தை முன்னோக்கி செலுத்தியிருக்கிறது. இவை பெருந்தொழில் நிறுவனங்களுக்கு நேரத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்தும். பெருந்தொழில் நிறுவனங்கள் மட்டுமின்றி குறு, சிறு,நடுத்தரத்தொழில் நிறுவனங்கள், விவசாயம், ஊரகப்பொருளாதாரம், உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம் ஆகிய துறைகளிலும் எளிதாகத் தொழில் செய்வதற்கான முன்முயற்சிகளை நிதி அமைச்சர் அறிவித்துள்ளார்.

இத்தகைய முயற்சிகள் இந்தியாவில் முதலீட்டுச் சூழலை மேம்படுத்தும். தொழிலாளர், நிலம் கையகப்படுத்துதல், விரிவாக்கம், ஆகியவற்றில் மூன்றாம் நபரின் ஒப்புதல் பெறும் வசதி இருப்பது வணிகச் சூழல் மேம்பட உதவும். ஷ்ரம் ஸ்விதா நுழைவாயிலுடன் ஒன்றிணைவது உள்பட ஆளுகை முன்முயற்சிகளை மேற்கொள்வதற்கு அரசுகள் ஊக்குவிக்கப்படவேண்டும். நில ஆவணங்களை மின் ஆவணங்களாக்கி இணையத்தில் கிடைக்கச்செய்வது போன்ற நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. எளிதில் தொழில் செய்வதில் பின்தங்கிய நிலையில் உள்ள மாநிலங்களுக்கு கொள்கை வழிகாட்டுதல்களை வழங்கவேண்டும். எனினும், சிறப்பானவை இனிமேல்தான் நடக்க இருக்கின்றன.

---

- **டானிஷ் A. ஹாசிம்,** புதுதில்லியில உள்ள இநதியத் தொழில் கூட்டமைப்பில் எளிதாகத் தொழில செய்தல் பிரிவின் தலைவர்

- **வர்ஷாகுமாரி,** புதுதில்லியில உள்ள இநதியத் தொழில் கூட்டமைப்பில் எளிதாகத் தொழில செய்தல் பிரிவின் ஆலோசகர்

# கறுப்புப்பணத்தை ஒழிப்பதில் வெளிப்படையான வரிவிதிப்பு நிர்வாகம்

- ரமேஷ் கேஆர் யாதவ், ரோஹித் தியோ ஜா


கறுப்புப்பணத்திற்கும் ஊழலுக்கும் எதிரான போர் என்பது அரசின் முக்கியமான முன்னுரிமைகளில் ஒன்றாகத் தொடர்ந்து இருந்த வருகின்றது. நீதிபதி எம்.பி.ஷா தலைமையின் கீழ் கறுப்புப்பணத்துக்காக சிறப்புப் புலனாய்வுக்குழு (SIT) உருவாக்கப்பட்டது முதல் இந்தப்பயணம் தடங்கலின்றித் தொடர்கிறது.


கறுப்புப்பணம் என்பது அரசின் கஜானாப்பெட்டியில் ஓட்டையை உருவாக்குவது மட்டுமின்றி சமூகத்தின் அறநெறியையும் குலைத்துவிடுவதாகும். கறுப்புப்பணம் ஊழலுக்கு வழிவகுக்கிறது. ஊழல் என்பது சமூகத்துக்கு புற்றுநோய் போன்றது ஆகும். கறுப்புப்பணமும் ஊழலும் ஒன்று சேர்ந்து குடிமக்களுக்கு ஜனநாயகத்தின் மீது இருக்கக்கூடிய நம்பிக்கையை அரித்துவிடுகின்றன மேலும் படைப்பாக்க எழுச்சியையும், புத்தாக்கத்துக்கான எழுச்சியையும் குறைத்துவிடுகின்றன. அதனால் தேசத்தின் திறமை முழுவதும் வீணாகிவிடுகின்றது.

பட்ஜெட் 2018ஆனது கறுப்புப்பணத்தை ஒழித்தல் என்ற செயல்திட்டத்தோடு முன்னெடுக்கப்பட்டுள்ளது. அடுத்த உச்சநிலையாக வெளிப்படையான மற்றும் பொறுப்பான வரிவிதிப்பு நிர்வாகமும் முன்னெடுக்கப்படுகிறது. வெளிப்படையான, நியாயமான அமைப்பை உருவாக்குவது தொடர்பாக அரசு எடுத்த முயற்சிகள் விரும்பக்கூடிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. அதாவது உலகவங்கி ''வர்த்தகம் செய்வதில் எளிமை'' என்ற குறியீட்டை தரவரிசைப்படி வெளியிட்டுள்ளது. இந்தப் பட்டியலில் இந்தியா 30 இடங்களைத் தாண்டி முன்னணியில் உள்ள 100 நாடுகளின் அணிவரிசையில் சேர்ந்துள்ளது. 10 துணைக்குறியீட்டு எண்களிலும சாதகமான மாற்றம் ஏற்பட்டிருந்தாலும் ஒரு விஷயத்தைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ''வரிகளைச்செலுத்துதல்'' பிரிவில் இந்தியா 172ஆவது இடத்தில் இருந்து 119ஆவது இடத்துக்கு முன்னேறி உள்ளதை மிக அதிகபட்சமான மாற்றமாகக் குறிப்பிடவேண்டும்.

## பசுமைக் குருத்துகள்

பசுமைக்குருத்துகளாக இருந்த பணமதிப்பு நீக்கம், ஜி.எஸ்.டி அமலாக்கம் முதலான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முடிவுகள் இப்போது வளரத் தொடங்கியுள்ளன. 2017-18 பொருளாதார ஆய்வறிக்கையானது ஜி.எஸ்.டிக்கு முன்பான வரிவிதிப்பு அமைப்பு முறையை விட ஜி.எஸ்.டி வரிவிதிப்பு முறையின் கீழ் மறைமுகவரி செலுத்துவோரின் எண்ணிக்கை 50 சதவிகிதம் அதிகரித்து உள்ளது என சுட்டிக்காட்டியுள்ளது. அதே போன்று நேரடி வரிசெலுத்தும் பிரிவில் நவம்பர் 2016 முதல் தனிநபர் வருமானவரி செலுத்துவோர் எண்ணிக்கையில் கூடுதலாக சுமார் 1.8 மில்லியன் நபர்கள் சேர்ந்துள்ளனர் (வளர்ச்சிப்போக்குக்கும் அதிகமாக).




(ஆதாரம் : பொருளாதார ஆய்வறிக்கை 2017-18)

முந்தைய ஆண்டில் புதியதாக வரி செலுத்துவோரின் எண்ணிக்கை 66.26 இலட்சமாக இருந்தது. பணமதிப்பு நீக்க நடவடிக்கையானது இதையும் தாண்டி 85.51 இலட்சம் புதியதாக வரிசெலுத்துவோர்களை சேர்க்க உதவியுள்ளது. வரிசெலுத்துவோர்களின் எண்ணிக்கை இன்று 8.27 கோடியாக அதிகரித்துள்ளது. வருமானவரித்துறை எடுத்த நடவடிக்கைகள் தனிநபர் வருமான வரிப்பிரிவில் சராசரி வரிவருவாய் மிதப்பு நிலையை குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் உள்ள ஏழு ஆண்டுகளில் தனிநபர் வருமான வரிப்பிரிவில் வருவாய்மிதப்பு நிலையானது சராசரியாக 1.1 என இருந்தது. ஆனால் 2016-17 மற்றும் 2017-18 (திருத்தப்பட்ட மதிப்பீடு) ஆகிய நிதி ஆண்டுகளில் தனிநபர் வருமானப்பிரிவுக்கான வருவாய் மிதப்புநிலை முறையே 1.95 மற்றும் 2.11 என அதிகரித்துள்ளது.

மத்திய நேரடிவரிகள் வாரியமானது பணமதிப்பு நீக்க அறிவிப்புக்குப் பிறகு கறுப்புப்பண ஒழிப்புச் செயல்பாட்டை (Operation Clean Money) மேற்கொண்டது. இதன் கீழ் தகவல் தரவு மூலங்களை ஒருங்கிணைத்தல், உறவுத்தொகுப்புகள், விரிவான புலனாய்வுக்கு நிதிபரிமாற்றங்களைத் தடம்காணுதல் ஆகியவற்றை உள்ளடக்கிய நவீன தரவுப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு அதிக பிரச்சினைக்குரிய நபர்கள் அடையாளம் காணப்பட்டார்கள். இந்தச் செயல்பாடு ''நேர்மையாக வரி செலுத்துபவர்கள்'', ''குடிமக்கள் பங்களிப்பு'' மற்றும் ''சாதகமான விளைவுகள் குறித்த தொடர்ச்சியான பின்னூட்டம்'' ஆகிய மூன்று தூண்கள் மீது வலுவாக நின்று செயல்படுத்தப்பட்டது. இந்தச் செயல்பாடு மற்ற செயல்பாடுகளுக்கு இடையிலும் வருமானவரித் துறையினர் வரிசெலுத்துவோரின் சுமை அதிகமாகாமல் அவர்களோடு இணைந்து பண டெபாசிட்டுகளை மின்னணு முறையில் சரி பார்க்க உதவியது.

பத்திரிகைத் தகவல் அலுவலகம் வெளியிட்ட ஒரு செய்திக்குறிப்பில் பணமதிப்பு நீக்கத்தரவுகளின் அடிப்படையில் அமலாக்க சோதனை நடவடிக்கைகள் பெருமளவில் அதிகரித்தன என்று குறிப்பிட்டுள்ளது. அதாவது தேடுதல் எண்ணிக்கை 158 சதவிகிதம் அதிகரித்துள்ளது (447 குழுக்களில் இருந்து 1152 குழுக்கள்), கைப்பற்றுதல் 106 சதவிகிதம் அதிகரித்துள்ளது (ரூ.712 கோடியில் இருந்து ரூ.1,469 கோடி). கணக்கெடுப்பு 183 சதவிகிதம் அதிகரித்துள்ளது (4,422இல் இருந்து 12,520), கணக்கெடுப்பு செயல்பாட்டின் போது கண்டறியப்பட்ட முறையாகத் தெரிவிக்கப்படாத வருமானம் 44 சதவிகிதம் அதிகரித்துள்ளது (ரூ.9,654 கோடியில் இருந்து ரூ.13,920 கோடி).

## பினாமி பரிமாற்றங்கள் (தடை) திருத்தச்சட்டம், 2016 என்பதன் கீழ் நடவடிக்கைகள்

1988இல் இயற்றப்பட்ட பினாமி சொத்துக்கள் பரிமாற்றத் தடை சட்டமானது பினாமி பரிமாற்றங்கள் (தடை) திருத்தச்சட்டம், 2016ஆல் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது. திருத்தப்பட்ட சட்டத்தின்படி தற்காலிகமாக சொத்தை முடக்கலாம், பினாமி சொத்துக்களைப் பறிமுதலும் செய்யலாம் மற்றும் 7 ஆண்டுகள் வரை கடும் சிறைத்தண்டனையும் வழங்கப்படலாம். பினாமி பரிமாற்றம் என்றால் என்ன என்பதற்கான வரையறையை இந்தத் திருத்தப்பட்ட சட்டம் விரிவாக்கியுள்ளது. வருமானவரித்துறை நாடு முழுவதும் 24 முழு நேர பினாமி தடுப்புப்பிரிவுகளை (BPUs) நிர்மாணித்துள்ளது. வருமானவரித்துறை எடுத்த தீவிரமான முயற்சிகளால் 900க்கும் மேற்பட்ட நேர்வுகளில் ரூ.3,500 கோடி மதிப்புள்ள சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன.

## அயல்நாட்டு வங்கிக்கணக்குகளில் கறுப்புப் பண அச்சுறுத்தலை எதிர்கொள்ளுதல்

கறுப்புப்பணம் (தெரிவிக்கப்படாத அயல்நாட்டு வருவாய் மற்றும் சொத்துகள்) மற்றும் வரிவிதித்தல் சட்டம் 2015 என்பதில் மூன்று முதல் 10 ஆண்டுகள் வரை கடும் சிறை தண்டனை உட்பட பல கடுமையான நடவடிக்கைகள் உள்ளடங்கியுள்ளன. வெளிநாட்டில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கறுப்புப்பணத்தை திறம்பட வெளியில் கொண்டுவரும் வகையில் இந்தச் சட்டமானது இயற்றப்பட்டு ள்ளது. பண ஏய்ப்புத் தடுப்புச்சட்டம், 2002இன் கீழ் வரிஏய்ப்பு என்பது ஒரு குற்றமாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. பனாமா மற்றும் பாரடைஸ் இரகசிய ஆவணங்கள் வெளியே கசிந்தது தொடர்பான புலனாய்வை ஒருங்கிணைக்கவும் விரிவுபடுத்தவும் நேரடி வரிவிதிப்பு மத்திய வாரியத்தலைவரின் தலைமையின் கீழ் பல ஏஜென்சி அடங்கிய குழுவை (MAG) அரசு ஏற்படுத்தியுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்தியர்கள் கடல் கடந்து உள்ள வங்கிகளில் சட்டத்துக்குப் புறம்பாக பதுக்கி வைத்துள்ள கோடிக்கணக்கான பணமானது பல தடைகள் இருந்த போதிலும் வரிவிதிப்பின் கீழ் வெளியில் கொண்டுவரப்பட்டுள்ளன. வரி சம்பந்தமான தகவல் பரிமாற்றத்துக்காக 148 நாடுகளுக்கு இடையில் இந்தியா வரி ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது. அதுமட்டுமின்றி 39 நாடுகளுடன் குற்றம் தொடர்பான விஷயங்களுக்காக பரஸ்பர சட்டஉதவி

ஒப்பந்தங்களையும் இந்தியா மேற்கொண்டுள்ளது. இத்தகைய ஒப்பந்தங்களின் வலைப்பின்னல் தொடர்ந்து விரிவாக்கப்பட்டு வருகிறது; அதே சமயம் வலிமையாக்கப்பட்டும் வருகிறது.

### ஷெல் நிறுவனங்களுக்கு (நிழல் கம்பெனிகள்) எதிரான நடவடிக்கை

தனிநபர் அல்லாத சட்டபூர்வமான அமைப்புகள் குறிப்பாக நிறுவனங்கள் போன்றவற்றை தவறாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல் என்பது வருமான வரித்துறையின் முக்கிய கவனமாக உள்ளது. எளிமைப்படுத்தப்பட்ட நிறுவன வழிமுறைகளைத் தவறாகப் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் காளான் போன்று ஷெல் நிறுவனங்கள் முளைத்தன. ஒரே முகவரியில் நூற்றுக்கணக்கான நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்டன. இத்தகைய நிறுவனங்களில் மூலதனம் குறைவாக இருக்கும், ஒரே ஊழியர் இருப்பார் அல்லது ஊழியரே இருக்கமாட்டார், இயக்குநர் என்று ஒரு தனிநபர்தான் அங்கு இருப்பார். ஒரு தனிநபரே இயக்குநராக பல நிறுவனங்களுக்கும் இருப்பார். கடந்த சில ஆண்டுகளில் இத்தகைய ஷெல் நிறுவனங்கள் போலி ரசீதுகள், போலியான மூலதனப்பங்குப் பத்திரம், போலியான கடன் போன்றவற்றை ஒரு அமைப்பாகச் செயல்பட்டு தருகின்றனர். இதனால் அவர்கள் போலியான எந்த ஒரு நிதிசார் பரிமாற்றத்திலும் எளிதில் ஈடுபட்டுவிடுகின்றனர். இவர்களின் எண்ணிக்கையானது அதிக அளவில் இருப்பதால் அனைத்து ஷெல் நிறுவனங்களையும் கண்டுபிடிப்பது என்பது கடினமான செயலாகும். அப்படியே கண்டுபிடித்தாலும் தற்போதுள்ள சாட்சி நியமப்படி அவர்களது சட்டத்திற்குப் புறம்பான இழிவான நடவடிக்கைகளை நிரூபிப்பது என்பது கடினமான காரியமே ஆகும்.

பல்வேறு அமலாக்க ஏஜென்சிகளின் உதவியுடன் அத்தகைய நிறுவனங்களுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகளைக் கண்காணிக்க பிரதமமந்திரி அலுவலகம் ஒரு சிறப்புப் பணிக்குழுவை (STF) உருவாக்கியுள்ளது. வருவாய்த்துறை செயலாளரும் கார்ப்பரேட் உறவுகள் துறை செயலாளரும் கூட்டாக இந்தக் குழுவுக்குத் தலைமை வகிக்கிறார்கள். பல்வேறுபட்ட சட்ட அமலாக்க ஏஜென்சிகள் மூலமாக இத்தகைய நிறுவனங்களுக்கு எதிராக ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் செயல்படும் ஷெல் நிறுவனங்களின் செயல்பாடுகளை முறியடிக்க தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. கறுப்புப்பணம் (தெரிவிக்கப்படாத அயல்நாட்டு வருவாய் மற்றும் சொத்துகள்) மற்றும் வரிவிதித்தல் சட்டம் 2015, பினாமி பரிமாற்றங்கள் (தடை) சட்டம், 1988இல் திருத்தம், வருமான வரிச்சட்டம் 1961இல் திருத்தம், திறன்மிக்க நிர்வாகத்தை முன்வைத்தல் (POEM) என்ற கருத்தாக்கத்தின் அறிமுகம், ‘‘இலாபம் தரும் உரிமை‘‘ என்ற வரையறையை உள்ளடக்கும் வகையில் கம்பெனிகள் சட்டத்தில் திருத்தம் ஆகியன இந்த நடவடிக்கைகளில் உள்ளடங்கும். ஒழுங்கு நடவடிக்கை வெளிப்படையாக இருப்பதற்காக ஒரு கம்பெனியின் தொடக்க சந்தாதாரர்களின் EKYC ‘‘ஸ்பைஸ்‘‘ (கம்பெனியை மின்னணு மூலமாக சேர்த்துக்கொள்வதற்கான எளிமையாக்கப்பட்ட படிவம்) மூலமாக பெறப்படுகிறது. ஸ்பைஸ் பிளாட்ஃபாரம் கம்பெனிகளுக்கு பான் எண் ஒதுக்கித் தருவதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. கம்பெனியின் அனைத்து இயக்குநர்களுக்கும் ஆதார் எண் இணைப்பு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ஷெல் நிறுவனங்களுக்கு எதிரான மிகப்பெரிய நடவடிக்கையை கார்ப்பரேட் உறவுகள் அமைச்சகம் (MCA) எடுத்துள்ளது. 2017ஆம் ஆண்டில் 2.24 இலட்சம் கம்பெனிகளின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டுள்ளன. அதுமட்டும் இல்லாமல் கூடுதலாக 1.20 இலட்சம் கம்பெனிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள கம்பெனிகள் தங்களின் வங்கிக்கணக்கை பயன்படுத்தவும் அசையும் சொத்துக்களை மாற்றித்தரவும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கையால் இத்தகைய கம்பெனிகளில் உள்ள சுமார் 3.09 இலட்சம் இயக்குநர்கள் பாதிக்கப் பட்டுள்ளனர். ஷெல் நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொண்ட விசாரணையில் சுமார் 3,000 தனிநபர்கள், இவர்கள் ஒவ்வொருவரும் 20க்கும் அதிகமான கம்பெனிகளில் இயக்குநர்களாக உள்ளனர் என்பதைத் தெரிவிக்கின்றன. அத்தகைய நபர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு மோசடியில் ஈடுபடும் தொழில் நிபுணர்களும் குற்றம் செய்தவர்களாகப் பதிவு செய்யப்படுகிறார்கள்.

புதியதாக தேசிய நிதிசார் அறிக்கை ஆணையம் (NFRA) உருவாக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையம் கம்பெனிகளின் நிதி அறிக்கைகளைப் பரிசீலித்தல், கணக்குப்பதிவில் தர நிலைகளைப் பரிந்துரைத்தல், தவறு செய்யும் தொழில் நிபுணர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல் போன்ற செயல்களை மேற்கொள்ளும். தொடர்ச்சியாக மற்றும் தானாகவே தரவுகளைப் பரிமாறிக் கொள்வதற்காக நேரடி வரிகள்

விதிப்பு மத்திய வாரியமும் கம்பெனி உறவுகள் அமைச்சமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன. நெறிமுறைப்படுத்தும் நோக்கத்துக்காக PAN-CIN (கார்ப்பரேட் அடையான எண்) மற்றும் PAN-TIN (இயக்குநர் அடையாள எண்) ஆகியன சிக்கலின்றி இனி இணைக்கப்படும்.

நிதிச்சட்டம் 2018 மூலமாக PMLA 2002 சட்டத்தை திருத்துவதற்கான மசோதா ஒன்றை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத்திருத்தம் கார்ப்பரேட் மோசடிகள கம்பெனிகள் சட்டப்பிரிவு 447ன் கீழ் கொண்டு வருவதற்காக முன்மொழியப்பட்டுள்ளது. இவை PMLA-வின் கீழ் அறிவிக்கப்பட்ட மோசடிகளாக எடுத்துக் கொள்ளப்படும். தேவைப்படும் நேர்வுகளில் கம்பெனிகளின் பதிவாளர் PMLAவின் கீழ் நடவடிக்கை எடுத்து அமலாக்க இயக்குநரகத்துக்கு அறிக்கை தரலாம்.

### INSIGHT திட்டம்

வருவாய் மோசடிகளைத் தடுப்பதற்காக அரசு பெருமளவில் தொழில்நுட்ப ஏற்புத் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. யாரும் ஊடுருவ முடியாத தகவல் முறையால் இயங்கும் வரிவிதிப்பு அமைப்புக்காக மேற்கொள்ளப்படும் தரவு மூலம் தகவலைப்பெறவும் மற்றும் வர்த்தகப்பகுப்பாய்வு மூலம் வருவாயைப் பெருக்கவும் இது தொடங்கப்பட்டுள்ளது. CBDT இன்சைட் (INSIGHT) திட்டமானது நம் நாட்டில் தரவுகளில் இருந்து முக்கிய தகவல் முறைகளைத் திரட்டுதல் மற்றும் வர்த்தகப்பகுப்பாய்வு மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் அடிப்படையிலான மிகப் பெரிய திட்டங்களில் ஒன்றாக உள்ளது. இந்தத்திட்டம் 2018-19இல் இருந்து முழுமையாகச் செயல்படும். இந்தத்திட்டத்தின் நோக்கம் வரி செலுத்தாதவர்களைக் கண்டறிவது, அதிகமாகச் செலுத்திய வரியைத் திரும்பப் பெறுவதில் ஏற்படும் மோசடியைத் தடுத்தல், தவறான தகவல் கொடுத்து வரி விலக்குக்கான தொகையைக் கழிப்பதால் ஏற்படும் வருவாய் இழப்பைத்தடுத்தல், தன்னார்வமாக விதிகளை ஏற்று நடக்கவைத்தல் ஆகியவை ஆகும். இன்சைட் திட்டமானது ஏற்கனவே 60 இலட்சம் வரி செலுத்தாதவர்களை அடையாளம் கண்டு ரூ.26,425 கோடிக்கும் மேல் வரிகளை வசூல் செய்துள்ளது.

### பட்ஜெட் 2018-19

இந்த ஆண்டு நேரடிவரிகள் தொடர்பான பட்ஜெட் முன்மொழிவுகள் அரசின் செயல்திட்டமான சுத்தமான பொருளாதாரம் என்பதன் மீது முழுவதுமான மாற்றத்தை ஏற்படுத்தும். நீண்டகால மூலதன ஆதாயத்தைச் சீரமைத்தல், (LTCG) அறக்கட்டளை அமைப்பைத் தவறாகப் பயன்படுத்துவதை சோதித்து அறிதல், கம்பெனிகள் வருமானவரிக்கணக்கைத் தாக்கல் செய்வது கட்டாயமாக்கப்படுதல் ஆகியவற்றை பட்ஜெட்டானது முன்மொழிந்துள்ளது.

### வரி விதிப்புக்கு இணங்கிச் செயல்படுதல்

பட்ஜெட்டில் வரிவிதிப்புக்கு இணங்கிச் செயல்பட சிறப்பு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. தங்களது வருமான வரிக்கணக்கைத் தாக்கல் செய்யாத ஒரு கம்பெனி மீது குற்றவழக்கு நடைமுறைகளை மேற்கொள்ளுதல் தொடர்பான ஷரத்துகளுக்கு நிதிமசோதா திருத்தங்களை முன்வைத்துள்ளது. வரிஏய்ப்பு தொடர்பான குற்றத்துக்கு ஒரு நபரை தண்டிக்க வேண்டுமானால் நடப்பு ஷரத்துகளின்படி அந்த நபர் குறைந்தபட்சம் ரூ.3,000 வரி செலுத்தி இருக்கவேண்டும். ஆனால் ஒரு கம்பெனி வரி செலுத்தி இருக்கிறதோ இல்லையோ அது குறித்து கவலைப்படாமல் அது வருமான வரி கணக்கை கட்டாயமாகத் தாக்கல் செய்தாகவேண்டும். இல்லாவிட்டால் அந்தக் கம்பெனி வழக்கைச் சந்தித்தாக வேண்டும். இந்த ஷரத்து கம்பெனிகள் வரிவிதிப்புக்கு இணங்கி நடப்பதை மேம்படுத்தும். ஷெல் நிறுவனங்கள் காளான்கள் போன்று தோன்றுவதைத் தடுக்கக்கூடிய திறன்மிக்க நடவடிக்கையாக இது இருக்கும்.

### எல்.டி.சி.ஜி-யை செம்மைப்படுத்துதல்

வருமானவரித் துறையின் வரலாற்றில் எல்.டி.சி.ஜில் இருந்து வரிவிலக்கு பெறுவது என்பது மிகவும் துஷ்பிரயோகம் செய்யப்படும் ஷரத்தாகும். எளிதில் விற்க இயலாத விலை குறைவான பங்குகள் மீது (பென்னி பங்கு) முதலீடு செய்வதன் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்கள் போலி எல்.டி.சி.ஜிஇல் வரி விலக்கு கேட்கப்பட்டுவந்தன. அதாவது கறுப்புப்பணத்தின் மீது வருமான வரி விதிக்காமல் ஏமாற்ற இவ்வாறு செய்யப்பட்டது. சில தரகர்கள் உதவியுடன் நம்பகமற்ற எல்.டி.சி.ஜில் தனிநபர்கள் தங்களது கணக்கில் வராத பணத்தைப் போட்டனர். பங்குச்சந்தையில் அத்தகைய பென்னி பங்குகளை வாங்கவும் விற்கவும் இந்த இடைத்தரகர்கள் உதவினார்கள்.

மேலும் தனது பட்ஜெட் உரையில் நிதிஅமைச்சர் LTCGஇல் இருந்து கிடைக்கும் வரிவிலக்கானது தனி ஆட்சியையே உருவாக்கியுள்ளது என்றார். இது உள்ளார்ந்த அடிப்படையிலேயே

உற்பத்திக்கு எதிரான சார்பு உடையதாகும். மேலும் நிதிசார் சொத்துகளில் முதலீடு செய்வதன் மூலம் விலகலையும் ஊக்குவிக்கிறது. பட்டியல் இடப்பட்ட பங்குகள் மற்றும் யூனிட்டுகளில் இருந்து விலக்களிக்கப்பட்ட மூலதன ஆதாயத்தின் மொத்தமதிப்பு சுமார் ரூ.3,67,000 கோடி என நிதிஅமைச்சர் தெரிவித்துள்ளார். 2016-17ஆம் நிதியாண்டுக்குத் தாக்கல் செய்யப்பட்ட வருமானவரி கணக்கின்படி இது தொகுக்கப்பட்டுள்ளது. இந்த ஆதாயத்தின் பெரும்பகுதி பெருநிறுவனங்களுக்கும் LLPsக்களுக்கும் திரண்டு சேர்ந்துள்ளது. வரிசெலுத்துவோர் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அளவில் வரி ஏய்ப்பு நடைபெற இது வழிவகுத்தது. இதன் காரணமாக வருவாய் இழப்பு ஏற்பட்டது. இந்த வரிவிலக்குகளால் உருவாக்கப்பட்ட விலை வேற்றுமை வாணிப வாய்ப்புகளைத் தவறாகப் பயன்படுத்துவதால், பிரச்சனையானது மேலும் சிக்கலானதாக மாறியது.

கடந்த சில ஆண்டுகளில் வருமானவரித் துறை இத்தகைய மோசடி பரிவர்த்தனைகள் மூலம் பலன் அடைந்த தனிநபர்களுடன் தீவிர சச்சரவில் ஈடுபட்டது. முந்தைய நிதித்துறை இணை அமைச்சர் திரு.சந்தோஷ் கங்க்வார் நாடாளுமன்றத்தில் ஒரு முறை இவ்வாறு தெரிவித்தார். வருமானவரித் துறை "சூழ்ச்சியாக வெளிப்படையாகத் திருத்தப்பட்டு உள்ளதாக 140க்கும் அதிகமான தனிப்பட்ட உரிமைச் சான்றிதழ்களை சரிபார்க்க செபிக்குப் பரிந்துரைத்திருந்தது. வருமானவரித் துறை மற்றும் அதன் சொந்த புலனாய்வு அமைப்புகள் மூலம் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில், SEBI அத்தகைய 13 கம்பெனிகளைப் பொறுத்து SEBI சட்டம் 1992 ஷரத்து 11இன் (பி) கீழ் ஆணைகளைப் பிறப்பத்து உள்ளது. 1336 அமைப்புகளின் உரிமைகளை இரத்து செய்துள்ளது.

இந்தப்பங்குகள் பொதுவாக தனியாரைப் பணிஅமர்த்துதல் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. நம்பிக்கை அல்லாத LTCG என்ற தீங்கை அழிக்கும் வகையில் 201718ஆம் ஆண்டு பட்ஜெட்டில் அரசு LTCG இல் இருந்து விலக்கு பெறுவதில் கட்டுப்பாடுகளை விதித்தது. கையகப்படுத்தும் போது பத்திர பரிமாற்ற வரி (STT) செலுத்திய நேர்வுகளுக்கு மட்டும் விலக்கு அளிக்கப்பட்டது. அதிலும் சில குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு விலக்கு தரப்பட்டது. LTCG மீதான வரிவிதிப்பு முறையை செம்மையாக்கும் வகையில், நிதிஅமைச்சர் இந்த ஆண்டின் பட்ஜெட்டில் ரூ.1 இலட்சத்துக்கும் அதிகமாக உள்ள LTCGக்கு 10 சதவிகிதம் என்ற விகிதத்தில் வரி விதிக்க முன்மொழிந்துள்ளார். எந்த ஒரு முறையிலும் வரி கணக்கீட்டு ஏய்ப்பு அனுமதிக்கப்படாது எனவும் கூறியுள்ளார். எனினும் ஜனவரி 31 வரையிலான அனைத்துப் பலன்களும் கிடைக்கும்.

## நேரடி சந்திப்பு தேவை இல்லாத இ-மதிப்பீடு

வெளிப்படையான மற்றும் பொறுப்பான கட்டமைப்பை நோக்கி அரசாங்க அமைப்பில் நிலையான நீடித்த முழுமாற்றம் ஏற்படுத்தவேண்டும் என்றால் அது முடிவு எடுக்கும் முறையை நெறிப்படுத்தாமல் செய்வது சாத்தியம் இல்லை. நல்விளைவு ஏற்படவும் செயல்திறமையுடன் இருந்து வெளிப்படையான மற்றும் பொறுப்பான அமைப்பை உருவாக்குவதில் இ-அரசாள்கை egovernance இப்போது கை கொடுக்கிறது. சேவைகளை வழங்குவதற்கு இஅரசாள்கை உபகரணங்களைப் பயன்படுத்தியதில் வருமானவரித் துறையானது பிற துறைகளை விட முன்னோடித் துறையாக இருந்தது. வருமான வரிக்கணக்கை மின்னணுமுறையில் தாக்கல் செய்தல் (efiling) செலுத்திய பணம் மீண்டும் கிடைக்க வங்கிச்சேவை, இவரிகள் செலுத்துதல், மையப்படுத்தப்பட்ட பரிசீலனை மையம், இமதிப்பீடு போன்ற வருமான வரித்துறையின் திட்டங்கள் வரி செலுத்துவோர் மதிப்பீட்டுக்கு இணங்கி வரிசெலுத்தும் செலவை குறைத்ததோடு வருமான வரித்துறையும் வரி செலுத்துவோர் சிரமப்படாமல் வரி செலுத்துதல் தொடர்பான செயல்களில் ஈடுபடவும் வெளிப்படையான மற்றும் நியாயமாக வரி விதிப்பு நிர்வாகத்தை வழங்கவும் வழிவகை செய்தது.

நிதிஅமைச்சகத்தின் ஆலோசனைக்குழு கூட்டத்தில் பேசும் போது நிதிஅமைச்சர் கடந்த ஆண்டு 97 சதவிகிதம் வருமானவரித் தாக்கல் மின்னணு மூலம் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். இதில் 92 சதவிகித தாக்கீதுகள் 60 நாட்களில் பரிசீலிக்கப்பட்டுள்ளன. அதே போன்று செலுத்தியவரியில் திரும்பத் தர வேண்டிய தொகையானது 90 சதவிகித கேஸ்களில் 60 நாட்களுக்குள் திருப்பித் தரப்பட்டுள்ளன. இது வருமானவரித் துறை பயன்படுத்துகின்ற மின்னணு உபகரணங்களின் வெற்றியை எடுத்துக்காட்டுகிறது.

முன்னோட்டத்தின் அடிப்படையில் இமதிப்பீடு செய்வதை அரசு 2016ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தியது. 2017ஆம் ஆண்டில் இது 102 நகரங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இதன் நோக்கம் என்னவென்றால் வருமானவரித் துறையினரும் வரி செலுத்துவோரும் நேரடியாகச் சந்திக்கவேண்டிய தேவையைக் குறைப்பதே ஆகும். இந்த பட்ஜெட்டில்

நிதிஅமைச்சர் இமதிப்பீடு முறையை நாடு முழுவதற்கும் விரிவுபடுத்தி முன்மொழிந்துள்ளார். வரிவிதிக்கும் நிர்வாகத்தினருக்கும் வரி செலுத்துவோருக்கும் இடையிலான சந்திப்புகளை குறைக்கவேண்டும் என்ற செயல்திட்டத்தில் மேலும் ஒரு படிநிலையாக நிதி அமைச்சர் வருமான வரிச்சட்டம், 1961இல் வரிமதிப்பீடு செய்ய ஒரு புதிய முறையை அறிமுகப்படுத்தும் வகையில் திருத்தங்களை முன்மொழிந்துள்ளார். அதாவது இந்தப் புதிய முறையில் வரிமதிப்பீடானது மின்னணுமுறையில் மேற்கொள்ளப்படும். இது ஏறத்தாழ நபர்கள் நேருக்கு நேர் சந்திப்பதை அவசியம் இல்லாமல் செய்துவிடும். இதனால் அதிகஅளவில் செயல்திறமையும் வெளிப்படைத் தன்மையும் இருக்கும்.

முன்மொழியப்பட்டுள்ள சந்திப்பு இல்லாத வரிமதிப்பீட்டு செயல்முறையின் முழு வடிவம் இன்னமும் வெளிப்படுத்தப்படவில்லை. எனினும் நிதிமசோதா இந்தப் புதிய முன்மாதிரி நடவடிக்கையின் முக்கிய அம்சங்களைக் கூறியுள்ளது. இந்தத் திட்டத்துக்கு தொழில்நுட்பம்தான் உந்துதலாக உள்ளது. வரிமதிப்பீடு செய்யும் அலுவலரும் மதிப்பீடு செய்யப்படும் நபரும் சந்தித்துப் பேச வேண்டியதை குறைத்தல் / இல்லாமல் செய்தல் என்ற நோக்கத்துடன் இது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பொருளாதார அளவுநிரையின் வழியாக மூலவளங்கள் சரியான அளவில் பயன்படுத்தப்படவும் இந்தத்திட்டமானது உதவும். இங்கிலாந்து போன்ற பல வெளிநாடுகளில் வரிநிர்வாகம் வரி செலுத்துவோருடன் நேரடி சந்திப்பு இல்லாத முறையிலேயே நடைபெறுகிறது. கவனமாக ஆய்வு செய்வதற்கான விசாரணைகள் பல்வேறு குழுக்கள் தொலைதூரமான இடங்களில் மதிப்பீடு செய்யப்படுபவருடன் நேரடி உறவு இல்லாமலேயே செய்யப்படுகின்றன. முகம் தெரியாத வரிசெலுத்துபவருடனான உறவானது வரிசெலுத்துவோர் வருமான வரித்துறை மீது கொள்ளும் நம்பிக்கையை அதிகரிக்கிறது. அதே சமயம் கவனமாக ஆய்வு செய்யும் முறைக்கு எதிராக வரிசெலுத்துவோர் கூறும் புகார்களும் தீர்க்கப்படக்கூடும்.

## அறக்கட்டளை அமைப்பைத் தவறாகப் பயன்படுத்துவதைத் தடுத்தல்

இந்தியாவின் தலைமைக் கணக்கு தணிக்கை அதிகாரி (CAG) ஜூலை 2016 முதல் நவம்பர் 2016 வரை தனியார் சுகாதாரப்பிரிவினரின் கணக்குகளை 2012 - 2013 முதல் 2015 - 2016 வரையான காலகட்டத்துக்கு மதிப்பீடு செய்தார். அறக்கட்டளைகள் வரிவிலக்குகளைத் தவறாகப்பயன்படுத்தியது இந்த மதிப்பீட்டில் இருந்து தெரியவந்தது. தற்போதைய வரிவிதிப்பு முறையில், அறக்கட்டளைகள் மற்றும் மற்ற அறக்கட்டளை நிறுவனங்களின் வருமானத்துக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்கள் முன்பே தெரிவித்த தங்களது நோக்கத்துக்காக வருமானத்தைப் பயன்படுத்துவதாக இருந்தால் அந்த வருமானத்துக்கு வரிவிலக்கு உண்டு.

கடந்த ஆண்டு பட்ஜெட்டில் தொண்டு நிறுவனங்கள் பெறக்கூடிய நன்கொடைகளின் உச்சவரம்பு ரூ.10,000இல் இருந்து ரூ.2,000ஆகக் குறைக்கப்பட்டது. ஆனால் அறக்கட்டளைகள் மற்றும் அது போன்ற அமைப்புகள் மேற்கொள்ளும் பண செலவினத்துக்கு கட்டுப்பாடு ஏதும் இல்லை. இந்த ஷரத்து அறக்கட்டளைகளில் இருந்து பணமாக செலவிடுவது என்ற முறையில் பணம் காலியாக்கப்படுகிறது. பண செலவினத்துக்கு தணிக்கை செய்வது சிரமமானது ஆகும். பணப் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தவும் அறக்கட்டளைகள் நிதியைத் தவறாகப் பயன்படுத்துவதைப் பரிசீலிக்கவும் இந்த ஆண்டு பட்ஜெட் ரூ.10,000க்கு அதிகமாக பணம் செலுத்தப்பட்டால் அது ஏற்றுக்கொள்ளப்படாது எனவும் மாறாக அந்தத் தொகையானது வரிவிதிப்புக்கு உட்படுத்தப்படும் எனவும் அறிவித்துள்ளது. இத்தகைய அமைப்புகள் TDS முறையை ஏற்றுச்செயல்படுவதை மேம்படுத்தும் வகையில், TDS பிடிக்கப்படாவிட்டால், தொகையில் 30 சதவிகிதம் ஏற்றுக்கொள்ளப்படாது என பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சதவிகிதத் தொகை வரிவிதிப்புக்கு உட்படுத்தப்படும்.

அரசு சாராத பல தொண்டு நிறுவனங்கள் (NGO) பான் எண் வைத்திருக்கவில்லை. அது மட்டுமின்றி அத்தகைய தொண்டு நிறுவனங்களின் நிர்வாகிகளும் பான் எண் வைத்திருக்கவில்லை. அதனால், அவர்களது வருமானம் மற்றும் செலவினம் குறித்த தணிக்கையை வருமானவரித் துறையால் மேற்கொள்ள முடிவதில்லை. தனிநபராக இல்லாத எந்த ஒரு அமைப்பும் ஒரு நிதி ஆண்டில் கூட்டுமொத்தமாக ரூ.2.50 இலட்சம் தொகைக்கு மேல் நிதி பரிவர்த்தனை மேற்கொண்டால், கட்டாயம் பான் எண் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டும் என பட்ஜெட்டில் முன்மொழியப்பட்டுள்ளது. இது இத்தகைய நிறுவனங்களை வருமானவரி ஏய்ப்புக்குள் கொண்டுவரும். மேலும் அத்தகைய நிறுவனங்களின் இயக்குநர்கள், பங்குதாரர்கள், முதன்மை அதிகாரிகள், அலுவலக நிர்வாகிகள், நிறுவனத்தின்

சார்பாக செயல்பட அதிகாரம் அளிக்கப்பட்டவர்கள் என அனைவரும் பான் எண் பெறுவதற்கு விண்ணப்பிக்கவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

## நெடுந்தூரம் செல்லவேண்டும்

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் மாண்புமிகு பிரதம மந்திரியின் அறிவிப்புக்கு ஏற்ப ஆறு உறுப்பினர் பணிக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக்குழுவுக்கு CBDT உறுப்பினர் ஒருங்கிணைப்பாளராக இருப்பார். முதன்மை பொருளாதார ஆலோசகர் நிரந்தர அழைப்பாளராக இருப்பார். வருமான வரிச்சட்டம் 1961ஐ மீளாய்வு செய்யவும் நாட்டின் பொருளாதார தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு நாடுகளில் நடைமுறையில் உள்ள நேரடி வரிவிதிப்பு அமைப்புக்கு ஏற்ப, மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுக்கு இசைவானதாக புதிய நேரடி வரிச் சட்டத்தை வடிவமைக்கவும் இந்தக்குழு உருவாக்கப்பட்டுள்ளது. பல்துறை நிபுணர்கள் அடங்கிய இந்தக்குழுவானது ஆறு மாதங்களுக்குள் தங்களது அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

கறுப்புப்பணத்துக்கு எதிரான அதிரடி நடவடிக்கைகள் நீடித்த போராக முழுமாற்றம் பெறவேண்டும். இந்தப் போர் பல ஆண்டுகளுக்குத் தொடரவேண்டும். நேர்மையான பணத்துக்கான (swacch dhan) சூழல் அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற இலக்கு கொண்ட அரசின் அணுகுமுறையால் இந்த முழு மாற்றம் ஏற்படவேண்டும். இது நம்மை நேர்மையைக் கொண்டாடச் செய்யும் (imandari ka utsav). மனிதவள மேம்பாட்டுக்கு தகவல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதை அதிகரித்தல் மற்றும் அதிக மூலவளங்களை ஒதுக்கீடு செய்தல் (இன்று இருப்பதை விட கூடுதலாக) ஆகியன கறுப்புப்பணத்துக்கு எதிரான போரில் வருமான வரித்துறை நீடித்த வெற்றி பெறத் தேவையான முக்கியமான அம்சங்கள் ஆகும்.

- **ரமேஷ் கேஆர் யாதவ்,** புதுதில்லி வருமானவரித் துறை அலுவலகத்தில் முதன்மை இயக்குநர். (புலனாய்வு).

- **ரோஹித் தியோ ஜா** புதுதில்லியில் உள்ள வருமானவரித்துறை அலுவலகத்தில் உதவி இயக்குநர் (புலனாய்வு). ●

**FORM IV**

Statement about Ownership and other particulars about **Yojana (Thittam) (Ta, be published in the first issue every year after the last day of February)**

| | | |
|---|---|---|
| 1. | Placeof Publication | : Chennai |
| 2. | Periodicity of Publication | : Monthly |
| 3. | Printer's Name | : Dr. Sadhana Rout |
| 4. | Nationality | : Indian |
| | Address | : Publications Division, Soochna Bhavan, New Delhi - 110 003. |
| 5. | Publisher's Name | : Dr. Sadhana Rout |
| | Nationality | : Indian |
| | Address | : Publications Division, Soochna Bhavan, New Delhi - 110 003. |
| 6. | Editor's Name | : Sanjay Ghosh |
| | Nationality | : Indian |
| | Address | : Publications Division, A-Wing, F&G Block, Rajaji Bhavan, Besant Nagar, Chennai - 600090 |
| 7. | Name & Address of Individual who own the newspaper and Partner or shareholder holding more than one Percent of the total capital. | : Wholly owned by Ministry of Information & Broadcasting, Government of India, New Delhi - 110 001. |

**I, Sadhana Rout,** hereby declare that the particular given above are true to the best of my Knowledge and belief.

Dated:

**(Dr.Sadhana Rout)**
Signature of Publisher

**உங்களுக்குத் தெரியுமா?**

# தங்கத்தைப் பணமாக்கும் திட்டம்

மத்திய பட்ஜெட் 2018-19 உரையில் நிதிஅமைச்சர் விலைமதிப்புடைய தங்கத்தை ஒருசொத்துவகையாகக்கருதி அதனை வளர்த்தெடுக்க அதற்கென ஒருங்கிணைந்த ஒருகொள்கையை அரசாங்கம் வகுக்க இருப்பதாகத் தெரிவித்தார். தங்கத்தைப் பணமாக்கும் திட்டம் எந்தவித தொந்தரவுக்கும் ஆளாகாமல் தங்கமுதலீட்டை மக்கள் செய்வதற்கேற்ப சீர்திருத்தி அமைக்கப்படும். நுகர்வோருக்கு இணக்கமான வகையில் தங்கப்பரிமாற்றங்கள் திறம்பட செய்யப்படும் வணிகமுறையை அரசாங்கம் கொண்டுவரப்போவதாக அவர் கூறினார். தங்கப்பரிமாற்றம் என்பது தங்கத்தை தொழில்ரீதியாகவும், வெளிப்படைத்தன்மையுடனும் நிர்வகிக்கும் சர்வதேச அணுகுமுறையாகும். இந்தத்தொழில்துறை தங்கவணிகத்தில் இடைத்தரகர்களை நீக்கிவிட்டு, மிகவும் முதிர்ச்சியுடையதாகவும், மின்னியல் முறையில் கையாளப்படுவதாகவும் மாற்றுவதற்கு நிச்சயம் இது உதவும். கிராமப்புறத்தில் இருக்கும் வணிகரும், எளிதில் சாத்தியமாகக்கூடிய வகையில் தங்கத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும். இந்தியாவின் தங்கநுகர்வில் 65 விழுக்காடு கிராமப்புறங்களில் செய்யப்படுகிறது. இடைத்தரகர்கள் இதுவரை ஏராளமான எண்ணிக்கையில் கணக்கில் வராத பணப்பரிவர்த்தனைகளை செய்துவந்துள்ளனர். இதுபோல் இனி செய்யஇயலாது.

தங்கத்தைப் பணமாக்கும் திட்டம் மத்தியஅரசாங்கத்தின் 2015-16 நிதிநிலை அறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியக்குடும்பங்களில் சேகரித்துவைக்கப்பட்டிருக்கும் தங்கத்தைப்பாதுகாப்பதும், அதேசமயத்தில் அவற்றை ஆக்கவளம்கொண்டவையாக மாற்றுவதும் இதன்நோக்கம். உள்நாட்டில் தங்கத்தின் தேவையை மட்டுப்படுத்தி தேசத்தில் தங்கத்தின் இறக்குமதியைக் குறைப்பது பரந்தநோக்கமாகும். சீனாவுக்கு அடுத்தநிலையில் தங்கத்தை அதிகமாகப் பயன்படுத்தும் ஒருதேசம் இந்தியாவாகும்.

தங்கத்தைப் பணமாக்கும் திட்டம் தங்களிடம் இருக்கும் தங்கத்தை முதலீடு செய்யக்கூடியவர்களுக்கு வட்டிவருவாய் கிடைக்கவழிசெய்கிறது. தங்கத்தை உலோகக்கணக்கில் முதலீடுசெய்தவுடன் அதுவட்டியை சம்பாதிக்க ஆரம்பித்துவிடுகிறது.

**தங்கத்தைப் பணமாக்கும் திட்டத்தின் சிறப்பம்சங்கள் வருமாறு:**

**தங்கத்தை எளிதாக சேமித்துவைத்தல்:**

திட்டம் முதிர்வடையும்போது தங்கமாகவோ, தங்கத்தின் மதிப்பிற்கு ஏற்றதொகையாகவோ பெற்றுக்கொள்ளலாம். பாரம்பரியமாக இந்தியக்குடும்பங்கள் தங்கத்தை வாங்கி லாக்கர்களில் வைத்துக்கொள்கின்றன. லாக்கர் சேவைக்காக வங்கிகளுக்கு ஆண்டுக் கட்டணத்தையும் செலுத்துகின்றனர். இப்படி வைத்துள்ள தங்கத்தை திருமணங்களின்போது அணிந்துகொள்வதற்காகவோ அல்லது விற்பனை செய்வதற்காகவோதான் லாக்கரிலிருந்து வெளியில் எடுக்கின்றனர்.

**பயனற்றுக்கிடக்கும் தங்கதிற்குபயன்பாடு:**

பழைய தங்கமும், பயன்படுத்தப்பட்ட தங்கமும் வீட்டிலேயோ, வங்கிலாக்கரிலேயோ அடைந்து கிடக்கின்றன. தங்கம் இப்படி பயனற்று இருந்துவிடுகிறது. தங்கத்தை விற்பனை செய்யும்போது பணம் உடனடியாகக் கிடைக்கிறது. தங்கத்தைப் பணமாக்கும் திட்டம் வட்டி வழங்குவதுடன் முதிர்வுகாலத்தில் தங்கம் வேண்டாமென்றால் அன்றைய சந்தைவிலையில் பணத்தையும் தருகிறது.

**முதலீட்டு நெகிழ்வுத்தன்மை:**

நகைகள், ஆபரணங்கள், காசுகள், கட்டிகள் ஆகிய எந்தவடிவிலும் தங்கத்தை முதலீடு செய்யலாம். கல்பதித்த நகைகளை முதலீடு செய்யமுடியாது.

**அளவில்நெகிழ்ச்சி:**

தங்கத்தின் தூய்மைஅளவு எதுவாக இருப்பினும் பரவாயில்லை. குறைந்தபட்சம் 30 கிராம் முதல் அதிகபட்சஎல்லை ஏதுமின்றி தங்கத்தை முதலீடுசெய்யலாம்.

**வசதியானகாலஅளவுகள்:**

இந்தத்திட்டதின்கீழ் மூன்றுகாலஅளவுகளில் முதலீடு செய்யமுடியும். குறைந்தபட்ச காலஅளவு 1 முதல் 3 ஆண்டுகள். காலக்கெடு முடியும் முன்பாகவே முடித்துக்கொள்ளப்படும் கணக்குகளுக்கு பெயரளவிலான அபராதம் விதிக்கப்படும்.

**கவர்ச்சிகரமான வட்டிவிகிதங்கள்:**

வைப்புசெய்யப்படும் காலஅளவிற்கேற்ப 0.5 முதல் 2.5% வரை வட்டி வழங்கப்படும். குறுகியகால முதலீடுகளுக்கான வட்டி, வங்கிகளால் தீர்மானிக்கப்படும். நடுத்தர, நீண்டகால முதலீடுகளுக்கு வட்டியை மத்தியஅரசாங்கம் தீர்மானிக்கும்.

**வட்டியைக் கணக்கிடுவதில் விதவிதமான முறைகள்:**

குறுகியகால தங்கமுதலீடுகளுக்கு வட்டிப்பணமாகத் தரப்படமாட்டாது. தங்கத்தில் கிராம்களாகத் தரப்படும். ஆண்டுக்கு 1% வட்டி என்று வைத்துக்கொண்டால் 100கிராம் தங்கத்தை முதலீடுசெய்பவருக்கு ஒருஆண்டுமுடிவில் 1 கிராம் தங்கம் வட்டியாகக் கிடைக்கும். நடுத்தர, நீண்டகால முதலீடுகளுக்கு முதலீடு செய்யப்பட்ட காலத்தில் இருந்த தங்கத்தின் மதிப்பிற்கேற்ப வட்டிகணக்கிடப்பட்டு பணமாகஅளிக்கப்படும்.

**தூய்மையைசரிபார்த்தல்:**

நாடு முழுவதும் 330க்கும் அதிகமான தூய்மைப் பரிசோதனை மையங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்தமையங்களில் உங்களது தங்கம் பெற்றுக்கொள்ளப்பட்டு அதன் அளவைக் குறிப்பிட்டு இரசீது தரப்படும். இதனை வங்கிகளில் முதலீடு செய்யும்போது அதற்கான சான்றிதழ் வங்கியால் வழங்கப்படும்.

**வரிஆதாயங்கள்:**

இந்த முதலீட்டின் மூலம் கிடைக்கும் இலாபத்திற்கு மூலதன ஆதாயவரி செலுத்த வேண்டியதில்லை. மூலதன ஆதாயத்தின் மீது சொத்துவரியிலிருந்தும், வருமானவரியிலிருந்தும் விலக்குஅளிக்கப்படும்.




# பொருளாதாரச்சுற்றாய்வு: துறைவாரியாக முன்னேற்றம்

இந்தியாவின் ஒட்டுமொத்த மதிப்புக் கணக்கீட்டில் (GVA) 55.2% பங்குடன் சேவைத்துறை இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியை இயக்குவிக்கும் முக்கியமான ஒன்றாக தொடர்ந்து இருந்துவருகிறது. பொருளாதாரச் சுற்றாய்வு 2017-18இல் குறிப்பிடப்பட்டிருப்பதைபோல 2017-18இல் GVA வளர்ச்சிக்கு இத்துறை பங்களித்துள்ளது. சேவைத்துறையின் வளர்ச்சி 2017-18இல் 8.3 விழுக்காடாக இருக்கும். சேவை ஏற்றுமதி 16.2% ஆக இருக்கும். சேவைத்துறைகளின் செயல்திறன், இந்தத்துறையின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கு அரசாங்கத்தின் அண்மைக்காலக் கொள்கைகள் பற்றி பிரிவு வாரியாகக் காணலாம்:

**சுற்றுலா:**

இந்தியாவின் சுற்றுலாத்துறை மிகச்சிறப்பாகச் செயலாற்றிவருகிறது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை (FTAs) 9.7% அதிகரித்து 8.8 மில்லியன் மக்களை ஈர்த்துள்ளது. அந்நிய செலாவணி சம்பாத்தியம் (FEEs) 8.8% அதிகரித்து 22.9 பில்லியன் அமெரிக்க டாலராக 2016ஆம் ஆண்டில் இருந்தது. 2017இல் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை (FTAs) 10.2 மில்லியன். இது 15.6% வளர்ச்சியாகும். அந்நியசெலாவணி சம்பாத்தியம் 27.7 பில்லியன் அமெரிக்க டாலர். 2016ஆம் ஆண்டைக்காட்டிலும் இதன் வளர்ச்சி விகிதம் 20.8% அதிகம்.

உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 2016ஆம் ஆண்டில் 12.7% அதிகரித்து 1614 மில்லியனாக இருந்தது. 2015இல் இது 1432 மில்லியன். தமிழ்நாடு, உத்திரப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம், மத்தியபிரதேசம், கர்நாடகா ஆகிய ஐந்து மாநிலங்களும் சுற்றுலாப் பயணிகள் அதிகம் விரும்பிய மாநிலங்களாகும்.

**இந்தியாவின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிக நடைமுறை நிர்வாகத்தொழில்கள் (IT-BPM)**

இந்தியாவின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வணிக நடைமுறை நிர்வாகத்தொழில்கள் (IT-BPM) 201617இல் 8.1% அதிகரித்து 139.9 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ளதாக இருந்தன. (மின்னணு வணிகம், வன்பொருள் தவிர்த்து). இது NASSCOM தரவுத் தகவல்களின்படி 2015-16இல் 129.4 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. இதே காலகட்டத்தில் தகவல் தொழில்நுட்பம், வணிக நடைமுறை நிர்வாகம் (IT-BPM) ஆகியவற்றில் ஏற்றுமதி 107.8 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 116.1 பில்லியன் அமெரிக்க டாலராக 7.6% அதிகரித்தது. மின்னணு வணிகச்சந்தை (e commerce market) 33 பில்லியன் அமெரிக்க டாலராக மதிப்பிடப்பட்டிருந்தது.

**ரியல் எஸ்டேட்:**

மனை, வீடு விற்பனைப்பிரிவு வளர்ச்சிக்கான அடையாளங்களைக் காட்ட ஆரம்பித்தது. 2017இல் அந்நிய நேரடி மூலதனம் (FDI) 257 மில்லியன் அமெரிக்க டாலர். 2016ஆம் ஆண்டைகாட்டிலும் இது இருமடங்கு அதிகம்.

**ரியல் எஸ்டேட் துறையில் அண்மையில் அரசாங்கம் எடுத்திருக்கும் சில சீர்திருத்தங்களும், கொள்கைகளும்:**

**ஆராய்ச்சி மேம்பாடு (R&D):**

தொழில் ரீதியான அறிவியல், தொழில்நுட்ப செயல்பாடுகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (R&D) சேவைகளும் அடங்கும். இது 2014-15இல் 4.1 விழுக்காடும், 2015-16இல் 17.5 விழுக்காடும் அதிகரித்தது. இந்திய நிறுவனங்கள் உலகச்சந்தையில் ஆராய்ச்சி மேம்பாட்டிற்கு (R&D) 22 விழுக்காடு பங்களிப்பைச் செய்கின்றன.

ஆயினும் ஆராய்ச்சி மேம்பாட்டிற்கு (R&D) இந்தியா செலவழிப்பது ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 1 விழுக்காடு மட்டுமே. உலகளாவிய புதுமை முயற்சிக் குறியீட்டில் (GII) 127 புள்ளிகளில் இந்தியா 60ஆவது இடத்தில் உள்ளது.

**விண்வெளி:**

செயற்கைக்கோள்களை செலுத்துவதில் மார்ச் 2017 நிலவரப்படி இந்தியா 254 துருவ செயற்கைக் கோள்கைகளை விண்வெளியில் செலுத்தியுள்ளது.

செயற்கைக்கோள் ஏவுதல் சேவைகள் ஏற்றுமதி மூலம் கிடைத்துள்ள அந்நிய செலாவணி சம்பாத்தியம் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. 2014-15இல் இந்தியாவின் அந்நியசெலாவணி சம்பாத்தியம் ரூ. 149 கோடி. 2015-16இல் இது ரூ. 275 கோடி. 2016-17இல் ரூ. 394 கோடி.

உலகளாவிய செயற்கைக்கோள் ஏவுதல் சேவை வருவாயில் இந்தியாவின் பங்கு 2014-15இல் இருந்த 0.3 விழுக்காட்டில் இருந்து 2015-16 இல் 1.1 விழுக்காடாக அதிகரித்தது. சர்வதேச சமூகங்கள் PSLV, GSLV, GSLVMk-III ஆகிய குறைந்த தொலைவு புவி சுற்றுப்பாதை செயற்கைக்கோள்களை (LEO) ஏவுவதற்கு இந்தியாவின் சேவைகளை அதிகம் பயன்படுத்திக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெண் குழந்தைகளுக்கான திட்டங்கள் சரியான திசையில் காலடி எடுத்துவைத்து வருகின்றன பொருளாதாரச் சுற்றாய்வு

இளஞ்சிவப்பு நிறப்பொருளாதார சுற்றாய்வுப் புத்தகம் 2017-18 நாடாளுமன்றத்தில் ஜனவரி 29,2018 அன்று வைக்கப்பட்டது. இதில் மத்திய நிதிஅமைச்சர் பாலினம் மற்றும் ஆண் மகவுக்கான முன்னுரிமைப்போக்கு ஆகியவற்றின் மீது சிறப்பாக கவனம் செலுத்தி இருந்தார். மற்ற நாடுகளோடு ஒப்பிட்டு பாலின சமத்துவத்தில் இந்தியாவின் செயல்பாடை அளவிட்டிருந்தார்.

பாலின சமத்துவம் என்பது பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது என்பதை இந்த ஆய்வுக் கணக்கில் கொண்டிருக்கிறது. இதன்படி, செயலாண்மை (குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளுதல், தங்களுக்காக செலவழித்தல், தங்கள் குடும்பத்திற்காக செலவழித்தல், தங்களின் இயக்கத்திற்காகவும், சுகாதரத்திற்காகவும் செலவழித்தல் ஆகியவை பற்றி முடிவெடுப்பதில் பெண்களுக்கு உள்ள திறமையோடு தொடர்புடையது), மனப்பாண்மை (பெண்கள்/மனைவியருக்கு எதிரான வன்முறை பற்றிய மனப்பாங்கு, ஆண்குழந்தைகளைப் போலவே பெண் குழந்தைகளையும் பெற்றுக்கொள்வதில் விருப்பம் கொன்டுள்ள பாங்குடன் தொடர்புடையது).

வெளிப்பாடுகள் (கடைசியாகப் பிறந்துள்ள குழந்தையோடு ஒப்பிட்டு பாலின விகிதத்தை அளவிடுதல், பெண்கள் வேலைக்குச் செல்லுதல், கருத்தடையில் பெண்ணுக்கு உள்ள உரிமை, கல்வி அளவு, திருமணத்தின் போது வயது, முதல் குழந்தை பிறந்தபோது வயது, பெண்கள் அனுபவிக்கும் உடல் சார்ந்த வன்முறை, பாலியல் வன்முறை ஆகியவற்றோடு தொடர்புடையது) ஆகிய இவை பெண்களின் நிலை, பங்கு, அதிகாரம் ஆகியவற்றை பிரதிபலிக்கும்.

பெண்களின் பாலின சவால்களாகக் பொருளாதாரச் சுற்றாய்வு 2017-18 குறிப்பிட்டிருப்பனவற்றைத் தீர்ப்பதில் அனைவருக்கும் உள்ள கூட்டுப் பொறுப்பு பற்றி பேசுகிறது.

சமுதாய முன்னுரிமை, ஆண்குழந்தைக்கு முன்னுரிமை போன்ற வளர்ச்சியைத் த்டுப்பதாகத் தோன்றும் செயல்களை இந்தியா எதிர்கொள்வதற்குத் தகுந்தபரிந்துரைகளை இந்தச் சுற்றாய்வு தந்துள்ளது. ஆடவர்களுக்கு சாதகமான நிலையில் சரிந்திருக்கும் பாலின விகிதம் ‘‘காணாமல் போன’’ பெண்களை அடையாளம் கண்டறிவதை நோக்கி இட்டுச்செல்கிறது. 21 மில்லியன் பெண் குழந்தைகளை வேண்டாதவைகளாக கருதும் சிந்தனைக்கு ஆட்படும் சூழலுக்கு இவை இட்டுச்சென்றுள்ளன என்று இந்தச் சுற்றாய்வு தெரிவிக்கிறது. இத்தகைய வெறுக்கத்தக்க இழிசெயல்களை வரலாற்றிடம் கையளித்துவிடுவது சமுதாயத்தின் நோக்கமாக இருக்கவேண்டும் என்கிறது இந்த ஆய்வு. பெண் குழந்தைகளைக் காப்பாற்றுவோம், பெண் குழந்தைகளைப்படிக்கவைப்போம்; செல்வமகள் சேமிப்புத்திட்டம்; மகப்பேறு கால கட்டாய விடுமுறை போன்ற அரசின் திட்டங்கள் அனைத்தும் சரியான திசை நோக்கி எடுத்துவைக்கப்பட்டிருக்கும் சிறப்பான அடிகள் என்று இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

எளிதாகத் தொழில் செய்வதில் இந்தியா பல படிகள் முன்னேறுவதற்கு சூளுரைத்து செயல்படுகிறது. இதைப்போலவே பாலின சமத்துவத்தை அடைவதிலும் அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சிகள் செய்யப்படவேண்டும்.